ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சாமா

சுடர் 2 ஏப்ரல்-1939 கதிர் 9

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
திரிபுரி காங்கிரஸ் தலைவர்	படம்	11
ருமேனியாவுக்குச் சாவுமணியா?	தே. ஏகாம்பரம்	12
மெமேல் எங்கே இருக்கிறது?	—	15
திரிபுரி காங்கிரஸ்	—	17
தமிழ் நாடும் திரைப்படமும்	"வடசை வாசகன்"	33
புராதன இந்தியாவில் போக்கு வரவு சாதனங்கள்	வி. எம். நாகேசுவர சாஸ்திரி	35
ஜெக்கோ ஸ்லோவேகியாவின் இன்றைய பொருளாதார நிலை	வா.	39
சியாங்-கை-ஷேக்கின் ஒரு நாள் வாழ்க்கை	ப. ம. வி.	42
திருக்குறளின் அமைப்பு	வ. மு.	46

ஞானக் களஞ்சியம்	ரா. ஸ்ரீனிவாசன்	49
நல்ல புத்தி	எஸ். கிருஷ்ணன்	51
ஜெர்மனியின் நோக்கமென்ன ?	—	57
பண்டித மதன் மோகன மாளவியா	"ஒரு காங்கிரஸ் வாதி"	66
விபரீத ஆசை	"புதுமைப் பித்தன்"	69
மனோ தர்மம்	வெ. சா.	73
கைம்பெண்	வித்வான் எஸ். உமைதாணு பிள்ளை	80
அலை வடிவாய் அசைதல் என்றால் என்ன ?	"விஞ்ஞான போதகர்"	81
இந்தியாவிலிருந்து அரிசி எவ்வளவு ஏற்றுமதியாகிறது ?	—	88
நமது நிருபர்களுடன்	—	89
உலக வல்லரசுகளின் படைபலம்	—	90
ஓங்கிக் கொட்டு பேரிகை	மு. தங்கமணிப் பிள்ளை	91
சுதந்திர மொழிகள்	—	93
அன்றாட உலகம்	—	94

ஜோதி
ஏப்ரல் 1939

ஜோதி

சுடர் 2 ஏப்ரல்-1939 கதிர் 9

திரிபுரி

திரிபுரிகாங்கிரஸ் ஒருவாறு முடிந்தது. ஆம்; ஒருவாறு முடிந்தது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, வெற்றிகரமாக முடிந்தது என்று எம்மால் சொல்ல முடியவில்லை. வெற்றியானது, போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள ஒரு சாராருக்கு ஏதோ ஒருவித சாதகத்தையாவது அளிப்பதாயிருக்க வேண்டும். ஆனால் திரிபுரி காங்கிரஸ் சுதந்திரப் போராட்டத்தில் இறங்கியிருக்கும் தேசிய இந்தியாவுக்கு எவ்வித சாதகத்தையும் செய்து கொடுக்கவில்லை. உதவியையும் புரியவில்லை; வழியையும் காட்டவில்லை. இதுதான் நமது அபிப்பிராயம். இப்படி நாம் அபிப்பிராயங்கொள்வது, சிலருக்கு-ஏன்? பலருக்குக் கூட—சிறிது கடுமையாகத் தோன்றலாம். ஆனால் உலக திருஷ்டியில், திரிபுரி காங்கிரஸ் நடவடிக்கைகளைச் சிறிது கவனித்துப் பார்த்தோமானால், சிறுபிள்ளைகள் கண் மூடி கண் திறந்து விளையாடுகிற 'கண் பொத்தி' விளையாட்டைப் போலவே தோன்றும்.

அரசியலை, நமது அன்றாட வாழ்விலே கலந்த ஓர் அமிசமாக இன்னும் நாம் கொள்ளவில்லை; சுதந்திர தாகம் நமக்கு இன்னும் தீவிரமாக ஏற்படவில்லை; இப்பொழுதுள்ள வீட்டை-அது நமது வாசத்திற்கு எவ்வளவு லாயக்கில்லாததாயிருந்த போதிலும்—அதிலுள்ள பொத்தைபொள்ளல்களை அடைத்துச் சீர்திருத்தத்தான் பார்க்கிறோமே தவிர, அதனை இடித்துப் புதியதொரு வீட்டைக் கட்டவேண்டும் என்ற மனப்பான்மை இன்னும் நமக்கு ஏற்படவில்லை. உலகக் கண்ணாடி போட்டுக் கொண்டு, திரிபுரி காங்கிரஸை நோக்குகிற போது, இந்த மாதிரியான எண்ணங்கள்தான் நமக்குத்தோன்றுகின்றன.

தவிர, தேசிய வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் நம்மிலே பலருக்கு காந்தி என்ற பெயரிலும், காங்கிரஸ் என்ற பெயரிலும் ஒரு பிரமை இருக்கிறது. இந்த பிரமை இருக்க வேண்டியதுதான். தன்னைப் பின்பற்றுகிற கோஷ்டியினரிடத்தில் இத்தகைய பிரமை இருக்க வேண்டுமென்றுதான் ஒவ்வொரு நாட்டுத்தலைவனும் எதிர் பார்ப்பான். அப்பொ

ழுதே, அவன் எடுத்துக் கொண்ட காரியத்தைச் சாதிக்கலாம். ஆனால் வெறும் பெயர்களிலே மட்டும் பிரமை இருந்தால் போதுமா? அந்தப் பெயர்களின் உட் பொருளாக இருக்கும் தத்துவத்தை அறிந்துகொள்ள வேண்டாமா? தேங்காய் ஓட்டின் மேற் மேற்புறத்தை மட்டும் புரட்டிப் புரட்டிப் பார்த்து 'ஆ! ஆ! இந்தத் தேங்காய் எவ்வளவு பருமனுடையதாயிருக்கிறது!' என்று தன்னை மறந்து சொல்லிக் கொண்டிருப்பதின் பயன் தானென்ன? அதிலுள்ள தேங்காய் அழுகிப் போகாமல் இருக்கிறதா, சுவையாயிருக்குமா, அது நமது உணவுக்கு ஏற்குமா, என்றெல்லாம் பார்க்க வேண்டாமா? நாம், இன்னும் தேங்காய் ஓட்டின் மேற்பாகத்தைக் கண்டு தான் பிரமிப்படைந்து கொண்டிருக்கிறோம். அதின் உட்சாரத்தை இன்னும் சுவைக்கவில்லை. அப்படிச் சுவைக்க வேண்டுமென்ற ஆசை கூட நமக்கு இல்லை. அந்த ஆசை நமக்கு இருந்தால், திரிபுரி காங்கிரஸ் நடவடிக்கைகள் வேறு விதமாக இருந்திருக்கும். 'ராஜீநாமா செய்த காரியக் கமிட்டி அங்கத்தினர்களிடத்தில், இந்தக் காங்கிரஸுக்கு நம்பிக்கையிருக்கிறது' என்ற அர்த்தமில்லாத் தீர்மானத்தின்மீது பல மணி நேரம் வாதம் நடைபெற்றிராது.

சர்வதேச நிலைமையானது இப்பொழுது மின்சார வேகத்தில் மாறிக் கொண்டு வருகிறது. சட்டரீதியாக யுத்தந் தொடுப்பதாக அறிவித்து, ஒரு நாட்டை மற்றொரு நாடு வெற்றி கொள்வது போய், யுத்தந் தொடுக்காமலே யுத்தஞ் செய்து ஒரு நாட்டை மற்றொரு நாடு கபளீகரித்துக் கொள்ளும் நிலைமை ஏற்பட்டது. இப்பொழுது இந்த நிலைமை கூட மாறி, முன்னெச்சரிக்கை என்ற பேச்சும், யுத்தம் என்ற மூச்சும்கூட இல்லாமல் ஒரு நாட்டை மற்றொரு நாடு விழுங்கிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேற்று வரை சுதந்திர மூச்சை விட்டுக் கொண்டிருந்த நாடுகள், அவை கனவிலும் எதிர் பாராதிருக்கும் போது, வேறொரு வல்லரசினால் வாயடைக்கப் பட்டு அடிமை விலங்கு பூட்டப்படுகின்றன. அரசியல் விவகாரங்கள் இப்பொழுது துரித காலத்திலேயே நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் நாம், பரிபூர்ண சுயராஜ்யத்தை அடைவதுதான் நமது லட்சியம் என்று பிரதிவருஷமும் தீர்மானங்கள் நிறைவேற்றித் திருப்தியடைகிறோம். இந்த லட்சியத்தை யடைய நாம் என்னென்ன முயற்சிகள் எடுத்திருக்கிறோம் என்பதைப் பரிசீலனை செய்து பார்த்து, அதனைத் திருத்தவோ, புதுப்பிக்கவோ ஒன்றுஞ் செய்வதில்லை. நமது லட்சியத்தை ஒரு முறை பிரகடனப்படுத்தி விட்டாலே போதுமானது. பன்னிப் பன்னி அதையே சொல்லி விட்டு, பிறகு சும்மா யிருப்பதில் சுகந்தானென்ன? விளையும் நன்மைதான் யாதோ?

காங்கிரஸ் உபசரணைக் கூட்டத் தலைவரான சேத் கோவிந்ததாஸின் பிரசங்கத்தை நாம் முழுக் கவனத்துடன் படித்துப் பார்த்தோம். அவர் ஒரு வக்கீலில்லையாதலால், வளைத்து வளைத்துப் பேசாமல், தமது மனதில் எது பட்டதோ அதைச் சொல்லியிருக்கிறார். இதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்.

பாசிஸ்டுகளின் மத்தியில் முஸோலினிக்கும், நாஜிகளின் மத்தியில் ஹிட்லருக்கும், பொதுவுடமை வாதிகளின் மத்தியில் ஸ்டாலினுக்கும் எந்த ஸ்தானம் இருக்கிறதோ அதே ஸ்தானத்தைத்தான் மகாத்மா காந்தி காங்கிரஸ்காரர்களிடையே வகிக்கிருர்.

ஃ ஃ ஃ

காங்கிரஸ் சட்டத்தில் மகாத்மா காந்திக்கு எந்தவித மான இடமும் இல்லையென்பது உண்மைதான். ஆனல் காங்கிரஸ் தலைவராக யார் இருக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி விரும்புகிருரோ அவரைத்தான் தலைவராகத் தெரிந்தெடுப்பதும், யாரார் காரியக் கமிட்டியில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிருரோ அவர்களையே நியமிப்பதும் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிற பழக்கமில்லையா? உண்மையில் அவர் காங்கிரஸின் சர்வாதிகாரி போலவே யிருந்து வந்திருக்கிருர்.

நமக்கு, சர்வாதிகார முறையிலே எப்பொழுதும் காதல் உண்டு. ஜெர்மனி, இத்தலி, ருஷ்யா, துருக்கி முதலிய நாடுகள் இப்பொழுது உன்னத நிலைமையை யடைந்திருக்கின்றன வென்ருல், அதற்குக் காரணம் ஹிட்லர், முஸோலினி, ஸ்டாலின், கமால் முதலியோருடைய சர்வாதிகார முறைதான். இவர்கள் ஜனநாயக முறையைப் பின்பற்றியிருப்பார்களானல், மேற்படி நாடுகளின் கதி வேறு விதமாகவே இருந்திருக்கும். படுகுழியிலே விழுந்து கிடக்கும் ஒருவனை மேலிழுத்துப் போட ஒரு திடசாலி வேண்டும். பல ஹீனர்கள் பலர் சேர்ந்து கொண்டு, 'இவனை மேலுக்குக் கொண்டு வரலாமா? அல்லது அப்படியே இருக்கச் செய்யலாமா? இதனல் சாதகமா? பாதகமா?' என்றெல்லாம் யோசனை செய்து கொண்டிருப்பார்களானல் விழுந்து பட்டவனுக்கு விமோசனமே கிடையாது. சிறப்பாக ஓர் அடிமை நாடு, ஒரு சர்வாதிகாரியின் தலைமையில்தான் சுதந்திரம் பெற முடியும். ஏனென்ருல் அவனெருவனுல்தான், ஜனங்களிடத்தில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் புகுத்த முடியும். வாதத்திற்கோ, கண்டனங்களுக்கோ, கட்சிப் பிணக்குகளுக்கோ அவன் இடமே கொடுக்கக் கூடாது. இந்தியாவைச் சுதந்திர லட்சியத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு சர்வாதிகாரியினுல்தான் முடியும். அத்தகைய சர்வாதிகாரிதான் தேவை. இந்தச் சர்வாதிகாரத்தை, மகாத்மா காந்தியடிகளிடத்தில் நிரந்தரமாக ஒப்புவிக்க நாம் தயார்.

ஆனல் நமது ஆட்சேபமெல்லாம், காங்கிரஸில் காந்தியடிகள் ஒரு சர்வாதிகாரி என்று பட்டவர்த்தனமாகச் சொல்லாமல், அதனை ஜனநாயகப் போர்வை போட்டு ஏன் மூடிவைக்க வேண்டுமென்பதுதான். மகாத்மா காந்தியின் விருப்பப்படி காங்கிரஸ் தலைவர் தெரிந்தெடுக்கப் படுவதாயிருந்தால், காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் அவருடைய எண்ணப்படி நியமிக்கப்படுவதென்ருல், தலைவர் தேர்தலென்றும், இதற்குப் பிரதிநிதிகளின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்காக ஓட்டுகள் போடுவதென்றும், தலைவருக்கு, அவ

ருடைய மந்திரிச் சபையாகிற காரியக் கமிட்டியை அமைத்துக் கொள்ளப்பூரண உரிமையுண்டென்றும்— இந்த மாதிரியான தமாஷாக்களெல்லாம் நடை பெறுவானேன்? காந்தியடிகளிடத்தில் சர்வாதிகாரமும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு வரியில் ஒரு தீர்மானத்தைக் காங்கிரஸில் நிறைவேற்றிவிட்டு, காரியக் கமிட்டி முதலியவற்றை யெல்லாம் கலைத்து விடலாமே.

சேத் கோவிந்த தாஸின் பேச்சிலிருந்து ஓர் உண்மை வெளியாகிறது. காங்கிரஸில் மகாத்மா காந்தி ஆதிக்கம் பெற்ற பிறகு, அதற்குத் தலைவராயமர்ந்தவர்கள், அவருடைய கையாட்டிப் பொம்மைகளாயிருந்து வந்திருக்கிறார்கள். இப்படிச் சொல்வது அவர்களுடைய மதிப்பைக் குறைப்பதாகும் என்று சிலர் கருதலாம். அப்படியல்ல; அவர்களே அந்தப் பொம்மைகளாயிருப்பதில் ஒரு பெருமை கொண்டிருக்கும் போது, நாம் அந்த உண்மையை எடுத்துக் கூறினால் அவர்கள் தவறாகவே கொள்ள மாட்டார்கள்.

சேத் கோவிந்த தாஸ், மற்றொரு புதிய தத்துவத்தையும் வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸைவிட காந்தியடிகள் பெரியவர் என்பது இவருடைய கருத்து. இதற்கு, பண்டித ஜவஹர்லாலின் ஆதரவையும் இவர் தேடிக்கொள்கிறார். பண்டித நேரு, எங்கோ ஐரோப்பாவில் காங்கிரஸைவிட காந்தியடிகள் பெரியவர் என்று கூறினாராம். அப்படி அவர் கூறியிருப்பாரானால் அது பெரிதும் ஆட்சேபிக்கத்தக்கதாகும். காங்கிரஸைவிட காந்தியடிகளை உயர்த்திக் கூறுவதால், காந்தியடிகளை நாம் பெருமைப்படுத்தியதாகாது. ஆனால் காங்கிரஸை சிறுமைப்படுத்தியதாகும். மகாத்மா காந்தியே, தமது பக்தர்கள் அளிக்கும் இந்த மதிப்புக் காணிக்கையை மனமுவந்து ஏற்றுக் கொள்வாரா என்பது நமது சந்தேகம்.

மகாத்மா காந்தி, காங்கிரஸைவிடப் பெரியவராயிருந்தால், அவர் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த பிறகு, காங்கிரஸின் மூலமாகத் தமது அரசியல்வாழ்க்கையைத் தொடங்கி யிருக்கமாட்டார். காங்கிரஸில் அவர் பூரணமாக ஈடுபட்டு வேலை செய்யாதிருந்திருப்பாரானால், இப்பொழுது, அரசியல் அரங்கத்தில் அவருக்குள்ள மதிப்பு இருக்குமாவென்று கேட்கிறோம். மகாத்மா காந்தியைத் தெய்வமாகவும் அவதார புருஷராகவும் போற்றுகிறவர்களை, நாம் போற்றத் தயாராயிருக்கிறோம். ஆனால் அதற்காக காங்கிரஸின் பெருமையைக் குறைக்க வேண்டாமென்பதுதான் நமது வேண்டுகோள்.

தலைவர் ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், தமது உடல் நலம் மிகவும் கெட்டுப் போயிருந்ததையும் பொருட்படுத்தாமல் திரிபுரிக்கு வந்து, படுத்த படுக்கையிலிருந்து கொண்டே தலைமை தாங்கி தமது மனத்திண்மையை வெளிப் படுத்தினார். ஸ்ரீ போஸின் வாழ்க்கையைச் சிறிது ஆராய்ச்சி செய்து பார்க்கிற போது, அவர் ஒரு துறவு மனப்பான்மை பூண்டவர் என்பது தெரியவரும். அவர் தளராத சர்வாநுகூலவாதி. தன்னம்பிக்கை நிரம்ப உடையவர். எனவே, 'இறந்தாலும் திரிபுரியில் இறப்பேன்' என்ற வைராக்கியத்துடன் வந்து தமது கடமையை நிறைவேற்றியதற்காக

அவரை மனப்பூர்வமாக நாம் பாராட்டுகிறோம்.

ஸ்ரீ போஸின் தலைமைப் பிரசங்கம் மிகச் சுருக்கமாயிருக்கிறது. அவருடைய உடல் நலமின்மையே இதற்குக் காரணம். எனவே, புதிய வேலைத் திட்டம் ஒன்றை வகுத்து அதன் வாயிலாகத் தேசத்திற்குப் புதிய வழியொன்றையும் காட்டவில்லையே யென்று ஒரு சிலர் கூறுவதில் அர்த்தமே யில்லை. காந்தியர்கள், அவர் தலைமைப்பதவிக்குத் தெரிந்தெடுக்கப் பட்ட பிறகு, அவருக்குச் சிறிதளவு மன ஆறுதலையும் கொடுக்கவில்லை. நோயோடு கவலையும் அவரை வாட்டி வதைத்தது. அவர் என் செய்வார்?

ஆனால் ஸ்ரீ போஸ், தமது தலைமைப் பிரசங்கத்தில் இரண்டொரு முக்கியப் பிரச்னைகளைக் குறிப்பிட் டிருக்கிறார். ஒன்று, நமது இறுதியான தேசியக் கோரிக்கைகளைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரிவித்து, ஆறு மாத கால தவணை கொடுத்து, அதற்குள் அவை நிறைவேற்றப்படா விட்டால் நாம் நமது போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்பது. இரண்டாவது, சமஸ்தானப் பிரஜைகளின் உரிமைப் போராட்டத்தில் காங்கிரஸ் நேர்முகமாகக் கலந்து கொள்ள வேண்டுமென்பது. இந்த இரண்டையும் நாம் பூரணமாக ஆதரிக்கிறோம்.

ஆனால், காங்கிரஸானது, இவ்விரண்டையும் மறுப்பது போல் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கின்றது. பரிபூரண சுயராஜ்யம் நமது லட்சியம் என்றுதான் காங்கிரஸ் சொல்லிக் கொண்டிருக்கிறதே தவிர, அந்தச் சுயராஜ்யம் எப்படித் தான் இருக்கும் என்று இதுவரை அது வகுத்துக் காட்டவே யில்லை. அந்தச் சுயராஜ்யத்தின் கீழ், விவசாயியின் நிலைமை யென்ன, கைத்தொழில்கள் எப்படி அமைக்கப்பெறும், தேசத்தின் பொருளாதார அந்தஸ்து எப்படி இருக்கும் என்ற கேள்விகளை யாராவது கேட்டால் அதற்கு எந்தக் காங்கிரஸ் வாதியும் பதில் சொல்ல முடியாது. எந்த நாட்டு அரசியல் கட்சியும், ஒரு வேலைத் திட்டம் வகுத்துக் கொள்ளாமல் தன் காரியங்களைச் செய்ய வில்லை. சேத் கோவிந்ததாஸினால், காங்கிரஸுக்கு உவமை காட்டப்படுகிற நாஜி கட்சிக்கும், பாசிஸ்ட் கட்சிக்கும், பொது வுடமைக் கட்சிக்கும் ஒரு வேலைத் திட்டம் உண்டு. ஆனால் ஐம்பத்திரண்டு வயதுடைய காங்கிரஸ், இன்னும் தனக்கென்று ஒரு வேலைத் திட்டத்தை வகுத்துக் கொள்ள வில்லை. வேலைத் திட்டத்தின் அவசியத்தைப் பற்றி யாராவது வற்புறுத்தினால் 'வெறும் வாய் வீச்சுக்காரர்கள்' என்று சொல்லி அவர்களை காந்தியர்கள் ஒதுக்கித் தள்ளி விடுகிறார்கள். ஒரு வேலைத் திட்டம் வகுத்துக் கொள்ளா திருக்கிறவரை, பொதுப்படையான தீர்மானங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறவரை, காங்கிரஸ், இந்தியாவைச் சுதந்திர பாதையில் வேகமாக அழைத்துச் செல்ல முடியா தென்பது நமது உறுதியான அபிப்பிராயம். இதை காந்தியர்கள் உணரு நாள் எந்நாள்?

இனி, காங்கிரஸில் நிறைவேற்றப் பெற்ற தீர்மானங்களின் மீது நமது கவனத்தைச் சிறிது திருப்புவோம். நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்குள், அதிக முக்கியத்துவம் பெற்றது பண்டித கோவிந்த வல்லப பந்தினுடைய தீர்மானந்தான்.

லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து, ஆயிரக் கணக்கான தேச பக்தர்களின் உழைப்பைப் பெற்று காங்கிரஸ் கூட்டப் பெற்றது இந்த ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத்தானோ என்று சந்தேகப் படும்படியாகக் கூட, காங்கிரஸின் முதல் நாள் நடவடிக்கை இருந்தது.

ஸ்ரீ பந்தின் தீர்மானம், சுபாஷ் சந்திரபோஸின் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் நிறைவேற்றப் பட்டது போலவே இருக்கிறது. இந்தத் தீர்மானத்தின் வாசகத்தில் ஒரு காற் புள்ளியைக்கூட மாற்ற முடியா தென்று சர்தார் படேல், அவருடைய இயற்கையான 'சர்தார் பிடிவாத'த்துடன் கூறியதும், இந்தத் தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட தலைவர்கள் முன்னிலையில் இது வாதிக்கப்பட்ட காலத்தில், அவர்கள், மரியாதைக்காவது தங்களைப்பற்றிய இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டா மெனச் சொல்லாம லிருந்ததும் எதைக் காட்டுகின்றன? தாங்கள் தான் இந்த நாட்டுக்குத் தலைவர்களா யிருக்கத் தகுதியுடையவர்கள் என்பதை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காகவே, இவர்கள் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றச் செய்தார்களா வென்றுகூட நாம் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

காரியக் கமிட்டியிலிருந்து ராஜீநாமா செய்த காங்கிரஸ் தளகர்த்தர்கள், தாங்களே வலிய ராஜீநாமா செய்தார்கள். அவர்களிடத்தில் அவநம்பிக்கை இருப்பதாக எந்தக் காங்கிரஸ் ஸ்தாபனமும் கூறவில்லை. அவர்கள் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் அங்கத்தினரா யிருந்தாலும் இல்லா விட்டாலும் அவர்களிடத்தில் தேசம் எப்பொழுதும்போல் மதிப்பு வைத்துக் கொண்டுதானிருக்கும். அவர்களிடத்தில் யாருக்குமே அவநம்பிக்கை ஏற்படாத போது, அவர்களிடத்தில் நம்பிக்கை இருப்பதாகக் காங்கிரஸில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசிய மென்னவோ?

தவிர, காங்கிரஸ் தலைவருக்குத் தமது காரியக் கமிட்டியை அமைத்துக் கொள்ள உரிமையுண்டு என்ற விதிதான் இதுகாறும் அநுஷ்டிக்கப்பட்டு வந்த தென்றும் இதுவே சம்பிரதாய மென்றும் யாரும் கருதி வந்தார்கள். இதுவே நியாயமுங் கூட. ஆனால் இப்பொழுது இந்தத் தீர்மான ரூபமாக இந்த அதிகாரம் பறிக்கப் பட்டு காந்தியடிகளிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தலைவர், தாமாகவே வலிய காந்தி யடிகளிடத்தில் கொண்ட அன்பினாலோ, அல்லது மரியாதைக்காகவோ, காரியக்கமிட்டி அங்கத்தினர்களின்நியமனத்தைப்பற்றிக் காந்தியடிகளிடத்தில் ஆலோசனை செய்திருந்தால், அல்லது இனிச்செய்வாரானால் அதுவேறு விஷயம். அஃது அவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது. ஆனால், தலைவருக்கு விதி பூர்வகமாக அளிக்கப் பட்டிருக்கிற ஓர் உரிமையை, அந்த விதியை மாற்றியமைக்காமலே, வேறொரு தனி மனிதரிடத்தில்—அவர் எவ்வளவு பெரிய மனிதராயிருந்தாலும்—ஒரு தீர்மான ரூபமாக ஒப்படைப்ப தென்பது நியாயமற்றதாகும்; முறையற்றசெயலாகும்.

இந்தத் தீர்மானம், காங்கிரஸ் தலைவரிடத்தில் நம்பிக்கையில்லை யென்பதை மறைமுகமாக வெளிப்படுத்துவதாயிருக்கிறது. ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் அப்படியில்லை யென்று

கூறுகிறார். தேசீய ஒற்றுமையை முன்னிட்டோ, அல்லது காங்கிரஸின் மீது கொண்டுள்ள பற்றுதலினாலோ அவர், இந்த அவமதிப்புள்ள தீர்மானத்தைப் பொருட்படுத்தா திருக்கலாம்; அல்லது பெருந்தன்மை காரணமாக, மேற்படி தீர்மானத்தில் எவ்வித கெட்ட எண்ணமும் இல்லையென்று உண்மையிலேயே நம்பியிருக்கலாம். ஆனால் நாம் அப்படிக் கொள்ளவே முடியாது. எதிர் காலமும், இந்தத் தீர்ப்பைத் தான் நமது செவியில் ஓதிக் கொண்டிருக்கிறது.

நடுவில் ஒரு சிறிய விஷயம். பண்டித கோவிந்த வல்லப பந்தின் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்ட போது அபேதவாதிகள் நடு நிலைமை வகித்ததை நாம் சிறிது கூடப் பாராட்ட முடியவில்லை. இதற்குச் சமாதானங் கூறி ஸ்ரீ ஜெயப்பிரகாச நாராயணர் விடுத்துள்ள அறிக்கையை நாம் ஆழ்ந்து படித்துப் பார்த்தோம். அதனைப் பார்த்த பிறகு நாம் கீழ்க்கண்ட முடிவுகளுக்கே வர வேண்டியிருந்தது:—

1. அபேத வாத இயக்கமானது இன்னும் இந்தியாவில் கட்டுப்பாடான ஒரு கட்சியாகவோ ஸ்தாபனமாகவோ அமையவில்லை.

2. தற்போது அபேதவாதிகள் என்று சொல்லிக் கொண்டிருக்கப் பட்டவர்களிடத்தில் அபிப்பிராய பேதங்கள் பல இருக்கின்றன.

3. அபேதவாதக் கருத்தை யுடைய பலரையும் தன் வசப்படுத்திக் கொண்டு அவர்களை நடத்துகிற ஒரு தலைவர் இன்னும் பகிரங்கமாகத் தோன்றவில்லை.

ஒரு விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டு, முடிவுக்கு விடப்படுகிற தருணத்தில், நடுநிலைமை வகிப்பதாகக் கூறும் 'மதிற் மேற் பூனை' களை நாம் எப்பொழுதுமே நம்புவதில்லை; அவர்களிடத்தில் நமக்கு மதிப்பும் கிடையாது. ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், சரியாகவோ, தவறாகவோ, அபேதவாதப் பிரமுகர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அபேதவாதிகளின் ஓட்டு பலத்தின் பேரிலேயே, அவர் திரிபுரி காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்படி யிருக்க, அவரைப்பற்றிப் பிரஸ்தாபிக்கப்படுகிற ஒரு தீர்மான விஷயத்தில், அபேதவாதக் கட்சியினர் நடுநிலைமை வகிக்கலாமா? மஹாத்மா காந்தியிடத்தில் இவர்களுக்கு நம்பிக்கையும் பக்தியும் இருந்தால், அதைத் தீர்மானத்திற்குச் சாதகமாக வாக்களித்துக் காட்டிக் கொள்வது தானே? இவர்கள் நடுநிலைமை வகித்ததானது, காந்தீயர்களுக்கு அதிக பலத்தை அளித்ததோடு, அவர்கள் பரிகசிப்பதற்கும் இடமாகி விட்டது.

பலுசிஸ்தானத்திற்கு மற்ற மாகாணங்களைப் போல் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி யானால், மாகாணப்பொறுப் பாட்சியின் கீழ், மாகாணங்கள் தற்போது அடைந்துள்ள அந்தஸ்தைக் கண்டு காங்கிரஸ் திருப்தியடைகிறதா? இந்த ஒரு தீர்மானத்தைக் கொண்டு, காங்கிரஸுக்கு இன்னும் சீர்திருத்த மனப்பான்மை போகவில்லை யென்பது தெளிவாகிறது.

நம்மை அடிமைச் சேற்றிலிருந்து கைதூக்கி விடுவார் இந்த உலகத்தில் ஒருவர்கூட இல்லை. நமது பொருளாதார நிலைக்குப் பரிகாரம் ஏற்பட வேண்டுமென்று சொல்லி ஒரு விரல் கூட அசைத்துக் கொடுக்கப்படவில்லை. நமது சுய முயற்சியினாலும், தன்னம்பிக்கையினாலுமே நாம் மேலெழுந்திருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஸ்திதியில் ஸ்பெயினுக்கும், சீனாவுக்கும், ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் அநுதாபம் காட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றுகிறோம். இந்தத் தீர்மானங்களுக்கு ஏதேனும் மதிப்பிருக்குமா? நாம் சொல்கிற வார்த்தையோ, செய்கிற செயலோ பிறர் மதிக்கக்கூடியதாயிருக்க வேண்டும். அஃதில்லாத காலத்தில் நாம் மௌனமாக இருந்து விடுதலே நல்லது. ஏனென்றால் இந்த மாதிரியான தீர்மானங்கள் நிறைவேற்றுவதனால், நமக்கு ஜீவநாடியாயுள்ள, ஒரு வாசகத்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட வேண்டிய சுதந்திர தீர்மானம் மதிப்பில்லாமல் போகிறது. நாம் சுதந்திரம் பெற்ற பிறகு இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றுதலே நல்லது.

இந்தியா, பரிபூர்ண சுதந்திரம் பெறுதவரையில், அதற்கென்று தனியானதோர் அந்நிய நாட்டுக் கொள்கை இருக்க முடியாது. அப்படி ஏதேனும் இருந்தால், அது வெளி நாடுகளில் பிரசாரஞ் செய்வதாகவும் அல்லது தாழ்த்தப்பட்ட நாடுகளுக்கு அநுதாபஞ் செலுத்துவது மாகவே இருக்கும். காங்கிரஸ் ஆரம்ப காலத்திலிருந்தே இந்தப் பிரசார வேலை நடைபெற்றுக் கொண்டுதான் வந்திருக்கிறது. இது புதியதொரு வேலைத் திட்டமும் ஆகாது. அப்படியிருக்க, இந்தியா, தனியாக ஒரு வித அந்நிய நாட்டுக் கொள்கையை நிர்ணயித்துக் கொண்டு அதன்படி நடக்க வேண்டுமென்று காங்கிரஸில் தீர்மானித்திருப்பது விந்தையாகவே இருக்கிறது.

பொதுவாகத் திரிபுரி காங்கிரஸ் நடவடிக்கைகளைப் பார்க்கிற போது, வெகு சமீபத்திலே இல்லாவிட்டாலும், சிறிது காலத்தில் காங்கிரஸிலிருந்து காந்திய அரசியல் என்றும் தேசிய அரசியல் என்றும் இரண்டு கிளை நதிகள் உற்பத்தியாகிப் பிரிந்து ஓடத்தொடங்குமோவென்று நாம் அஞ்சுகிறோம்.

நிற்க, காங்கிரஸ் முடிவுபெற்ற பிறகு, காங்கிரஸ் மந்திரிகள் சிலர் தங்கள் தங்கள் மாகாணங்களில் காந்தீயம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, வங்காள மாகாணத்தையும், அபேதவாதிகளையும் தூற்றிப் பிரசாரஞ் செய்வதை நாம் சிறிதுகூட விரும்பவில்லை. சிறப்பாகச் சென்னை மந்திரிமார்கள் இந்தப் பிரசாரத் தொண்டில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார், திரிபுரி பொருட் காட்சியில் பேசியபோது, போஸின் படகு, ஓட்டைப் படகு என்றும், காந்தியின் படகு பழமையானதும் ஆனால் ஜாக்கிரதையாக அக்கரையில் கொண்டு சேர்ப்பிக்கக்கூடியதென்றும் சொல்லி, போஸின் படகை காந்தியின் படகோடு சேர்த்துக் கூடக் கட்ட முடியாதென்றும் கூறினார். உபமான உபமேயங்களால் எதிரிகளை அடக்கி விடுகிற ஆற்றல் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாருக்கு இருக்கிறதென்பதை நாம் அங்கீ

கரித்துக் கொள்கிறோம். ஆனால் சில சமயங்களில் அவர் குறி தவறிப்பாய் கிறார். அதனால் எதிரிகளின் இடுப்பின் கீழ் அவருடைய சொல்லம்பு தாக்கி விடுகிறது. அந்தச் சந்தர்ப்பத்தில் தான், ஸ்ரீ ஆச்சாரியார், தமது கண்ணியமான ஸ்தானத்திலிருந்து இறங்கி விடுகிறார். இவருடைய இந்தப் படகு உவமானம் மகா விஷமத்தனமானது. ஸ்ரீ போஸிடத்திலும் அபேதவாதிகளிடத்திலும் இவருக்குள்ள மனப்பான்மையை இது இது தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுகிறது. இவருடைய முன் மாதிரியைக் கொண்டு, மற்ற மந்திரிகளும் சென்னை மாகாணத்தில் பிரசாரஞ் செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். இந்த மனப்பான்மை, அரசாங்க நிருவாகத்தில் நுழைந்து விடக் கூடாதென்பதுதான் நமது பிரார்த்தனை.

* * *

தன்னம்பிக்கை

நமது இதிகாசங்களிலும் சரித்திரங்களிலும் தோன்றி மறைந்துபோ யிருக்கிற மகா புருஷர்களுடையவும் வீரர்களுடையவும் வாழ்க்கையைப் பற்றி நமது இளைஞர்களிடத்திலே தவறான எண்ணங்கள் ஏற்பட்டு வருவது விசனிக்கத் தக்க விஷயம். தேசத்தின் கல்வி முறை சரியாக அமையாத காரணத்தினாலும், அந்நிய ஆட்சி முறையிலே நாம் ஊறிப்போய் விட்டபடியாலும், இந்த எண்ணங்களைக் களைந் தெறிவது மிகக் கடினமான காரியம் என்பதை நாம் அறிவோம். உதாரணமாக, ஆங்கிலக் கல்வி பயின்ற இளைஞர்கள், நமது சரித்திர நாயகர்கள் உண்மையிலே இருந்தார்களா வென்றும், கவிஞர்களின் கற்பனையினின்று அவர்கள் தோன்றினவர்களா யிருக்கக் கூடு மென்றும் கருதுகிறார்கள். மற்றுஞ் சில இளைஞர்களோ, அப்படி நமது நாட்டிலே சரித்திர நாயகர்கள் தோன்றி யிருந்த போதிலும், அவர்கள் வாழ்க்கையை நாம் பின்பற்ற முடியுமா வென்ற சந்தேக மனப்பான்மை கொண்டு விடுகிறார்கள். இதுதான் நமது நாட்டிற்குப் பெரிய ஆபத்து. நமது சரித்திர நாயகர்கள் அனைவருக்கும் ஒரு தெய்விகத் தன்மையைப் புகுத்தி, அது காரணமாக அவர்களை, நமக்கு எட்டாதவர்களாக்கிவிட்டு, நாம் அந்த வீரச் செயல்களைச் செய்ய முடியாதவர்கள் என்ற அவநம்பிக்கையோடு, எச்செயலும் செய்யாமல் நிற்பது, நமது கடமையைத் தெரிந்து கொள்ளாத குற்றத்தைச் செய்வதாகும். உதாரணமாக, இராமபிரானுடையவோ, அர்ஜுனனுடையவோ, சிவாஜியினுடையவோ வீர வாழ்க்கையை எடுத்துக் கொள்வோம். இவர்களுடைய வீர வாழ்க்கையை நமது அன்றாட வாழ்க்கையோடு கலக்கச் செய்ய வேண்டு மென்று சொன்னால், 'அது முடிகிற காரியமா? அவர்க ளெல்லாரும் தெய்வாமிசம் பொருந்தியவர்கள். நமக்கு அடிமை வாழ்க்கைதானே சாசுவதம். அப்படி மேற் சொன்ன வீரர்களைப்போல் நாம் ஆவதானாலும், 'விசுவாமித்திரன் எங்கே, கிருஷ்ணன் எங்கே, ராமதாஸ் எங்கே?' என்று என்னென்னவோ சொல்கிறார்கள். இந்தத் தன்னம்பிக்கை யில்லாத மனப்பான்மை மகா ஆபத்தானது; நாம் என்றும் அடிமை வாழ்க்கைக்காகவே பிறந்தோம் என்ற எண்ணம் மகா மோசமானது. மேலே கூறப்பட்ட இதிகாச.

நாயகர்களும் இன்னும் பலரும் நம்மைப்போல் மானிட உருக்கொண்டு மானிடச் செயல்களையே செய்திருக்கிறார்கள். இந்தத் திருஷ்டியுடனேயே அவர்களுடைய செயல்களை நாம் நோக்க வேண்டும். அவர்களுக்குத் தெய்வாமிசம் இருந்ததென்றால் நம்மெல்லாருக்குமே தெய்வாமிசம் உண்டு. பூமியிலே பிறக்கிற ஒவ்வொரு பிராணியும், தெய்வ சக்தியோடுதான் பிறக்கிறது. அந்தச் சக்தியை உபயோகிக்கிற விதத்திலேயே அதன் வளர்ச்சி இருக்கிறது. ஆனால் இளைஞர்கள் மீது எல்லாக் குற்றங்களையும் நாம் 'சுமத்திவிடத் தயாராயில்லை. அவர்கள், தங்கள் நிலையை உணரவும், அதனின்று மேல் செல்ல ஏதேனும் வழிகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து பார்க்கவும், நாட்டிலே போதிய வசதிகளில்லை; சரியான நூல்களில்லை. பள்ளிக்கூடத்துப் பாட முறைகளும் நேர்மாறாக இருக்கின்றன. இவை யாவும், தேசிய அரசாங்கத்தில்தான் உண்டாக முடியும். அந்த நாள் எந்த நாள்? மிக விரைவில் என்பதில் சந்தேகமேயில்லை.

* * *

1938ம் வருஷம் மார்ச் மாதத்திலிருந்து, 1939ம் வருஷம் மார்ச் மாதத்திற்குள், ஜெர்மனிக்குக் கீழ்க்கண்ட நாடுகளைச் சேர்த்துக் கொடுத்திருக்கிறான் ஹிட்லர்:—

அடுத்தது?

1. ஆஸ்திரியா
2. ஸுடேடென் பிரதேசம்
3. ஜெக்கோஸ்லோவேகியா
4. மெமெல்

ஜெர்மானியர்கள் ஹிட்லரைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள் என்றால் அதில் என்ன ஆச்சரியமிருக்கிறது? இந்த நான்கு பிரதேசங்களைத் தவிர, ஜெர்மனியின் பிடிப்பில் ருமேனியா அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஜெர்மனிக்கும் ருமேனியாவுக்கும் ஏற்பட்டுள்ள பொருளாதார ஒப்பந்தத்தைப் பார்க்கிறபோது, ருமேனியாவின் இருதயத்தின் மீது ஜெர்மனி தனது கையை அழுத்திக் கொண்டிருப்பது நன்கு தெரியும். ஹங்கேரியும், ஜெர்மனி முன்னர் கைகட்டி வாய்பொத்தி நிற்கிறது. போலந்துக்கும் ஜெர்மனிக்கும் இடையில் மனஸ்தாபப் புகை புகைந்து கொண்டேயிருக்கிறது. இது எந்த நிமிஷத்திலும் தீயாக மூளலாம். இவ்வளவு அமர்க்களங்களுக்கும், ஜெர்மனி ஒரு பொட்டு ரத்தத்தைக் கூடச் சிந்தவில்லை; ஓர் உயிரைக் கூட பலி கொடுக்கவில்லை. உலகத்தில் சிறந்த ராஜதந்திரி, ஹிட்லரைவிட வேறு யாராவது இருக்க முடியுமா?

ஆனால் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் இன்னும் சமாதான கீதத்தையே பாடிக்கொண்டிருக்கின்றன. ம்யூனிக் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டபோது, 'இனி நாடு பிடிக்கும் ஆசை எனக்குக் கிடையாது' என்று ஹிட்லர் கூறினான். அதை நம்பி, சேம்பர்லேனும், ஹிட்லரிடம் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு, அதைப் பிரிட்டிஷ் பொது ஜனங்களிடத்தில் காட்டித் திருப்தியடைந்தான். ஒப்பந்தங்களுக்கும் உடன்படிக்கைகளுக்கும் எவ்வளவு மரியாதை இந்தக் காலத்தில் கொடுக்கப்படுகிறதென்று நாம் சொல்லத் தேவையில்லை. இனி, ஜெர்மனி வே

றெந்த நாட்டையும் ஆக்ரமிக்கா வண்ணம் தடுக்க, பிரிட்டன் சில வல்லரசுகளைக் கூட்டி ஆலோசனை செய்யப் போகிறதாம். இந்த ஆலோசனை நிலையிலேயே, ருஷ்யாவுக்கும் பிரிட்டனுக்கும் பிணக்கு ஏற்பட்டு விட்டது. இந்த ஆலோசனை மகாநாடு கூட்டப் படுவதற்குள், ஜெர்மனி ஹங்கேரியையும் போலந்தையும் பலி கொண்டு விட்டால் அதில் ஆச்சரியமே படத் தேவையில்லை.

ஹிட்லர், மெமெல் பிரதேசத்தை ஆக்ரமித்துக்கொண்ட பிறகு, முஸோலினியின் ஸ்வரம் ஏறியிருக்கிறது. பிரான்ஸை யுத்தத்திற்கு அறை கூவி அழைப்பது போல், இவன் சமீபத்தில் பேசியிருக்கிறான். ஜிபூடி, டூனிஸ், சூயஸ் வாய்க்கால் ஆகிய மூன்றும் இத்தலிக்குத் தேவையென்றும், இவை கிடைக்கா விட்டால், பிரான்ஸுக்கும் இத்தலிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அகழியானது விரிந்துகொண்டுபோகுமென்றும் அறை கூவுகிறான். இதற்குப் பதில் பிரான்ஸின் டலாடியர், தன் கையே தனக்குதவி என்ற பல்லவியைப் பாடிக் கொண்டு, இத்தலியின் கோரிக்கைகளை பிரான்ஸ் மறுக்கும் என்று கூறுகிறான். இது காரணமாக யுத்தம் மூளுமா வென்பதும், அப்படி மூண்டாலும் பிரான்ஸின் உதவிக்குப் பிரிட்டன் செல்லுமா வென்பதும் நமக்குச் சந்தேகமாயிருக்கிறது. ஆனால் டலாடியரின் பேச்சை நாம் படித்துப் பார்த்த பிறகு, 'தன் வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்' என்ற தமிழ் நாட்டுப் பழமொழி நமது நினைவுக்கு வருகிறது.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்

திரிபுரி காங்கிரஸ் தலைவர்

ருமேனியாவுக்குச் சாவுமணியா ?

—தே. ஏகாம்பரம்

தங்கள் தங்கள் நாட்டில் செல்வாக்கு நிறைந்த மன்னர்கள் கூட சில சமயங்களில் பலாத்கார சக்திக்குப் பணிந்துவிட வேண்டியதாகத் தான் இருக்கிறது. இதற்கு ருமேனியா ஒரு சிறந்த உதாரணம். இந்த நாட்டு மன்னன் காரோல் என்பவன் பிடிவாத குணமும் ஜனங்களின் நன்மைக்காக அவர்களை அடக்கி யாளும் திறனும் உடையவன் என்று பெயரெடுத்தவன். அபிசீனியா சக்கிரவர்த்தியாக இருந்த ஹெய்லி செலாசி, ஆஸ்திரியாவின் ஷூஸ்னிக், ஜெக்கோ ஸ்லோவேகியாவின் பெனேஷ், ஸ்பெயினின் அஜனு ஆகிய இவர்களைப் போல் காரோல் மன்னன் சர்வாதிகார சக்திக்கு எளிதில் பணிந்து கொடுத்துவிட மாட்டான் என்று அநேக காலமாக ராஜதந்திரிகள் கூறிக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் சமீபத்தில் ஜெர்மனிக்கும், ருமேனியாவுக்கும் ஏற்பட்ட பொருளாதார ஒப்பந்தத்தை நோக்குகிறபோது மேற்படியார்களுடைய நிலைமைக்கு இவன் வெகு சீக்கிரத்தில் வந்து விடுவானோ என்று பலரும் சந்தேகிக்கின்றனர்.

இந்தப் பொருளாதார ஒப்பந்தந்தான் என்ன என்பதைச் சிறிது கவனிப்போம்.

1. ருமேனியாவின் விவசாயத்தை மிகத் துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டும். இதன் பொருட்டு ஜெர்மனியானது தனது விவசாய அனுபவம் முழுவதையும் ருமேனியா வசத்தில் ஒப்படைக்கச் சித்தமா யிருக்கிறது. விவசாய அபிவிருத்திக்குத் தேவையான இயந்திர வகைகள் முதலியவற்றை ஜெர்மனி சப்ளை செய்யும்.

2 சிறப்பாக கால் நடைத் தீவனம், எண்ணெய் வித்துக்கள், சணல் முதலியவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.

3 ருமேனியாவிலுள்ள காட்டுப் பிரதேசங்களை அதிகமாகச் செழிக்கச் செய்து அதன் மூலமாக அதிகமான பொருள்களை எதிர்பார்க்க வேண்டும்.

4 ருமேனியாவிலுள்ள செம்பு, க்ரோமியம் என்கிற ஒருவித எஃகுப் பொருள், மாங்கனீஸ் என்கிற இரும்பு மாதிரியுள்ள ஒரு வகை உலோகப் பொருள் ஆகிய இவற்றைச் சுரங்கங்களிலிருந்து தோண்டி யெடுத்து வேலை செய்யும் பொருட்டு ருமேனியர்களும் ஜெர்மானியர்களும் அடங்கிய பல கம்

பெனிகள் ஆங்காங்கு ஸ்தாபிக்கப் படும். இந்தக் கம்பெனிகளுக்குத் தேவையான இயந்திர சாதனங் களும், சுரங்கங்களி லிருந்து தோண்டி யெடுப்பதற்கு அவசிய மான மற்றக் கருவிகளும் ஜெர்மனி யால் சப்ளை செய்யப்படும். அலு மினியத் தொழிற்சாலைகளும் ஆங் காங்கு நிறுவப்படும்.

5 எண்ணெய்க் கிணறுகளை வெட்டி அவைகளிலிருந்து எண் ணெய் எடுத்து வினியோகம் செய்ய ஜெர்மன்—ருமேனிய கம் பெனி யொன்று ஸ்தாபிக்கப்படும்.

6 இரண்டு நாடுகளின் கைத் தொழில் ஸ்தாபனங்களும் பரஸ் பர ஒத்துழைப்பின் பேரில் வேலை செய்ய வேண்டும். 'சுதந்திரப் பிர தேசங்கள்' என்று சில இடங்கள் வகுக்கப்பட்டு அங்குக் கைத் தொழில், வியாபார ஸ்தாபனங்கள் நிறுவப்படலாம்.

7 மேற்படி சுதந்திரப் பிரதே சங்களில் ஜெர்மனியானது குதாம் புகள் கட்டிக் கொள்ளலாம். ருமே னிய ராணுவம், கப்பற்படை, ஆகா யப்படை ஆகிய இவற்றிற்குத் தேவையான யுத்த தளவாடங்களை இந்தக் குதாம்புகளின் மூலமாக ஜெர்மனி சப்ளை செய்யும்.

8 ஜெக்கோ ஸ்லோவேகியா சுதந்திர நாடாக இருந்தபோது அங்கு ஸ்கோடா யுத்த தளவாட தொழிற் சாலையில் ருமேனியா என்னென்ன யுத்த தளவாடங்கள் தேவை யென்று ஆர்டர் கொடுத் திருந்ததோ அந்த சாமான்கள் அனைத்தையும் ஜெர்மனி இப் போது சப்ளை செய்யும்.

இந்த ஒப்பந்தத்தைப் பார்த்த பிறகு ருமேனியாவுக்கு பொருளாதார சுதந்திரம்இருக்கிறதென்று யார்தான் கூற முடியும்?

ம்யூனிக் ஒப்பந்தம் ருமேனிய ஜனங்களுக்கு ஒரு பெரிய அதிர்ச் சியை உண்டு பண்ணி விட்டது. அதா வது ஹிட்லர் ருமேனிய எல்லைப் புறத்துக்கே வந்து விட்டதாக ருமே னியர்கள் பயந்தார்கள். இந்த ஒப்பந் தத்திற்கு முன்னர் ருமேனியர்கள் ஜெர்மனியின் படையெடுப்பினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு யுத்த சந்நாகங்கள் செய்து கொண் டிருந்தார்கள். இவர்களுக்கு பாதுகாப்பா யிருந்தது, சுடேடென் மலைப் பிரதேசம். ஆனால் இதுவும், இதனைச் சார்ந்த பிற நாடு களும் இப்பொழுது ஜெர்மனியின் வசம் சிக்கிக் கொண்டு விட்டன. தன் னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய இயற்கை வசதிகள் ஒன்றும் இப் போது ருமேனியாவுக்கு இல்லை. ஜெர்மனிக்கோ ருமேனியாவின் எண்ணெயும், விவசாய மூலப்பொருள் களும் தேவையா யிருக்கின்றன. எனவே ருமேனியா தன் பிடிப்புக் குள் இருக்க வேண்டுவது ஜெர் மனிக்கு அவசியமா யிருக்கிறது.

ஒருகால் ஜெர்மனி ருமேனியாவின் மீது படை எடுத்தால் அப்பொழுது ருமேனியா என்ன செய்யும்? அதனு டைய ராணுவ பலமோ மிகக் குறைவு. மேற்கு ஐரோப்பிய வல்லரசு களின் உதவியையோ அது எதிர் பார்க்க முடியாது. இத்தாலியரும், ருமேனியர்களும் ஒரே வித ஜாதியானராக இருந்த போதிலுங் கூட இத்தலியானது ஜெர் மனியோடு தான் சேர்ந்து கொள்ளும். ருஷ்யா ருமேனியாவுக்கு எந்த விதத் தில் உதவி செய்யுமென்பது சந்தேக

மாகவே இருக்கிறது. எனவே ருமேனியாவின் பாதுகாப்பு அதன் அரசனுடைய மனத் திண்மையிலேயே இருக்கிறது. ஒன்று, காரோல் மன்னன் ஜெர்மனியை ருஷ்யாவோடு முட்டவைக்கலாம். ஹங்கேரியர்களுக்குள் பிளவு உண்டு பண்ணுமாறு ஜெர்மனிக்குத் துணை செய்யலாம். போலந்து, யூகோஸ்லேவியா ஆகிய இந்த இரண்டு நாடுகளுடனும் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டு கட்டுப்பாடாக ஜெர்மனியை எதிர்த்து நிற்கலாம். ருமேனியப் பொருள்களை இங்கிலாந்தும் பிரான்சும் அதிகமாக வாங்கும்படி செய்யலாம். இது மூலமாக ஜெர்மனியின் தயவினின்றும் தப்பித்துக் கொள்ளலாம்.

எனவே காரோல் மன்னன் ருமேனியர் அனைவருடையவும் ஒத்துழைப்பைப் பெறுதல் அவசியம். இதனாலேயே நாட்டில் ஒரே ஒரு அரசியல் கட்சிதான் இருக்க வேண்டுமென்று அவன் விரும்புகிறான். ஆனால் இந்த நாட்டிலுள்ள சிறு பான்மைத் தொகையினரான ஜெர்மானியரும் ஹங்கேரியரும் இந்த ஒற்றுமை முயற்சிக்கு இடையூறு செய்த வண்ணமாயிருக்கிறார்கள். ஹங்கேரியர்களும் ஜெர்மானியர்களும் ஒன்று சேர்ந்தால் ருமேனியர்களை விட அதிகமாயிருக்கிறார்கள். ம்யூனிக் ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்தச் சிறு பான்மைக் கூட்டத்தினர் இந்த நாடு தானாகவே சிதறிந்து விடுமென்று எதிர் பார்த்தனர். இவர்களுடைய பிரசாரம் தீவிரமாகியது. ஆயினும் காரோல் மன்னன் அடக்கு முறையைப் பிரயோகிக்காமல் சில சலுகைகளைக் காட்டி வந்தான். ஜெர்மானியர்களும் ஹங்கேரியர்களும் தங்களுடைய சொந்த பாஷைகளில் பத்திரிகைகளை நடத்திக் கொள்ளுமாறு அனுமதித்தான். ஜெர்மானியர்களுக்கு அவர்களுடைய அரசியல் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு சலுகைகளை காரோல் மன்னன் காட்டி வந்த போதிலும், ருமேனியத் தொழிலாளர்களுடைய ராஜபக்தியைப் பெறமல் போய் விட்டான். காரோல் மன்னன் பிரபுத்வக் கொள்கையையும் முதலாளித்துவத்தையும் ஆதரிக்கிறவன் என்ற எண்ணம் தொழிலாளர்களிடையே பரவியிருக்கிறது. இதனைப் போக்கிக் கொள்ள அவன் முயற்சி செய்யவே இல்லை. தவிர ருமேனியர்கள் சுலப வாழ்க்கையை நடத்துவதில் பிரியமுள்ளவர்கள். கஷ்டப்பட்டு உழைப்பதில் மனமில்லாதவர்கள். இதற்குக் காரணம் அந்த நாட்டின் செழுமைதான். தவிர அரசாங்க ஊழியர்களிடத்தில் லஞ்சப் பேய் தாராளமாக நடமாடுகிறது. இத்தகைய காரணங்களினுலோ என்னவோ, தங்களைவிட பெரிய சக்தி ஒன்றினுல் என்றைக்காவது ஒரு நாள் அழுத்தப்படுவோமோ என்ற அச்சத்துடனேயே அவர்கள் வாழ்கிறார்கள்.

இந்த நிலையில் ஜெர்மானிய-ருமேனியப் பொருளாதார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ஜெர்மனியோ இந்த ஒப்பந்தத்தை ஜெர்மனியும் ருமேனியாவும் சேர்ந்து நடத்துகிற ஐந்து வருஷ வேலைத் திட்டமென்று பறை சாற்றுகிறது. ஏனென்றால் இந்த ஒப்பந்தம் 1944ம் வருஷத்தோடு முடிவு பெறுகிறது. இந்த ஐந்து வருஷ காலம் வரை காரோல மன்னன் ருமேனியாவின் சுதந்திர சிங்காதனத்திலிருந்து இறங்கி விடாமலிருப்பானு?

மெமெல் எங்கே இருக்கிறது?

1919ம் வருஷம் தயாரிக்கப்பெற்ற வார்சேல் சமாதான உடன்படிக்கையானது, மத்திய ஐரோப்பாவில் பல புதிய நாடுகளைச் சிருஷ்டித்து வைத்தது. அவற்றுள் லாட்வியா, லிதுனியா, எஸ்டோனியா என்ற நாடுகள் உண்டு. ஜெர்மனி, போலந்து இவைகளுக்கு வடக்கிலும், ருஷ்யாவுக்கு மேற்கிலும், பால்டிக் கடலுக்குக் கிழக்கிலும் இந்த நாடுகள் இருக்கின்றன. இவற்றுள், லிதுனியா நாட்டுக்குள் மெமெல் என்ற ஒரு பிரதேசம் இருக்கிறது. 1919ம் வருஷத்துக்கு முன்னர், இது ஜெர்மனி வசம் இருந்தது. மேற்படி வார்சேல் ஒப்பந்தத்தின் விளைவாக, இந்த நகரம் லிதுனியாவுக்கு அளிக்கப்பட்டது. ஆனால் 1923ம் வருஷம், லிதுனியா அரசாங்கத்தின் மேற்பார்வையில் ஒரு சுதந்திரப் பிரதேசமாக்கப்பட்டது. இது பின்னர் சர்வதேச சங்கத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தின் சுதந்திரம் எப்பொழுது பாதுகாக்கப்படுமென்று அப்பொழுது பிரான்ஸ், பிரிட்டன், இத்தலி முதலிய வல்லரசுகள் உறுதி கூறின. இதற்குப் பிறகு, மெமெல் பிரதேசத்தி லுள்ள ஜெர்மானியர்களுக்கும் லிதுனிய அதிகாரிகளுக்கும் அடிக்கடி பிணக்குகள் நிகழ்ந்துவந்தன. ஆரம்பத்திலிருந்தே மெமெல் பிரதேசம், மத்திய ஐரோப்பாவின் ஆபத்து ஸ்தலங்களில் ஒன்று என்று கருதப்பட்டு வந்திருக்கிறது.

மெமெல் பிரதேசம் என்பது ஒரு துறைமுகப் பட்டினம். பால்டிக் கடலின் மூலமாக நடைபெறுகிற எல்லா மர வியாபாரங்களும் இந்தத் துறை முகத்தின் மூலமாகவே நடைபெறுகின்றன. இந்தப் பிரதேசத்தின் ஜனத்தொகை 149,000. இது ஒரு ஜில்லாவாகக் கருதப்படுகிறது.

இனி மெமெல் எந்த லிதுனியாவின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்ததோ அந்த லிதுனியா நாட்டைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இது 34,780 சதுர மைல் விஸ்தீரணமுடையது. டென்மார்க் அல்லது ஹாலந்து ஆகிய இந்த நாடுகளில் ஒரு நாட்டைவிடப் பெரியது. இதன் ஜனத்தொகை சுமார் இருபத்திரண்டரை லட்சம். இதில் நூற்றுக்கு எண்பது பேர் லிதுனியர்கள். ஏழு பேர் யூதர்கள். நான்கு பேர் ஜெர்மானியர்கள். மூன்று பேர் போலிஷ்காரர். ஆறு பேர் ருஷ்யர்கள்.

ஜனத் தொகையில் ஏறக்குறைய முக்கால் பங்கினர் விவசாயிகள். ஐரோப்பிய யுத்தத்திற்கு முன்னர் நிலங்களுடன் நேர்முகமான தொடர்பு இல்லாத நிலச்சுவான்தார்களே இங்கு அதிகமாக இருந்தனர். இவர்கள் விவசாயிகளிடமிருந்து கிடைக்கும் வருமானத்தை வைத்துக் கொண்டு போலந்திலும், ருஷ்யாவிலும் ஆடம்பரமாக வாழ்ந்து வந்தனர். ஆனால் லிதுனியா, சுதந்திரம் பெற்ற பிறகு (1919ம் வருஷம்) இந்த முறை ஒழிந்தது. நிலங்கள் அவரவர்களுடைய உழைப்புக்கும், சக்திக்கும் இயன்றவாறு விவசாயிகளுக்குப் பங்கிட்டுத் தரப்பட்டன. அரசாங்கத்தாரும் நவீன முறையில் விவசாய உற்பத்தி செய்யப்படுவதற்கு ஆதரவு காட்டி வந்தனர். இதன் விளைவாக விவசாயப் பொருள்கள் பல இங்கிலாந்து, ஜெர்மனி, ருஷ்யா, பெல்ஜியம், ஹாலந்து முதலிய நாடுகளுக்கு இந்தச் சிறிய நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இந்த ஏற்றுமதி வியாபாரத்தின் பெரும்பாகம் மேற்படி மெமெல் என்ற துறைமுகப் பட்டினத்தின் வழியாகவே நடைபெறுகிறது. இந்தத் துறைமுகத்தைப் பல வழிகளிலும் அபிவிருத்தி செய்ய சென்ற பத்து வருஷ காலத்தில் லிதுனியா அரசாங்கம் சுமார் நாற்பது லட்சம் பவுன் செலவழித் திருக்கிறது. இவ்வளவு சிறப்புடைய துறைமுகத்தை ஜெர்மனி எவ்வித சிரமுமின்றி ஸ்வீகத்துக் கொண்டு விட்டது. உதாரணமாக 1924ம் வருஷத்தில் மெமெல் துறைமுகத்தில் 438,000 டன் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகி யிருக்கின்றன. 1937ம் வருஷத்திலோ 1,239,000டன் சரக்குகள் ஏற்றுமதி இறக்குமதியாகி யிருக்கின்றன.

மெமெல் துறைமுகத்தில் வசிக்கும் ஜனங்களிற் பெரும்பாலோர் ஜெர்மனியினின்றும் குடியேறி வந்த ஜெர்மானியப் பிரஜைகளே. சென்ற சில வருஷ காலமாகத் தாங்கள் ஜெர்மனியோடு இணைந்து கொள்ள வேண்டுமென்று இவர்கள் தீவிரப் பிரசாரம் நடத்தி அது காரணமாக லிதுனியா அரசாங்கத்திற்குப் பலவித தொந்திரவுகள் விளைவித்துக் கொண்டிருந்தனர். இவர்கள் செய்த கிளர்ச்சி இப்பொழுது பயன் பெற்று விட்டதல்லவா?

திரிபுரி காங்கிரஸ்

வரவேற்புக் கூட்டத் தலைவர் பிரசங்கம்

தலைவர் அவர்களே!

சகோதரப் பிரதிநிதிகளே!

குஜராத் மாகாணத்தில் மகத்தான வரவேற்பைப் பெற்ற நீங்கள் மஹாகோசலத்தின் மலைகள், ஆறுகள் இவற்றின் மத்தியிலே உங்களுக்கு அளிக்கப்படும் வரவேற்பு, மிகக் குறைபாடுடையதா யிருக்கும் என்பதை உணர்வீர்கள். ஆயினும் எங்களுடைய வரவேற்பின் எளிமைத் தனத்தைக் கண்டு, எங்கள் அன்பின் ஆழத்தை அளந்து விடாதீர்கள். நீங்கள் எந்த தேசிய ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளாக இங்கு விஜயஞ்செய் திருக்கிறீர்களோ, அந்த ஸ்தாபனத்தின் மீது நாங்கள் கொண்டுள்ள நம்பிக்கை இந்த மலைகளைப் போல் உறுதியானது. பல நாவுகள் நிறைந்த இந்தக் காடுகளோ, நாம் எந்தச் சுதந்திரத்தை அடைவதற்காக இங்குக் கூடி யிருக்கிறோமோ, அந்தச் சுதந்திரத்தை முழக்கிக் கொண்டிருக்கின்றன.

ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னர், ஸ்ரீ ராமசந்திர மகாராஜன், எங்கள் நாட்டுக்கு விஜயஞ் செய்த போது, எங்கள் காட்டு ஜாதிப் பெண்களில் ஒருத்தியான சபரி என்பாள், சில பழங்களைக் கொடுத்து உபசரித்தாள். அதுபோல் எங்கள் ஏற்பாடுகளில் ஏதேனும் குறைகளிருக்குமானால், அவற்றைப் பொருட்படுத்தாதிருக்குமாறு வேண்டுகிறேன்.

மாத்தினாலும் மூங்கிலினாலும் அமைக்கப்பெற்ற இந்த நகரத்திற்கு விஷ்ணுதத்த நகரம் என்று பெயர் வைத்திருக்கிறோம். மஹாகோசல மாகாணத்தின் முதல் தலைவரா யிருந்தவர் காலஞ்சென்ற பண்டித விஷ்ணுதத்த சுக்லா என்பவர். 1920ம் வருஷத்துக் காங்கிரஸ், மத்திய மாகாணத்திலே நடைபெறவேண்டுமென்று கூறப்பட்டபோது, மேற்படி சுக்லா, அந்தக் காங்கிரஸை ஜப்பல்பூரில் நடத்த வேண்டுமென்று பெரு முயற்சிகள் செய்தார். ஆனால் அது நாகபுரியில்நடைபெற்றது. அந்த நாகபுரி காங்கிரஸின் போதுதான், பண்டித சுக்லா மரணமடைந்தார். தனது முதல் தலைவரை, மஹாகோசலம் ஒரு நாளும் மறக்க முடியாது. அவருடைய ஞாபகார்த்தமாகத்தான், இந்தக் காங்கிரஸ் நகரத்தை நாங்கள் விஷ்ணுதத்த நகரம் என்று பெயரிட்டோம்.

1920ம் வருஷத்து நாகபுரி காங்கிரஸின் போது, பாஷை வாரியாகக்

காங்கிரஸ் மாகாணங்கள் பிரிக்கப்பட்டன. மத்திய மாகாணத்தில் ஹிந்துஸ்தானி பேசப்பெறும் ஜில்லாக்களைச் சேர்த்து இந்த மஹா கோசலம் மாகாணமாயிற்று.

காங்கிரஸ் விஷயத்தில், மஹா கோசலமானது பக்தி சிரத்தையோடு நடந்து வந்திருக்கிறது. இந்த மாகாணத்தின் சென்ற பதினெட்டு வருஷ சரித்திரம் இதனை நிரூபிக்கும். இந்த மாகாண வாசிகள், ஒத்துழையா இயக்கத்திலும் சட்ட மறுப்பு இயக்கத்திலும் பூரணமாக ஈடுபட்டார்கள். நாகபுரியில் வெற்றி பெற்ற கொடி சத்தியாக்கிரகம், ஜப்பல்பூரில்தான் தொடங்கப்பெற்றது. எங்கள் மாகாணத்தின் தூண்டுதல் பேரில்தான், காட்டுச் சத்தியாக்கிரகம் தொடங்கப் பெற்றது.

பார்லிமெண்டரி வேலைகளிலும் எங்கள் மாகாணம் பின்னடையவில்லை. 1923ம் வருஷத்துத் தேர்தலின் போது, வங்காளத்திலும், மத்திய மாகாணத்திலுந்தான் சுயராஜ்யக் கட்சியினர் பெரும்பான்மையோராக வெற்றி பெற்றனர். வங்காளத்தில், இந்தப் பெரும்பான்மைக் கட்சியானது, சிறிது காலத்திற்குள் உடைந்து விட்டது. ஆனால் மத்திய மாகாணத்திலோ, மூன்று வருஷகாலமாய் எந்தவிதமான மந்திரிச் சபையும் அமைக்க முடியாமல் போய் விட்டது. 1926ம் வருஷத்துத் தேர்தலின் போது, எங்கள் மஹா கோசலம், காங்கிரஸைப் பின்பற்றி நின்றன. 1937ம் வருஷத்துத் தேர்தலின் போதும், எங்கள் மாகாணமே முதன்மையாகஇருந்தது. இவைகளுக்கெல்லாம் என்ன காரணம்? இந்த மாகாண வாசிகள், காங்கிரஸைத் தவிர, வேறு எந்த ஸ்தாபனத்தின் மீதும் தங்கள் கவனத்தைச் செலுத்தியதே கிடையாது. இந்த மாகாணத்தில் நடைபெறும் எல்லாத் தேர்தல் போராட்டங்களும், காங்கிரஸ்காரர்களுக்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளுக்குமாகவே இருக்கும். ஆக, எங்களிடத்தில் நீங்கள் வேறெவ்வித மான குறைகளைக் கண்டபோதிலும், தாய் நாட்டுப் பற்று என்னும் விஷயத்தில் நாங்கள் யாருக்கும் பின்னடைந்தவர்களல்ல.

இப்பொழுது உலகமானது ஒரு பெரிய நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் சிறு சிறு யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. என்றைக்காவது ஒரு நாள், உலக யுத்தம் தொடங்கித்தான் விடும். இந்த யுத்தங்களினின்று ஒதுங்கியிருக்க வேண்டுமென்று இந்தியா, எவ்வளவு விரும்பினாலும் அது நடைபெறாது. அப்படிப்பட்ட யுத்த காலத்தில், நாம் எந்தவிதமாக நடந்து கொள்வதென்பது, பிரிட்டன், பிரான்ஸ் இவற்றின் நிலைமையை ஒரு பக்கமாகவும், ஜெர்மனி, இத்தலி இவற்றின் நிலைமையை வேறொருபுறமாகவும், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய இவற்றின் நிலைமையை மற்றொருபுறமாகவும் வைத்துப் பார்க்க வேண்டும். அபிசீனியாவை இத்தலி ஜெயித்து விட்ட பிறகு, இத்தாலிய ஏகாதிபத்தியத்திற்கும் நமக்கும் இடையில் அராபியக் கடல்தான் இருக்கிறது. ஸ்பெயினில் இப்பொழுது இத்தலியும் ஜெர்மனியும் காலூன்றிக் கொண்டு விட்டதால், மத்தியதரைக் கடல் மார்க்கமானது, இனி பிரிட்டனுக்கு அவ்வளவு பாதுகாப்புள்ள மார்க்கமா

யிராது. ஏதாவது ஒரு யுத்தம் நேரிட்டால், நமது ராணுவப் படைகள் உடனே ஐரோப்பாவுக்கு அனுப்பப் படுகின்றன. இந்தியாவின் மீது வெளி நாடு ஒன்று தாக்குமானால், நம்மைப் பாதுகாத்துக் கொள்ளும்படியான நிலைமையில் நாம் இல்லை. மேனாட்டிலிருந்து மட்டுமல்ல, கீழ் நாட்டிலிருந்தும் படை யெடுக்கப் படுவதாக இப்பொழுது பயமுறுத்தப் படுகிறோம். ஜப்பான், தற்போது ஆதிக்கம் பெற்றுவருவது நமக்குப் பெரிய ஆபத்து. 1914ம் வருஷத்து மஹா யுத்தத்தின்போது, ஜப்பான் ஒதுங்கி நின்றது. ஆனால் இனி நடைபெறக் கூடிய யுத்தத்தில் அம்மாதிரி அப்படி யிராது.

ம்யூனிக் ஒப்பந்த காலத்தில் ஜெக்கோ ஸ்லோவேகியா பலிகொடுக்கப்பட்டதுகூட ஜப்பானிடத்தில் கொண்டுள்ள பயந்தான் காரணமென்று சில அமெரிக்கப் பத்திரிகைகள் கூறின. ஜெக்கோ ஸ்லோவேகியாவின் காரணமாக இங்கிலாந்து, ஜெர்மனி மீது படை யெடுக்குமானால், ஜப்பான் உடனே இந்தியா மீதும், ஆஸ்திரேலியா மீதும் படை யெடுக்கும் என்று கீழ் நாட்டிலுள்ள பிரிட்டிஷ் துப்பறி ஏஜெண்டுகள் தகவல் கொடுத்ததினாலேயே, ஸ்ரீ சேம்பர்லேன் ஹிட்லரைப் பார்க்கச் சென்றதாகவும், பின்னர் ஜெக்கோ ஸ்லோவேகியா பலியிடப் பெற்றதாகவும் கூறப்படுகின்றன.

மத்தியதரைக் கடலானது இப்பொழுது ஏறக்குறைய இத்தலியின் ஏரியாகி விட்டது. கீழ் நாட்டிலுள்ள பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளை இனிக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் பிரிட்டனானது அமெரிக்காவின் உதவியைத் தேட வேண்டியது அவசியமாயிருக்கிறது. அதாவது கீழ் நாட்டிலுள்ள தன்னுடைய நாடுகளை அமெரிக்கா காப்பாற்றிக் கொடுக்க வேண்டுமென்று பிரிட்டன் எதிர்பார்க்கிறது. ஆனால் இங்ஙனம் பரோபகார நோக்கத்துடன் ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு உதவி செய்ததாகச் சரித்திரம் குறிப்பிடவில்லை. இதனாலேயே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான எண்ணம் அமெரிக்காவில் வலுத்து வருகிறது.

இந்த நிலையில் பிரிட்டன், இந்தியாவை எப்படிக் காப்பாற்றப் போகிறது என்பது சந்தேகமாயிருக்கிறது. இந்தியா, தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் அப்படிக் காப்பாற்றிக் கொள்வதற்கு ராணுவ நிர்வாகமும் அந்நிய நாட்டுக் கொள்கையும் அதன் கைவசத்தில் இருக்க வேண்டும். எனவே இந்தியாவின் சுதந்தரத்தினின்று இந்தியாவின் தற்காப்புப் பிரச்னை பிரிக்க முடியாத தொன்று என்பது விளங்குகிறது.

ஜெர்மனி, ஜப்பான், இத்தலி முதலிய நாடுகள் தங்களுடைய ஜனப் பெருக்கத்திற்குத் தேவையான புதிய நாடுகள் பல வேண்டும் என்று கூக்குரலிடுவதாகச் சொல்லப் படுகிறது. இந்தக் கண்கொண்டு நாம் பார்த்தோமானால் இந்தியாவின் தேவைகள் மிக அதிகமா யிருக்கின்றன. அதன் ஜனத்தொகையும் வர வர பெருகிக் கொண்டு வருகிறது. ஆனால் மற்ற நாடுகளோ இந்தியர்களுக்கு இடமில்லை என்று கூறுகின்றன. சுமார் ஒரு நூற்றாண்டாக இந்தியர்கள் வெளி நாடுகளில்

சென்று குடியேறி தங்களுடைய உழைப்பினால் அந்தந்த நாடுகளை வளம்படுத்தி யிருக்கிறார்கள். இத்தகைய நாடுகளில்கூட நமது சகோதரர்கள் சமத்துவமாகவும் சமாதானமாகவும் வாழ முடியாம லிருக்கிறது.

உதாரணமாகத் தென்னாப்பிரிக்காவிலுள்ள கெனியா மாகாணத்து மேட்டுப் பிரதேசங்களில் எந்த வெள்ளையரும் நிலம் வாங்கிக் கொண்டு குடியேறலாம். ஆனால், கருப்பு நிறத்தவர்களுக்கோ அந்த உரிமை யில்லை. வெள்ளை நிறத்தவர் பிரிட்டிஷ் பிரஜைக ளல்லாதாரா யிருந்தும், அவர்களுக்கு இந்தக் குடியேறும் உரிமை அளிக்கப் படுகிறது. ஆனால் பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையில் அநேக ஆண்டுகளாக இந்த நாட்டிலே வாழ்ந்து வந்த நமது சகோதரர்களுக்கு இந்தக் குடியேறும் உரிமை மறுக்கப் படுகிறது. தாங்கனிகா மாகாணத்தை ஜெர்மனிக்குத் திருப்பிக் கொடுத்து விடுவது என்று பேசப்படுவதைக்கூட பிரிட்டன் சகித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், தென்னாப்பிரிக்காவிலும் கிழக்காப்பிரிக்காவிலும் உள்ள தனது பிரஜைகளின் நன்மையைப் பாதுகாக்க முடியவில்லை யென்று பிரிட்டன் கூறுகிறது.

சென்ற வருஷம்தான் இந்தியா அரசாங்கம் தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தோடு ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தம் இந்திய வியாபாரிகளின் நன்மைக்கு விரோதமானது. இதற்கு இந்தியா சட்ட சபையின் அனுமதியும் கோரப்பட வில்லை. சமீபத்தில் தான் தென்னாப்பிரிக்கா யூனியன் மந்திரி யொருவர், நேட்டாலிலும், டிரான்ஸ்வாலிலும் உள்ள இந்தியர்களை ஓர் ஒதுக்குப் புறத்தில் குடியேற்ற வைக்க வேண்டும் என்பதான ஒரு சட்டத்தைச் செய்ய வேண்டு மென்று கூறினார். இலங்கை, பிஜி, மலேயா, பிரிட்டிஷ் கயானா முதலிய நாடுகளில் வசிக்கும் நம்மவர்களுக்கு அதிகமான தொந்தரவுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. ஆப்பிரிக்காவிலுள்ள நமது சகோதரர்கள் எவ்வளவு பரிதாபகரமான நிலைமையி லிருக்கிறார்கள் என்பதைச் சென்ற வருஷம் நான் கண்ணாரப் பார்த்தேன். அப்பொழுதுதான் இந்தியாவின் அரசியல் அடிமைத்தனம் நமக்கு நன்கு புலனாகிறது. நாம் சுதந்திரம் பெற்றிருந்தோமானால் இந்த மாதிரியான நிலைமையை ஒரு நாளைக்காவது விட்டு வைத்திருப்போமா? நான் தென்னாப்பிரிக்காவிற்குப் போன பிறகுதான் பல வருஷங்களாக இந்தியர்களின் உரிமைக்குப் போராடி வந்த மகாத்மா காந்தி ஏன் இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தில் தலை கொடுத்தார் என்ற உண்மை எனக்குப் புலனாகியது.

சகோதரர்களே! நாம் எந்த திசையை நோக்கிப் பார்த்தாலும் நமக்குக் கஷ்டங்கள்தான் ஏற்பட்டுக் கொண்டு வருகின்றன. இந்த நிலையில் நம்முடைய தேவைக ளென்ன? உறுதியான தேசாபிமானம்; அரசியலிலே நிதான புத்தி; சிறந்த தலைவர். அந்தோ! இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நம்மிடையே பிணக்குகள் பல தோன்றி யுள்ளன. நட்டாற்றிலே போய்க் கொண்டிருக்கிற போது நாம் ஏறிக்கொண்டு வந்த குதிரையை மாற்றுவோமா என்று யோசிக்கிறோம்.

இந்தியாவின் சுதந்தரப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டது. அநேக சமயங்களில் இந்தக் காங்கிரஸில் நாம் சர்வாதிகாரிகளைப் பின்பற்றி வந்திருக்கிறோம். காங்கிரஸ் வாயிலாகப் பல இயக்கங்கள் தோன்றிய காலத்தில் நாம் ஜனநாயக முறையைப் பின்பற்ற முடியாமல் போயிருக்கிறது. ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்று சொல்லப்படுகிற இங்கிலாந்தில்கூட யுத்த சமயங்களில் சர்வாதிகாரிகளின் கீழ்தான் மந்திரிச் சபை அமைக்கப்படுகிறது. நம்முடைய காங்கிரஸ் ஸ்தாபனத்தை இத்தலியிலுள்ள பாசிஸ்ட் கக்ஷிக்கும் ஜெர்மனியிலுள்ள நாஜி கக்ஷிக்கும் ருஷ்யாவிலுள்ள பொதுவுடமைக் கக்ஷிக்கும் ஒப்பிடலாம். ஆனால், அவை பலாத்காரத்தைப் பின்பற்றுகின்றன. நாமோ அஹிம்சா தர்மத்தைப் பின்பற்றுகிறோம். இத்தலியிலுள்ள எல்லோரும் பாசிஸ்ட்டுகளல்ல. ஜெர்மானியர் அனைவரும் நாஜிகளல்ல. ருஷ்யாவிலுள்ள அத்தனை பேரும் பொதுவுடமைக்காரர்களாக மாட்டார்கள். ஆனாலும், அந்தந்த நாட்டாரும் அந்தந்தக் கக்ஷிகளில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எல்லா இந்தியர்களும் காங்கிரஸ் அங்கத்தினர்களல்ல. ஆயினும் எல்லா இந்தியர்களும் காங்கிரஸில் பற்றுடையவர்களே. பாசிஸ்ட்டுகளின் மத்தியில் முஸோலினிக்கும், நாஜிகளின் மத்தியில் ஹிட்லருக்கும், பொதுவுடமை வாதிகளின் மத்தியில் ஸ்டாலினுக்கும் எந்த ஸ்தானம் இருக்கிறதோ அதே ஸ்தானத்தைத் தான் மகாத்மா காந்தி காங்கிரஸ்காரர்களிடையே வகிக்கிறார். இப்பொழுது அமைக்கப் பட்டிருக்கிற காங்கிரஸ், மகாத்மா காந்தியின் சிருஷ்டி. காங்கிரஸின் நோக்கமும், அதனை அடைகிற முறையும், சத்தியமும் அஹிம்சையுமாகவே யிருக்க வேண்டுமென்று மகாத்மா காந்திதான் முதலில் கூறினார். சென்ற இருபது வருஷங்களாக நடைபெற்று வருகிற சுதந்திரப் போராட்டங்கள் அத்தனையும் காந்தியடிகளினாலேயே தொடங்கப் பெற்று, அவராலேயே நடத்தப் பெற்று, அவராலேயே முடிக்கவும் பெற்றிருக்கின்றன. காங்கிரஸ் சட்டத்தில் மகாத்மா காந்திக்கு எந்தவிதமான இடமும் இல்லை யென்பது உண்மைதான். ஆனால் காங்கிரஸ் தலைவராக யார் இருக்க வேண்டுமென்று மகாத்மா காந்தி விரும்புகிறாரோ அவரைத்தான் தலைவராகத் தேர்ந்தெடுப்பதும், யாரார் காரியக் கமிட்டியில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறாரோ அவர்களையே நியமிப்பதும் நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிற பழக்கமில்லையா? உண்மையில் அவர் காங்கிரஸின் சர்வாதிகாரி போலவே யிருந்து வந்திருக்கிறார்.

பண்டித ஜவஹர்லால் நேரு ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது, காங்கிரஸை விட காந்தியடிகள் பெரியவர் என்று கூறினார். இந்தியாவிலுள்ள எல்லாருடைய நம்பிக்கையைப் பெற்ற போதிலும், மகாத்மா காந்தியின் நம்பிக்கையைப் பெறாமல் போனால் அது பெரிதும் விசனிக்கத்தக்கதென்று, இந்த வருஷத்துக் காங்கிரஸ் பிரசிடெண்ட் கூறினார். இது பெரிதும் பாராட்டத் தக்கது.

நாம் இன்று ஒரு விநோதமான நிலையில் கூடியிருக்கிறோம். இந்த வருஷத்துக் காங்கிரஸுக்குத் தலைவரைத்

தெரிந்தெடுத்ததானது, தனது தோல்வி யென்று மகாத்மா காந்தி ஒப்புக் கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஆறு மாத முன்னெச்சரிக்கை கொடுத்து விட்டு, பிறகு நேர்முகமான போராட்டத்தை நடத்துவதே புதிய வேலைத் திட்டமென்று கூறப்படுகிறது. எனக்குத் தெரிந்த மட்டில், மகாத்மா காந்தியோ அவருடைய மற்ற சகாக்களோ, சமஷ்டி திட்டத்தை ஒப்புக் கொள்ள முடியாதென்பதில் உறுதியாயிருக்கிறார்கள். இதை நாம் மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால், சமஷ்டியை எதிர்த்துப் போராட்டம் நிச்சயமாக நடைபெறும் என்று தெரிகிறது. இந்தப் போராட்டத்தை எப்படி எப்பொழுது நடத்துவதென்பதைப் பற்றித்தான் இப்பொழுதைய பிரச்னை. அப்படி நடைபெறுகிற போராட்டமானது, அஹிம்சா தர்மத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்குமென்று நான் நம்புகிறேன். அஹிம்சா தர்மத்தின் ஆசாரியார் மகாத்மா காந்தி. இந்த அஹிம்சைப் போராட்டத்தை எப்படி நடத்துவதென்பதைப் பற்றிய முறைகள் அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், சமஷ்டி போராட்டம் எப்படி, எப்பொழுது நடத்துவதென்பதைப் பற்றிய முடிவை அவர் பொறுப்பிலேயே விட்டு விடுவது நல்லது.

·

பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள பெரும்பாலான மாகாணங்கள், காங்கிரஸ் நிருவாகத்தின் கீழ் இருக்கின்றன. மற்ற மாகாணங்களிலும் காங்கிரஸ் ஆட்சியை ஸ்தாபிக்க வேண்டுமென்பது காங்கிரஸ் தலைவருடைய நோக்கமென்று கருதுகிறேன். சுதேச சமஸ்தானங்களில் காந்தியடிகள் போராட்டத்தைத் தொடங்கி யிருக்கிறார். இதன் பயனாக ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி, ஸ்ரீமதி மணிபென் படேல், சேத் ஜமுனாலால் பஜாஜ் முதலியோர் நம்மினின்று பிரிக்கப்பட்டிருக்கின்றனர். மற்ற எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸானது, தனது ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளுமானால், சமஸ்தானப் போராட்டத்தில் அது தன் முழு பலத்தையும் செலுத்த முடியும். தகுந்த சந்தர்ப்பத்தில், மகாத்மா காந்தி, இந்தப் போராட்டத்திற்கு ஒரு புதிய கலையைக் கொடுப்பார் என்பது மட்டும் நிச்சயம். இன்று தலைவர் எது நடைபெற வேண்டுமென்று சொல்கிறாரோ அது நாளை நடைபெறுமென்பது நிச்சயம். உடனே போராட்டத்தைத்தொடங்க வேண்டுமென்ற உற்சாகமுடையவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். ஆனால் அரசியலில், வெறும் உற்சாகம் மட்டும் வெற்றியை அளிக்காதல்லவா? தலைவரிடத்தில் நம்பிக்கையும், போர் முகத்தில் ஒழுங்கும் அத்தியாவசியமானவை. சென்ற இருபது வருஷகாலத்தில் மகாத்மா காந்தியின் தலைமையில் தேசம் அடைந்த மகத்தான வலுவை, சரித்திரத்தில் எப்பொழுதுமே பார்க்க முடியாது. அநுபவம் நிறைந்த ஒரு சேனாதிபதி போல், அவர் நம்மைப் பல முறை முன்னேற்ற மடையச் சொல்லியும், சில சமயங்களில் மெதுவாகப் போகுமாறும், வேறு சந்தர்ப்பங்களில் நிற்கும்படியும் கூறி வந்திருக்கிறார். அவருடைய தலைமையில் இன்றும் நாம் தடுமாறி விழவில்லை. அப்படியிருக்க அவருடைய தலைமையில் நாம் முன்னேறிச் செல்ல ஏன் தயங்க வேண்டும்? 'வீர மில்லாத ராஜ தந்திரம் கோழைத் தனமாகும். ராஜ

தந்திர மில்லாத வீரம் மிருகத்தனமாகும்' என்று காளிதாஸ மகா கவி கூறினார். மகாத்மா காந்திக்கு வீரமும் ராஜ தந்திரமும் இரண்டும் நிறைந்திருக்கின்றன. அவர் புஷ்பத்தைப் போல் மென்மையானவர்; வைரத்தைப் போல் உறுதியானவர். நமது சுதந்திர விரோதிகள், இந்த மென்மையின் கீழ் உறுதி மறைந்திருப்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். நாம் தான், அதனை பலஹீனமென்று சிலசமயங்களில் கூறுகிறோம்.

இந்தியாவின் நிலைமையும் சர்வதேச நிலைமையும் இப்பொழுது மிகவும் சிக்கலா யிருக்கின்றன. இந்தக் காங்கிரஸுக்கு விஜயஞ் செய்துள்ள எல்லாரும், சரியான முடிவுகாணும் ஆற்றல் பெறுவார்க ளென்று நம்புகிறேன்.

சகோதர சகோதரிகளே!

மஹா கோசலத்தின் சார்பாக, உங்களுக்கு மீண்டும் வரவேற்பளிக்கிறேன். எங்களுடைய ஏற்பாடுகளில் ஏதேனும் குறைகள் இருந்தால் அதனையும், என்னுடைய பிரசங்கத்தில் ஏதேனும் குறை யிருந்தால் அதனையும் மன்னிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

வந்தே மாதரம்!

தலைவர் பிரசங்கம்

உபசரணைக் கூட்டத் தலைவரே! சகோதரிகளே! சகோதரர்களே! இந்திய தேசியக் காங்கிரசின் தலைமைப் பதவிக்கு மீண்டும் என்னைத் தெரிந்தெடுத்து கௌரவப் படுத்தியதற்காக என் மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு, திரிபுரியில் என்னை உத்ஸாகத்துடன் வரவேற்று உபசரித்தமைக்கும் நன்றி பாராட்டுகிறேன். எனது வேண்டு கோளுக்கிணங்க, இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் சாதாரணமாக நடைபெறும் ஆடம்பர உபசாரங்களையும் நீங்கள் எனக்காகத் தள்ளி வைத்து விட்டீர்கள்.

தோழர்களே! ராஜகோட்டை விஷயத்தில் மகாத்மா காந்தி எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெற்றமை குறித்தும் அது காரணமாக அவருடைய உண்ணுவிரதம் முடிவு பெற்றது குறித்தும் நாம் பரம சந்தோஷமடைகிறோம் என்பதை உங்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்காக நாடு முழுவதும் மகிழ்ச்சி யடைகிறது; பெரிய பொறுப்பு நீங்கினதாகவும் உணர்கிறது.

தோழர்களே! இந்த வருஷம் பல வழிகளிலும் அசாதாரணமான வருஷமாகவே யிருக்கும் என்று தோன்றுகிறது. இவ்வருஷத்தில் தலைவர் தேர்தல் சாதாரண ஒரு சம்பவம் போல நடைபெறவில்லை. தேர்தலுக்குப் பின்னர் பல விபரீதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் பதினைந்து பேரில், சர்தார் படேல், மௌலானா அஸாத், டாக்டர் ராஜேந்திர பிரசாத் முதலியோரைத் தலைவராகக்கொண்ட பன்னிரண்டு அங்கத்தினர்கள் ராஜீநாமாச் செய்து விட்டார்கள். காரியக் கமிட்டியின் மற்றொரு பிரபல அங்கத்தினராகிய பண்டித நேரு ராஜீநாமாச் செய்யா விட்டாலும் பின்னர் அவர் வெளியிட்ட ஓர் அறிக்கையின் பயனாக அவரும் சேர்ந்து ராஜீநாமாச்

செய்து விட்டார் என்று பலரும் நினைத்தனர்.

திரிபுரி காங்கிரஸ் தொடங்குவதற்கு முன்னர் ராஜகோட்டை சம்பவங்கள், மகாத்மா காந்தியை உண்ணாவிரதமிருக்கும்படி செய்து விட்டன. காங்கிரஸ் தலைவனாகிய நானோ ஒரு நோயாளியாகத் திரிபுரிக்கு வந்து சேர்ந்தேன். ஆதலின் இவ்வருஷத்து காங்கிரஸ் தலைவருடைய தலைமை உரையானது மிகச் சுருக்கமாகவேயிருப்பது பொருத்தந்தான்.

தோழர்களே! இந்திய தேசிய காங்கிரஸின் விருந்தினர்களாக எகிப்திலிருந்து வாப்து கக்ஷிப் பிரதிநிதிகள் நம்மிடையே இங்கு விஜயம் செய்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். என்னோடு சேர்ந்து நீங்களும் அவர்களுக்கு மனப்பூர்வமான வரவேற்பை அளிக்கிறீர்கள் என்பது நிச்சயம். நமது வேண்டுகோளுக்கிணங்க அவர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்ததைக் குறித்து நாம் மகிழ்ச்சி யடைகிறோம். வாப்து கக்ஷியின் தலைவராகிய முஸ்தபா எல்—நஹாஸ் பாக்ஷா அவர்கள் இந்த பிரதிநிதிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து இந்தியாவிற்கு நேரில் விஜயம் செய்ய முடியாமை குறித்து நாம் வருத்தப்படுகிறோம். வாப்து கக்ஷியின் தலைவரையும் மற்ற முக்கிய அங்கத்தினர்களையும் நான் நேரில் அறிவேனாதலின் என்னுடைய மகிழ்ச்சி இன்று அளவிடுதற்கு முடியாததாக யிருக்கிறது. நமது தாய் நாட்டுச் சகோதரர்களின் சார்பாக மீண்டும் அவர்களுக்கு வரவேற்பளிக்கிறேன்.

1938ம் வருஷம் பிப்ரவரி மாதம் நாம் ஹரிபுராவில் கூடியதற்குப்பிறகு, சர்வதேச விஷயங்களில் அநேக முக்கிய விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன. இவற்றுள் முக்கியமானது 1938ம் வருஷம் செப்டம்பர் மாதத்து ம்யூனிக் ஒப்பந்தம். இந்த ஒப்பந்தம் எதைக் காட்டுகிறது? மேற்கு ஐரோப்பியவல்லரசுகளான பிரான்ஸ், கிரேட் பிரிட்டன் முதலியன, நாஜி ஜெர்மனிக்குப் பணிந்து விட்டன என்பதைக் காட்டுகிறது. இதன் விளைவாக, பிரான்ஸானது ஐரோப்பாவிலே செல்வாக்கிழந்து நிற்கிறது. ஒரு குண்டு கூட போடாமல் ஜெர்மனி இந்த செல்வாக்கைப் பெற்றுக் கொண்டு விட்டது. சமீபத்தில் ஸ்பெயினில் குடியரசு அரசாங்கம் சிதறி உடைந்து போனது இத்தலிக்கும் ஜெர்மனிக்கும் அதிக வலுவைக் கொடுத் திருக்கிறது. ஐரோப்பிய அரசியலி லிருந்து சோவியத் ருஷ்யாவை விலக்கிவிடும் பொருட்டு ஜனநாயக வல்லரசுகளாகிய பிரான்ஸும் கிரேட் பிரிட்டனும் இத்தலியோடும் ஜெர்மனியோடும் சேர்ந்து கொண்டு விட்டன. இஃது எத்தனை நாட்களுக்கு நீடிக்கும்? ருஷ்யாவை அவமானப் படுத்துவதனால் பிரான்ஸும் கிரேட் பிரிட்டனும் அடைந்த பயன்தான் என்னை?

சமீப காலத்தில் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு பார்த்தோமானால் பிரிட்டிஷ், பிரான்ஸ் ஏகாதிபத்தியங்களின் செல்வாக்கும் பலமும் வரவரக் குறைந்து கொண்டு வருவதைக் காணலாம்.

உள்நாட்டு விஷயங்களை எடுத்துக் கொள்வோம். எனது தேக அசௌகரியம் காரணமாக முக்கியமான சில விஷயங்களைப் பற்றியே பேச விரும்பு

கிறேன். சுயராஜ்யப் பிரச்னையைக் கிளப்பி நம்முடைய தேசிய கோரிக்கையை ஓர் எச்சரிக்கை மூலமாகத் தயாரித்து பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டிய காலம் வந்துவிட்ட தென்று நான் நீண்ட நாட்களாக உணர்ந்து வருவதை இன்று வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாம் மௌனமாக இருந்து கொண்டு சமஷ்டி திட்டம் நம்மீது திணிக்கப்படுகிறவரை பொறுத்திருக்கக்கூடிய காலம் எப்பொழுதோ போய்விட்டது. எப்பொழுது நம்மீது சமஷ்டி திட்டம் திணிக்கப்படும் என்பது முக்கியபிரச்னையல்ல. ஐரோப்பிய நிலைமையை உத்தேசித்து இந்த சமஷ்டி திட்டத்தை இன்னும் கால வரையரையின்றித் தள்ளிப் போட்டால் என்ன செய்வது என்பதுதான் முக்கிய பிரச்னை. நான்கு வல்லரசுகளின் ஒப்பந்தம் காரணமாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ ஐரோப்பாவில் சமாதானம் நிலைக்குமானால் அப்பொழுது பிரிட்டனானது தனது ஏகாதிபத்தியக் கொள்கையை வலுவாக அனுஷ்டிக்கத் தொடங்கும். பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு விரோதமாக அராபியர்களுக்கு சலுகை காட்ட முயல்வது ஏன்? சர்வதேச வியவகாரங்களில் இப்பொழுது பிரிட்டனுக்கு செல்வாக்கு இல்லாததுதான் காரணம். ஆகையால் நாம் நமது தேசிய கோரிக்கையை ஓர் எச்சரிக்கை மூலமாகத் தெரிவித்து குறிப்பிட்ட ஒரு காலத்திற்குள் பதில் கிடைக்க வேண்டும் என்று கூற வேண்டும். அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் கிடைக்காவிட்டாலோ, அல்லது அதிருப்திகரமான பதில் கிடைத்தாலோ நம்முடைய சக்திக்கியன்ற காரியங்களைச் செய்ய வேண்டும்.

நம்மிடத்திலே உள்ள ஆயுதங்கள் என்ன? சத்யாக்கிரகம் அல்லது பொதுஜன சட்டமறுப்பு. பிரிட்டிஷ் அரசாங்கம் தற்போது உள்ள நிலையில் அகில இந்திய சத்தியாக்கிரக இயக்கத்தை எதிர்த்துச் சமாளிக்க முடியாது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துத் தாக்கக்கூடிய காலம் இன்னும் வரவில்லை என்று கருதும் சில நிரானுகூல வாதிகள் நம்மவரிலே இருப்பதைக் குறித்து நான் பெரிதும் வருந்துகிறேன். நிலைமையை உள்ளபடி ஆராய்ந்து பார்த்தால் இது விஷயத்தில் நாம் எவ்வித சந்தேகப் படுவதற்கும் காரணமே யில்லை. எட்டு மாகாணங்களிலே நாம் அரசாங்க நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதன் மூலமாக நமது தேசிய ஸ்தாபனத்தின் செல்வாக்கும் சக்தியும் அதிகரித்திருக்கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் பொதுஜன இயக்கமானது வலுத்து நிற்கிறது. சமஸ்தானங்களிலோ எதிர்பாராத ஒருவிழிப்பு ஏற்பட்டிருக்கிறது. நமது தேசிய சரித்திரத்தில் இதை விடத் தருந்த காலம்—சிறப்பாக சர்வதேச நிலைமை நமக்கு சாதகமாக இருக்கிற போது—வெறெப்பொழுது வரப் போகிறது? தற்போதைய நிலைமைகள் யாவும் நாம் நம்பிக்கை கொள்வதற்கு அநுகூலமாக, நமக்குச் சாதகமாக இருக்கின்றன. நாம் நமது வேற்றுமைகளைக் களைந்து நமது சக்திகளை ஒன்று திரட்டிக் கொண்டு தேசியப் போராட்டத்தில் ஈடு படுவோமானால் நமக்கு சாதகங்கள் பல உண்டு. இதை விடுத்து ஒரு தேசத்தின் வாழ்க்கையில் அரிதாகக்

கிடைக்கிற சந்தர்ப்பத்தை இழந்து விடுவதா?

பிரிட்டிஷ் இந்தியாவிலும் சுதேச சமஸ்தானங்களிலும் ஏற்பட்டிருக்கிற விழிப்பைக் குறித்து ஏற்கனவே கூறியிருக்கிறேன். சமஸ்தானங்களின் விஷயமாக ஹரிபுரா காங்கிரஸில் நிறைவேற்றிய தீர்மானத்தை மாற்றியமைக்க வேண்டுமென்பது என்னுடைய உறுதியான எண்ணம். சமஸ்தானங்களில் காங்கிரஸின் பெயரால் சில நடவடிக்கைகள் நடைபெறக்கூடாதென்று மேற்படி தீர்மானம் கூறியிருக்கிறது. அந்தத் தீர்மானத்தின்படி காங்கிரஸ் பெயரால் எவ்வித பார்லிமெண்டரி வேலைகளும் சமஸ்தானங்களில் நடைபெறக் கூடாது. இப்பொழுது நாம் என்ன காண்கிறோம்? பிரிட்டிஷ் அரசாங்கமும் சமஸ்தானப் பிரஜைகளோடு காங்கிரஸானது ஒன்று சேர வேண்டாமா? இன்று நமது கடமை என்ன என்பதைப்பற்றி எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை. சமஸ்தானங்களில் நடைபெற வேண்டிய சுதந்திரப் போராட்டத்திற்குக் காங்கிரஸ் காரியக் கமிட்டி தலைமை வகித்து நடத்த வேண்டும். இது வரையில் நடைபெற்றிருக்கிற வேலையானது ஏதோ அங்குமிங்குமாகத்தான் நடைபெற்றிருக்கிறது. ஒருவித வேலைத் திட்டமோ ஒழுங்கோ இல்லை. ஆனால் காரியக் கமிட்டியானது இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, ஒழுங்கான வேலைத் திட்டத்துடன் காரியங்களை நடத்த வேண்டும். அவசியமானால் இதற்காக ஒரு விசேஷ சப் கமிட்டியையும் நியமிக்கலாம். இது விஷயத்தில் மகாத்மா காந்தியினுடையவும் அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டினுடையவும் பூரண ஒத்துழைப்பையும் நாம் பெற வேண்டும்.

சுயராஜயத்தை நோக்கிக் கடைசி முறையாக நாம் முன்னேறிச்செல்ல வேண்டும் எனபதைப்பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். அதற்கு நாம் அதிகமான தயாரிப்புகளைச் செய்து கொள்ள வேண்டும். முதலில், அதிகார மோகத்தின் காரணமாக நம்மிடையே ஏற்பட்டுள்ள பலவித மான கோளாறுகளையும் நாம் தயவு தாக்ஷண்யமின்றி நீக்க வேண்டும். அடுத்தபடியாக ஏகாதிபத்திய சக்திகளுக்கு விரோதமாக தேசத்திலே உள்ள எல்லா இயக்கங்களுடனும்—சிறப்பாக கிஸான் இயக்கம், தொழிலாளர் இயக்கம் முதலியவைகளுடன்—காங்கிரஸானது ஒத்துழைக்க வேண்டும். தேசத்திலுள்ள எல்லா முன்னேற்ற சக்திகளும் ஒன்று சேர்ந்து ஏகாதிபத்திய சக்திகளை எதிர்த்துப் போராடும் முயற்சியில் இறங்க வேண்டும்.

தோழர்களே! இன்று காங்கிரஸில் பல மேகங்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. பிணக்குகள் பல ஏற்பட்டிருக்கின்றன. இது காரணமாக நமது நண்பர்களில் பலர் சோர்வுற்றுக் கிடக்கிறார்கள். ஆனால் நானோ ஒரு பெரிய சர்வானுகூலவாதி. இப்பொழுது காங்கிரஸில் ஏற்பட்டுள்ள கலக்கமானது சீக்கிரத்தில் தெளிந்து விடக்கூடும். என்னுடைய நாட்டாரின் தேச பக்தியில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. மிக விரைவில், நம்மிடத்தில் தோன்றியுள்ள வேற்றுமைகளெல்லாம் அறவே நீங்கிவிடும். ஒற்றுமை நிலைத்து நிற்கும். 1923ம் வருஷத்து கயா காங்கிரஸின்போது

ஏற்பட்ட நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு தான் தேசபந்து தாசரும் பண்டித மோதிலால் நேருவும் சுயராஜ்யக் கட்சியை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய ஆன்மாக்களும் மற்ற இறந்து போன புனித மக்களின் ஆத்மாக்களும் சேர்ந்து நமக்கு தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து வழி காட்டுமாக. நமக்கு தலைவரா' யிருந்து வழி காட்டும், மகாத்மா காந்தியினுடைய ஆசீர்வாதமும் நமக்குத் துணையாய் நிற்குமாக. இதுதான் எனது பிரார்த்தனை.

வந்தேமாதரம்.

நிறைவேறிய தீர்மானங்கள்

வாப்து பிரதிநிதிகளுக்கு வரவேற்பு.

எகிப்திலுள்ள வாப்து கட்சிப் பிரதிநிதிகளுக்கு இந்தக் காங்கிரஸ் வரவேற்பு அளிக்கிறது. அவர்களுடைய இந்த விஜயமானது, இந்தியாவிலும் எகிப்திலும் நடைபெறுகிற சுதந்திர இயக்கங்களின் ஒற்றுமைச் சின்னமாக இலங்குகிறது. எகிப்திய மகா ஜனங்களுக்கு இந்தக் காங்கிரஸானது தனது வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்கள் பூரண சுதந்திரமடைய வேண்டுமென்றும் கோருகிறது. உலக சமாதானம், உலக சுதந்திரம் இவற்றை முன்னிட்டு எகிப்திய, இந்திய மகா ஜனங்களின் ஒத்துழைப்பு விருத்தியடையும் என்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

சீனாவுக்கு அநுதாபம்.

சீன மகா ஜனங்களுக்கு இந்தக் காங்கிரஸானது தனது வாழ்த்தைத் தெரிவிக்கிறது. கொடுமையான, மனிதத் தன்மையற்ற ஏகாதிபத்தியத்தின் பெயரால் தொடுக்கப்பெற்றுள்ள யுத்தத்தை எதிர்த்து சீனா நடத்தும் போராட்டத்திலும், அது காரணமாக அது அநுபவித்து வரும் கஷ்ட நிஷ்டூரங்களிலும், காங்கிரஸ் தனது அநுதாபத்தைத் தெரிவிக்கிறது.

இந்தியாவிலிருந்து சீனாவுக்கு வைத்திய உதவிப் படை அனுப்பப்பெற்றதை இந்தக் காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. இதற்குப் பூரண ஆதரவு கிடைக்குமென்றும், இதன் மூலமாக சீனாவுக்கும் இந்தியாவுக்குமுள்ள ஒற்றுமைச் சின்னம் அதிகப்படுமென்றும் இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

பாலஸ்தீனம்.

தங்களுடைய தேசிய சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் பாலஸ்தீனத்தில் அராபியர்கள் நடத்தும் போராட்டத்திற்கு அநுதாபங் காட்டியும், பாலஸ்தீனத்தில் 'மாண்டேடரி' நிருவாகம் நடைபெறுவதைக் கண்டித்தும் ஏற்கனவே இந்தக் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. இதற்குப் பிறகு நடைபெற்ற சம்பவங்களைப் பார்த்தால், சட்டம், அமைதி என்பவற்றின் பெயரால் அங்கு பயங்கர ஆட்சி நடைபெறுவதாகத் தெரிகிறது. இந்தப் போராட்டத்தில் அராபியர்கள் காட்டி வரும் தைரியத்தையும், உறுதியையும் கண்டு இந்திய ஜனங்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். அவர்களுடைய லட்சியம் நிறைவேற வேண்டுமென்ற தங்கள் கோரிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

ஐரோப்பாவிலும் மற்ற இடங்களி

னும் யூதர்கள் படுகிற பாட்டைக் கண்டு இந்தக் காங்கிரஸ் பெரிதும் அநுதாபப்படுகின்றதாயினும், பாலஸ்தீனத்திலுள்ள யூதர்கள், தங்களுடைய விசேஷ சலுகைகளை ஸ்தாபித்துக் கொள்வதற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ராணுவ பலத்தைத் துணையாகக் கொண்டு, அதனோடு தங்களை இணைத்துக் கொண்டதற்காக இந்தக் காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது.

யூதர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய மாதிரி, பாலஸ்தீனத்தில் ஒரு ஜன நாயக அரசாங்கம் ஸ்தாபிக்க, யூதர்களும் அராபியர்களும் ஒன்று சேர்ந்துழைப்பார்களென்று இந்தக் காங்கிரஸ் கருதுகிறது.

மகாத்மா காந்தியின் தலைமை.

மஹாத்மா காந்தியின் தலைமையில் காங்கிரஸ் அநுஷ்டித்து வந்த அடிப்படையான கொள்கைகளை உறுதியாகப் பின் பற்றுவதாக இந்தக் காங்கிரஸ் வலியுறுத்துகிறது. இந்தக் கொள்கையில் எவ்வித மாற்றமும் இருக்கக்கூடாதென்றும், வருங் காலத்துக் காங்கிரஸ் வேலைத்திட்டம் இந்தக் கொள்கைகளை அனுசரித்ததாக இருக்க வேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

சென்ற வருஷம் வேலை செய்து கொண்டிருந்த காங்கிரஸ் காரியக் கமிட்டியினிடத்தில் இந்தக் காங்கிரஸுக்கு பூரண நம்பிக்கை யிருக்கிறதென்பதை வலியுறுத்திக் கூறுகிறது. சென்ற வருஷக் காரியக்கமிட்டி அங்கத்தினர்கள் மீது துர் அபிப்பிராயங்கள் ஏற்படுமாறு பேசப் பெற்றவைகளைக் குறித்து இந்தக் காங்கிரஸ் பெரிதும் வருந்துகிறது.

அடுத்த வருஷம் ஒரு நெருக்கடியான நிலைமை ஏற்படுமென்று காங்கிரஸ் கருதுவதால், இந்தமாதிரியான நெருக்கடிகளில் மஹாத்மா காந்தி ஒருவர்தான் காங்கிரஸையும் தேசத்தையும் வெற்றிகரமாக நடத்திச் செல்லக் கூடும். ஆதலால் காங்கிரஸின் நிர்வாக ஸ்தாபனமானது அவருடைய நம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும். எனவே காங்கிரஸ் தலைவர் காந்தியடிகளுடைய விருப்பத்திற்கு இணங்க காரியக் கமிட்டியை அமைக்க வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

தேசீயக் கோரிக்கை.

இந்திய மஹா ஜனங்களின் முன்னேற்றத்திற்காக, சென்ற அரை நூற்றாண்டு காலம் காங்கிரஸானது உழைத்து வருகிறது. சுதந்திரத்திலும், இருதய விகாசத்திலும் இந்திய ஜனங்களுக்குள்ள ஆவலை அது பிரதிபலித்து வந்திருக்கிறது. சென்ற இருபது வருஷங்களாக இந்தியப் பாமர ஜனங்களின் பொருட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகப் போராட்டத்தை நடத்தி வந்திருக்கிறது. ஜனங்களின் தியாகத்தினாலும், ஒழுங்கினாலும், காங்கிரஸானது தேசத்தை அதனுடைய லட்சியமாகிய சுதந்திரத்தை அடைவதற்குரிய மார்க்கத்தில் நெடுந்தூரம் அழைத்துச் சென்றிருக்கிறது. ஜனங்களின் சக்தி வரவர அதிகரித்துக் கொண்டு வருவதைத் துணையாகக் கொண்டு சந்தர்ப்பங்களுக் கேற்றவாறு காங்கிரஸானது பலவிதமான

வேலைத் திட்டங்களை அனுசரித்துவந்த போதிலும், இந்தியாவின் சுதந்திரத்திற்காகவும், இந்தியாவில் ஜனநாயக அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்திற்காகவும் ஒரு முகமாக வேலை செய்து கொண்டு வந்திருக்கிறது. இந்தியா அரசாங்கச் சட்டத்தை நிராகரித்து, அதனை அடியோடு ரத்துச்செய்துவிட வேண்டும்என்னும் கருத்தோடு கூடவே பல நிபந்தனை கட்டுப்பட்டும் அநேக வரம்புகள் நிறைந்ததுமான மாகாணப் பொறுப் பாட்சியை காங்கிரஸ் ஏற்றுக்கொண்டது. தேசிய இயக்கத்தை வலுப்படுத்திக்கொள்ளவும், உள்ள நிலைமையில் பாமர ஜனங்களுக்கு என்னென்ன செளகர்யங்கள் செய்து கொடுக்க முடியுமோ அதனைச்செய்து கொடுப்பதற்காவுமே காங்கிரஸ், மாகாணப் பொறுப்பாட்சியை ஏற்றுக் கொண்டது.

இந்தியா அரசாங்கச் சட்டத்தின் சமஷ்டி அம்சத்தை காங்கிரஸ் பலமாக எதிர்ப்பதோடு அது திணிக்கப் படாமல் இருப்பதற்கு எதிர்த்துப் போராடவும் காங்கிரஸ் உறுதி கொண்டிருக்கிறது.

அந்நிய அதிகாரத்தின் தலையீடின்றி ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்ட ஒரு ஜனப் பிரதிநிதி சபையினால் தயாரிக்கப்பட்ட அரசியல் சட்டமே இந்தியாவுக்குத் தேவையென்று காங்கிரஸ் உறுதி கொள்கிறது. தேசமானது சுதந்திரத்தை அடைய வேண்டுமென்று தீர்மானித்திருப்பதை காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்திக்கூறுகிறது.

இந்திய மஹா ஜனங்கள் வேறு எந்த விதமான அரசியல் திட்டங்களையோ, அல்லது வேறு விதமான் பரிகாரங்களையோ ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்தியாவின் நிலைமையை உத்தேசித்தும் தேசிய இயக்கத்தின் வலிமையை உத்தேசித்தும் பாமர ஜனங்களிடத்திலும், இந்திய சமஸ்தானங்களிலும் ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதனாலும், உலக நிலைமை மாறிக்கொண்டு வருவதாலும் இந்தியா விஷயத்தில் சுய நிர்ணய உரிமையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்றும், அப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தால்தான் இந்தியாவில் சுதந்திர ஜனநாயக அரசாங்கத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு இந்திய மஹாஜனங்களால் முடியுமென்றும் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது. ஜனங்களின் பிறப்புரிமை, கெளரவம், இவைகளை உத்தேசித்து மட்டுமல்ல, பொருளாதாரம் மற்றும் இதர பிரச்னைகள் இவைகளினால் பாமர ஜனங்கள் அதிகமாகப் பாதிக்கப்படுவதாலும், அவர்களுக்கு வேறு பரிகாரம் இல்லையாதலாலும், இந்தியாவின் வறுமைக்கு வேறு பரிகாரம் இல்லையாதலாலும், உலக முன்னேற்றத்தை அனுசரித்து ஜனங்கள் முன்னேறுவதற்கு சுதந்திரத்தைத் தவிர வேறு மார்க்கமில்லையாதலாலும் மேற்படி சுய நிர்ணய உரிமை இந்தியா விஷயத்தில் பூரணமாக அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்று காங்கிரஸ் கருதுகிறது.

மேற்படி அபிவிருத்திக்கு மாகாணப் பொறுப்பாட்சி எவ்வித சந்தர்ப்பத்தையும் அளிக்கவில்லை. அதனுடைய நன்மை செய்யும் ஆற்றலும்வர வரக் குறைந்து கொண்டு வருகிறது. சமஷ்டித் திட்டமோ இந்தியாவை

இன்னும் அதிகமாக நெருக்குவதாக இருக்கிறது. ஆதலால் அஃது அங்கீகரிக்கப்பட மாட்டாது. எனவே இந்தியா அரசாங்கச் சட்டத்தை ரத்துச் செய்து விட்டு இந்திய மஹா ஜனங்களினால் தயாரிக்கப்பெற்ற ஒரு அரசியல் திட்டமே தேவை யென்று காங்கிரஸ் கருதுகிறது.

சுதந்திர ஜனநாயக இந்தியாதான் நமது மகத்தான பிரச்னைகளை விரைவிலேபயன்தரத்தக்கவிதமாகத்தீர்க்க முடியுமென்றும், உலக மஹா ஜனங்களோடு நாமும் சரிசமானமாக நிற்க முடியுமென்றும் அதன் வாயிலாக ஜனநாயக தத்துவத்திற்கும் சுதந்திரத் தத்துவத்திற்கும் நாம் துணை செய்ததாகுமென்றும் இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது.

காங்கிரஸின் லட்சியத்தை விரைவிலே அடையும் பொருட்டும், நம் முன்னே தலை தூக்கி நிற்கும் தேசிய நெருக்கடிகள், சர்வ தேச நெருக்கடிகள் முதலியவைகளை எதிர்த்து நிற்கும் பொருட்டும் எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்களும், காங்கிரஸ் மாகாண அரசாங்கங்களும் தங்களைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது. ஒற்றுமையை உண்டு பண்ணவேண்டுமென்றும், சிறப்பாக காங்கிரஸ் ஸ்தாபனங்களை வலுப்படுத்தி தூய்மையுறச் செய்து ஒழுங்காக நடைபெறச் செய்ய வேண்டுமென்றும், ஜனங்களின் மனப்பான்மையை பிரதிபலிக்கக்கூடிய மாதிரி காங்கிரஸை ஒரு மகத்தான ஸ்தாபனமாக்கும் பொருட்டு அதிலுள்ள பல ஹீனங்களையும் ஒழுக்க ஹீனங்களையும் அப்புறப்படுத்தவேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

பலுசிஸ்தானம்.

பிரிட்டிஷ் பலுசிஸ்தானம், இன்னும் பழைய அதிகார வர்க்க முறையிலும்பொறுப்பற்ற முறையிலும் ஆளப்பட்டு வருவதால், மேற்படி மாகாணத்தில் எவ்விதத்தாமதமுமின்றி பொறுப்புள்ள ஜனநாயக அரசாங்க முறை அமைக்கப்பட வேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருவதோடு, இந்தியாவிலுள்ள மற்ற மாகாணங்களுக்குச் சட்டரீதியாக என்ன அந்தஸ்து அளிக்கப்பட்டிருக்கிறதோ அதே அந்தஸ்து அளிக்கப்படவேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் கோருகிறது.

அந்நிய நாட்டுக் கோள்கை.

ம்யூனிக் ஒப்பந்தம், ஆங்கிலோ—இத்தாலிய ஒப்பந்தம், ஸ்பெயினில் கலகக்கார ஆட்சியை அங்கீகரித்தது ஆகிய இவைகளை விளை பயன்களாகக் கொண்ட பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையை இந்தக் காங்கிரஸ் மறுக்கிறது. இந்தக் கொள்கையானது, ஜனநாயகத்திற்கு வஞ்சம் செய்வதாகவும், உடன்படிக்கைகளை மீறுவதாகவும், பொதுப்படையான பாதுகாப்பு என்ற முறைக்கு முடிவு கட்டுவதாகவும், ஜனநாயகம், சுதந்திரம் இவைகளுக்கு நேர் விரோதிகளான அரசாங்கங்களுடன் ஒத்துழைப்பதாகவும் இருக்கிறது. இந்தக் கொள்கையின் விளைவாக, உலகத்தில் புரட்சிகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பலாத்காரமானது வெற்றி கோஷத்துடன் அபிவிருத்தியடைந்து, அநேக தேசங்களின் தலை விதியை நிர்ணயிப்பதா யிருக்கிறது. சமாதானம் என்ற பெயரால், மகத்தான யுத்தங்களுக்கு வேண்டிய

ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மத்திய, தென் மேற்கு ஐரோப்பா கண்டத்தில், சர்வதேச ஒழுக்கமானது மிகவும் கெட்டுப்போயிருக்கிறது. இதன் பயனாக, யூத சமூகத்தின் மீது, நாஜி அரசாங்கமானது பலாத்காரத்தைப் பிரயோகிப்பதையும், ஸ்பெயினில், நிரபராதிகளான ஜனங்களின் மீது ஆகாய விமானக் குண்டுகள் பொழியப் படுவதையும் உலகம் காண்கிறது.

பாசிஸ்ட் அரசாங்கங்களுக்கு ஆதரவு காட்டுவதாகவும், ஜனநாயக நாடுகளை அழிப்பதாகவும் உள்ள பிரிட்டிஷ் அந்நிய நாட்டுக் கொள்கையை இந்தக் காங்கிரஸ் கண்டிக்கிறது. ஏகாதிபத்தியக் கொள்கையையும், பாசிஸக் கொள்கையையும் காங்கிரஸானது நிராகரிக்கிறது. உலக சமாதானம், உலக முன்னேற்றம் இவைகளை முன்னிட்டு, இந்த இரண்டு கொள்கைகளும் ஒழிய வேண்டுமென்று காங்கிரஸ் கருதுகிறது. இந்தியா, தனது அந்நிய நாட்டுக் கொள்கையை, ஒரு சுதந்திர நாடு என்ற முறையில், ஏகாதிபத்தியம், பாசிஸம் இவைகளினின்று விலகியதாய், சமாதானம், சுதந்திரம் இவற்றையே குறிக்கோளாகக் கொண்டு அநுஷ்டித்து வரவேண்டுமென்று இந்தக் காங்கிரஸ் அபிப்பிராயப் படுகிறது.

சுதேச சமஸ்தானங்கள்.

இந்தியாவின் பலபாகங்களிலுமுள்ள சுதேச சமஸ்தானங்களிலிருக்கும் மகா ஜனங்களிடையே ஒரு விழிப்பு ஏற்பட்டிருப்பதை இந்தக் காங்கிரஸ் வரவேற்கிறது. காங்கிரஸானது, இது காறும் எந்தச் சுதந்திரத்திற்காக உழைத்து வந்திருக்கிறதோ, அந்தச் சுதந்திரம் அடைவதற்கு அறிகுறியாகவே இந்த விழிப்பைக் காங்கிரஸ் கருதுகிறது. சமஸ்தானங்களில் பொறுப்பாட்சி வேண்டுமென்றும், ஜன சுதந்திரம் வேண்டுமென்றும் கோரப்படுவதை இந்தக் காங்கிரஸ் ஆதரிக்கிறது. இந்த மாதிரியான இயக்கங்களுடன் காங்கிரஸ் தனது ஒற்றுமையைக் காண்பித்துக் கொள்கிறது. ஒரு சில சமஸ்தானாதிபதிகள், இந்த விழிப்பை அங்கீகரித்து, நிலைமைக்குத் தகுந்தவாறு தங்களை மாற்றியமைத்துக் கொண்டு வருவதை இந்தக் காங்கிரஸ் பாராட்டுகிறது. ஆனால் ஒரு சில சமஸ்தானாதிபதிகள், நியாயமானதும், சமாதான முறையில் அமைந்ததுமான ஸ்தாபனங்களைக்கூட, மனிதத் தன்மையற்ற அடக்கு முறையினால் அடக்கிப் போடுவதைக் குறித்து இந்தக் காங்கிரஸ் வருந்துகிறது. ராஜகோட்டை சமஸ்தானாதிபதிக்கும், சர்தார் படேலுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமானது முறியடிக்கப்பட்டுப் போனதை முன்னிட்டு, மகாத்மா காந்தி உண்ணாவிரதமிருக்கத் தீர்மானித்ததைக் கேட்டு இந்தியா முழுவதும் கலங்கி விட்டது.

மேற்படி ராஜகோட்டை சமஸ்தானாதிபதிக்கும் மகாத்மா காந்திக்கும் ஏற்பட்ட சமரஸத்தின் காரணமாக மகாத்மா காந்தியின் உண்ணாவிரதம் முடிவு பெற்றதைக் குறித்து இந்தக் காங்கிரஸ் மகிழ்ச்சி யடைகிறது. கத்தியவார் சமஸ்தானாதிபதிகளும், மற்றச் சுதேச மன்னர்களும் காலத்திற்கேற்றவாறு நடந்து கொண்டு, தங்கள் பிரஜைகளுடைய ஒத்துழைப்பின் பேரில் தங்களுடைய சமஸ்தானங்களில் பொறுப்பாட்சியை அமுலுக்குக்

கொண்டு வருவார்களென்று இந்தக் காங்கிரஸ் நம்புகிறது.

ஹரிபுரா காங்கிரஸில் சுதேச சமஸ்தானங்கள் விஷயமாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினின்று என்ன எதிர் பார்க்கப்பட்டதோ அது நிறைவேறி வருவதாகவும், அந்தத் தீர்மானமானது, சமஸ்தானப் பிரஜைகள், சுதந்திர இயக்கங்களை நடத்துவதை ஆதரிப்பதாக இருந்ததென்றும் இந்தக் காங்கிரஸ் நம்புகிறது. மேற்படி ஹரிபுரா தீர்மானம் ஜனங்களின் நன்மையை முன்னிட்டு அமைக்கப்பட்டதாகவே இந்தக் காங்கிரஸ் கருதுகிறது. அப்பொழுதைய நிலைமையை முன்னிட்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதே தவிர, இதுவே ஒரு முடிவென்று கொள்ளப்படவில்லை. சமஸ்தானப் பிரஜைகளுக்கு வழி காட்டுவதைத் தனது உரிமையாகவும், தனது கடமையாகவும் காங்கிரஸ் கொண்டிருக்கிறது. சமஸ்தானங்களில் ஏற்பட்டிருக்கிற விழிப்பின் பயனாக, காங்கிரஸானது, தானே வலிய தன் மீது போட்டுக் கொண்டுள்ள கட்டுப்பாட்டைத் தளர்த்தவோ அல்லது அடியோடு நிராகரிக்கவோ காங்கிரஸுக்கு எப்பொழுதும் உரிமையுண்டு. காங்கிரஸின் லட்சியமானது, சமஸ்தானங்கள் உள்பட சர்வ இந்தியாவுக்கும் சுதந்திரம் பெறுவதென்பதுதான்.

காங்கிரஸில் சீர்திருத்தம்.

அங்கத்தினர்களைச் சேர்க்கிற விஷயத்திலும், தேர்தல் காலத்திலும் பிரசந்தர்ப்பங்களிலும் ஒழுக்கத்தவறுகள் பல நடைபெறுவதால், காங்கிரஸ் ஸ்தாபனம் சரியாக நடைபெறவில்லையென்று அநுபவ வாயிலாகத் தெரிய வருவதால், இந்தக் குறைகளை நீக்குவது அவசியமென்று காங்கிரஸ் கருதுகிறது. இதற்காக, அ. இ. கா. கமிட்டி, எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், அவசியமானால், காங்கிரஸ் சட்டத்தையே மாற்ற வேண்டுமென்றும் காங்கிரஸ் கூறுகிறது. இந்தச் சட்ட மாற்றங்களை உடனே அமுலுக்குக் கொண்டுவரவும் அ.இ.கா. கமிட்டிக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள அங்கத்தினர் ஜாபிதாவைப் பரிசீலனை செய்து அதனைத் திருத்தியமைக்கவும் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கு உத்திரவிடுகிறது.

அடுத்த காங்கிரஸ்

அடுத்த காங்கிரஸ் டிசம்பர் மாதத்தில் கூடுவதென்றும், அப்படிக் கூடும் காங்கிரஸ் பீகார் மாகாணத்தில் நடைபெறவேண்டுமென்றும் இந்தக் காங்கிரஸ் தீர்மானிக்கிறது.

திரிபுரி காங்கிரஸ் உத்தியோகஸ்தர்கள்

சேத் கோவிந்த தாஸ்—உபசரணைக் கூட்டத் தலைவர்
சேத் சிவதாஸ் தாகா—உபசரணைக் கூட்டத்து உதவித் தலைவர்
ஜி. டி. குப்தா—பொதுக் காரியதரிசி.
பண்டித குஞ்சிலால் த்புபே—உபசரணைக் கூட்டத்துக் காரியதரிசி
தாகூர் சேதிலால்—தொண்டர் படைத் தலைவர்.

தலைவர்—ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்

தமிழ் நாடும் திரைப்படமும்

—வடசை வாசகன்

தமிழ் மொழி பழமை மிக்கது; தமிழ் நாடு தொன்மை மிக்குடைத்து. தமிழினைப் பற்றியும், தமிழரைப் பற்றியும் பலர் பல திறப்படக் கூறுவர். அதனை ஈண்டு ஆராய்தல் இக் கட்டுரையின் நோக்கமன்று.

'நாடகமே உலகம்' என்று இடைக் காலத்தில், பெரியார் ஒருவர் கூறிப் போந்தார். அப்பெரியார் என்ன உட்பொருளைக் கொண்டு அங்ஙனம் கூறினரோ? உலகமே நாடக மேடை மயமாக விளங்கியது. அது மாத்திரமல்ல; பண்டைத் தமிழர், நாடகக் கலைக்கு முக்கிய இடமளித்துப் போற்றி வந்தார்கள் என்றும் தெரிய வருகின்றது. தமிழ் மொழியினை இயல், இசை, நாடகம் எனப் பாகுபாடு செய்திருப்பதொன்றே மேற் கூறிய கருத்திற்குச் சான்றாய் நின்று நிலவும். அதனோடு, உலக மக்களின் வாழ்க்கையே ஒரு நாடக வரங்கிற் கொப்பானது என்றும் கூறலாம். 'நாடகமே உலகம்' என்ற இக் கூற்றினை, 'பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே' என்ற நன்னூலாரின் மொழியினை ஆதாரமாகக் கொண்டு, 'சினிமாவே உலகம்' என்று மாற்றிக் கொண்டால், தற்கால உலகப் போக்கிற்கு ஏற்புடைத்தாய் இருக்குமென்பது எளியேனின் அபிப்பிராயம்.

'நாடகம்,' 'சினிமா' என்று வெவ்வேறாகக் கூறினும், பின்னர் கூறப் பெற்றுள்ள சினிமா முதலில் கூறப் பெற்றிருக்கும் நாடகத்தின் மாறுபட்ட வடிவமே என்று கூறலாம். நாடகத்திற்கும், சினிமாவிற்கும் பெரிதும் வேற்றுமை யுண்டு. எனினும், திரைப்படம் நாடகத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தது என்பது யாவரும் ஒப்ப முடிந்த விஷயம்.

ஆயிரம் பிரசங்கங்களைவிட ஓர் நாடகம் (உயரிய முறையில்) பொது மக்களுக்கு உணர்ச்சியை ஊட்ட வல்லதாயிருக்குமென்பது பெரியார்களின் கூற்று. இக்கூற்றின் உண்மையை நாம் அனுபவத்திலும் பார்த்து வருகின்றோம். தேர்ச்சி பெற்ற நடிகர்கள் உண்மை உணர்ச்சியோடு (with real feelings) நடிக்கும் பொழுது பார்ப்பவர்களாகிய நாம் மெய் மறந்தே போய் விடுகின்றோம். உண்மை நடிகனோ, நடிகையோ உணர்ச்சியோடு சோகமாக நடிப்பதைக் காணுமிடத்து, நம்மவர் கண்களினின்றும் நம்மை யறியாமலேயே கண்ணீர் வரத் தொடங்குகின்றது. வீரம் காட்டுமிடத்து நம்மவர் மனதி

லும் வீர உணர்ச்சி ததும்பி எழுகின்றது. நடப்பது நாடகந்தான்; அப்படி ஒன்றும் நடக்கவில்லை யென்பதை நாம் மறந்து விடுகின்றோம். இது தான் உண்மை நடிப்பின் லக்ஷணம்.

இத்தகைய உணர்ச்சி நிறைந்த நடிப்பை, தற்காலத் தமிழ்ப் படங்களில் காண முடியுமா என்று கேள்வி கேட்குமிடத்து, சட்டென்று பதிலளிக்க நாம் சிறிது தயங்கத்தான் வேண்டி யிருக்கிறது. உண்மை நடிப்பிற்கு முக்கிய இடமளித்து விளங்கும் தமிழ்ப் படங்கள் இல்லை யென்று துணிவாய்க் கூறிவிட முடியாது. மிகவும் குறைவு என்றே கூறலாம். இத்தகைய சில படங்களின் எண்ணிக்கையையும், இதுவரை வந்துள்ள தமிழ்ப் படங்களின் எண்ணிக்கையையும், நினைத்துப் பார்க்குமிடத்து, நாம் பெரிதும் வருத்தமுற வேண்டி யிருக்கிறது. மேலும் மற்ற கலை விஷயங்களிலும், வட நாட்டரைப் பார்க்கிலும், நாம் பெரிதும் பின்னடைந்துள்ளோம். நிற்க:

'நடிப்பு' என்று வந்தமட்டில், நடிப்பைக் குறித்து ஒரு சில கூற ஆசைப்படுகின்றேன். நடிப்பு என்பது ஒரு தனிக் கலை. நமது வாழ்க்கையையே ஒரு நாடக வரங்கிற்கு ஒப்பிடலாம். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நடிகர்; நாம் நடிப்பது நமது வாழ்க்கை யரங்கில் நின்று கொண்டு. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பாகத்தினை நடித்துக் காண்பிக்கின்றோம். நமக்குக் கோபம் வந்தால் கோபமாக நடிக்கின்றோம். விசனம் வருமிடத்துச் சோகம் காட்டுகின்றோம். காதல் நாடகம் வாழ்க்கையிலேயே செய்து காட்டுகின்றோம். இவைகளனைத்தையும் நாம் நம்மை யறியாமலேயே நடிக்கின்றோம். இந்த இயற்கைத் தன்மையை நாமாகப் பிறரிடத்துத் தோன்றச் செய்யு மிடத்துத் தான், கஷ்டமாக விருக்கின்றது. இதனைப் பயில்வது சிரமத்தை உண்டு பண்ணுகிறது.

தமிழ்ப் படங்களில் அறிந்தோ அறியாமலோ சங்கீதத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டு வருகின்றது. பாகவதர்களையும் சங்கீதப் புலிகளையும் படத்தில் புகுத்தினால்தான் பணம் வந்து சேரும் என்ற எண்ணம் தமிழ்ப் பட முதலாளிகளின் மனதை விட்டு இன்னும் அகன்றபாடில்லை. இப்பொழுதுங்கூட சினிமா விளம்பரங்களில், 'கொஞ்சும் அஞ்சுக மொழியாள்........' 'கோகிலத் தொனி........' 'சங்கீத சண்டமாருதம்........' என்றெல்லாம் விளம்பரங்கள் செய்யப் படுகின்றன. சில சமயங்களில் பாடல்களின் எண்ணிக்கையைக்கூட விளம்பரங்களில் குறிப்பிடுகிறார்கள். இதன் பொருள் என்னவென்பது அறிய வரவில்லை. திரைப் படத்திற்குப் பாட்டு வேண்டியதுதான். பாடல்களை இடமறிந்து, குறைவாய்ப் படத்தில் புகுத்த வேண்டும்.

தமிழ்ப் படங்களைப் பற்றி இன்னும் எவ்வளவோ கூறிக் கொண்டு போகலாம். ஆனால் ஆசிரியரின் பேனா இடந்தருமோ வென்று தான் அஞ்ச வேண்டியிருக்கிறது. கடைசியாக நம் தமிழ்ப் பட முதலாளிகளுக்குச் சில வார்த்தைகள் சொல்லி விட்டு, மிகுந்தனவற்றை இனிச் சமயம் நேருமிடத்துக் கூறிக் கொள்ளலாம் என்ற மனத்தேறுதலுடன் கட்டுரையை முடித்துக் கொள்கின்றேன்.

புராதன இந்தியாவில் போக்கு வரவு சாதனங்கள்

—வி. எம். நாகேசுவர சாஸ்திரி

இந்தியா, கிறிஸ்து பிறப்பதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே சிறந்த நாகரிகத்தைப் பெற்றிருந்தது என்பதை யாவரும் அறிவர். இதைப் பற்றி முன்னொரு முறையும் எழுதியிருக்கிறோம். கி. மு. 320ம் ஆண்டில் இந்தியாவின் மீது படை யெடுத்து வந்த அலெக்ஸாண்டர் காலத்திலே அடங்கிக் கிடந்து, பிறகு அவன் பாபிலோனில் சென்று இறந்ததும், சற்று வெளிக் கிளம்பிய சந்திரகுப்தனுடைய சரித்திரத்தை அறியாதார் அநேகர் இருக்க மாட்டார். அவன் மிக்க தாழ்ந்த நிலைமையிலிருந்து உயர் பதவிக்கு வந்தது 'சாணக்கியன்' என்பவனாலேயே. இந்தச் சாணக்கியன் என்பான் ஓர் அந்தணன். இவனைப் பற்றி ஏற்கனவே "ஜோதி" வாசகர்கள் அறிந்து கொண்டிருப்பார்கள்.

சாணக்கியன், சந்திர குப்தனுக்கு மந்திரியாயிருந்து, இராஜ்ஜிய பாரத்தைச் சரிவர வகித்து வந்தான். 'நந்தி சூத்திரம்' என்ற ஒரு ஜைன நூலில்,

---

இதுவரை வெளி வந்துள்ள படங்களில் புராணப் படங்களின் எண்ணிக்கையே மிக அதிகம். புராணப் படங்களைப் பற்றிய கவலையைச் சிறிது ஒதுக்கி வையுங்கள். எழுத்து வாசனையற்ற மௌடீக நடிகர்களையும், ஹாஸ்யத்திற்காகத் தொந்தி பெருத்த குண்டோதரன் மார்களையும், ஆபாச ஹாஸ்யக் காக்ஷிகளையும், தப்பாமல் காட்டப்பெற்று வரும் தர்பார் டான்சையும் படத்தில் புகுத்துவதை இன்றுடன் நிறுத்துங்கள். சமூகப் படங்களும் சரித்திரப் படங்களும் கிளம்ப வேண்டும். பொது மக்களின் அறிவு வளர்ச்சிக் கேற்ற வழிகளில் திரைப் படத் தொழிலும் ஒன்று என்பதை நினைவிற் கொள்ளுங்கள். வருவாயையே பெரிதென எதிர்பார்க்கும் படமுதலாளிகளே! நீங்கள் வருவாயின் மீதுஎவ்வளவு நாட்டம் வைக்கின்றீர்களோ அதில் பாதியளவாவது, கலை வளர்ச்சிக்காகவும், தேச முன்னேற்றத்திற்காகவும் கவனம் செலுத்துங்கள். நம் தமிழ் நாட்டு சினிமாக் கலையின் வளர்ச்சிக்காகப் பெரியார்கள் பல்லோர் பற்பலத் துறைகளில் பாடு பட்டு வருகின்றனர். விரைவில் இக் கலையானது, நம் தமிழ் நாட்டில், தற்போதைய நிலைமையைக் கடந்து முன்னணியிற் செல்லும் என்று எதிர் பார்க்கப் படுகிறது.

சாணக்கியன், சந்திர குப்தனுக்கு வரவு செலவு மந்திரியா யிருந்ததாகக் கூறப்படுகிறான். இவன் 'அர்த்த சாஸ்திரம்' என்ற நூலை இயற்றி யிருக்கிறான். அதில், அரசியல் சம்பந்தமான விஷயங்கள் யாவும் கூறப்பட்டிருக்கின்றன. அந்நூலை ஆதாரமாகக் கொண்டு பண்டைக் காலத்தில், அரசியல் முறை எப்படி இருந்து வந்ததென்பது நன்றாய் விளங்கும். அந்நூலை உதவியாகக் கொண்டு, பண்டைக் காலத்தில் அதாவது சந்திர குப்தன் ஆட்சியில், நாடு எங்ஙனம் இருந்தது, போக்கு வரவு சாதனங்கள் எப்படி இருந்தன முதலான விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

முதலில் போக்கு வரவு சாதனங்களைப் பற்றி எடுத்துக் கொள்ளலாம். சந்திர குப்தனுடைய நாடு ஏறக்குறைய வட இந்தியா முழுவதுமாயிருந்தது. இப்பெரிய இராஜ்ஜியத்திற்கு அவன் ஒருவனே சக்கரவர்த்தியாயிருந்து ஆண்டு வந்தானென்றால், அப்பொழுது ஆட்சி முறை எவ்வளவு திறமையுடனிருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும். இராஜ்ஜியத்தினுடைய தலை நகரத்திலிருந்து பிறபாகங்களுக்குப் பாதைகள் முதலானவைகள் மிகவும் ஒழுங்காய் ஏற்படுத்தப்பட்டிருந்தன. தலை நகராகிய பாடலிபுரத்திலிருந்து இராஜ்ஜியத்தின் நான்கு பாகங்களுக்கும் போக்கு வரவு சாதனங்கள் நிறைய இருந்தன. எந்தெந்த பாகத்திலிருந்து என்னென்ன சாமான்கள் தலை நகராகிய பாடலிபுரத்திற்கு வந்தனவோ அல்லது பாடலிபுரத்திலிருந்து எந்தெந்த சாமான்கள் அனுப்பப்பட்டனவோ அவைகளுக்குத் தகுந்தாற் போல் பாதைகளும் ஏற்பட்டிருந்தன.

பாடலி புரத்திலிருந்து வடக்கே ஹிமாலயப் பிரதேசங்களுக்குச் செல்லும் பாதைகள் அவ்வளவு முக்கியமாகக் கருதப்படவில்லை. பாதைகளும் அதிகமாயில்லை. ஏனென்றால் அம்மலைப் பிரதேசங்களிலிருந்து, மான் தோல், கம்பளம், குதிரை முதலானவைகள் வந்து கொண்டிருந்தன. தெற்கிலிருந்து இரத்தினங்கள், சங்குகள், வாசனைத் திரவியங்கள், தங்கம், பவழம் முதலானவைகள் வட நாட்டிற்குச் சென்று கொண்டிருந்தன. ஆதலின் தென்னாட்டிற்குச் செல்லும் பாதைகளே மிகவும் சிறப்பாக எண்ணப்பட்டு வந்தன. இன்னும் மேற்குப் பக்கத்திலும் கிழக்குப் பக்கத்திலும் செல்லப் பல பாதைகள் இருந்தன.

சந்திர குப்தனுடைய சமஸ்தானத்தில் இருந்த மெகஸ்தினஸ் என்பான் சிந்து நதிக்கணவாயையும் பாடலிபுரத்தையும் இணைக்கும் ஒரு ராஜ பாட்டை இருந்தது என்று கூறுகிறான். இதனால் செல்யூகஸ் என்ற அரசனிடமிருந்து பிடுங்கிக் கொண்ட வட மேற்கு மாகாணங்களிலும் சந்திர குப்தனுடைய அதிகாரம் சென்று வந்தது என்று நன்றாகத் தெரிகிறது.

'சாதாரண பாதைகளாலும் வியாபார வசதிகளாலும் அரசியல் சம்பந்தமான நன்மைகள் உண்டாயிருந்ததைத் தவிர இராஜ்ஜியத்தின் பொது க்ஷேமத்திற்கு ஒரு சௌகரியம் ஏற்பட்டிருந்தது. பாதைகள், எந்தெந்த விஷயங்களுக்கு உபயோகப் படுகின்றதோ அங்ஙனமே பெயரிடப்பட்டு வந்தன.

அரசன் செல்வதற்கென்றே பிரத்தியேகமானதொரு வீதியிருந்தது. இதற்கு 'ராஜ மார்க்கம்' என்று

பெயர். இவ்விராஜ வீதியின் அகலம் 32 அடி. அரசன் இவ்வீதியில் செல்லும்போது ஒருவரும் அவ்வீதியில் செல்ல அநுமதி யளிக்கப்பட மாட்டார். இன்னும் குறிப்பிட்ட சில முக்கிய சமயங்களில்தான் அரசன் இவ்வழிச் செல்வான். மன்னன் இங்ஙனம் செல்லும்போது தெருவின் இருபுறத்திலும் சேனு வீரர்கள் கையுங் கத்தியுமாய் நிற்பார்கள்.

இதே மாதிரி ஒவ்வொரு முக்கிய பட்டணத்திலும் ஆறு வீதிகள் இருக்கும். அவைகளுள் மூன்று வடக்கு நோக்கியும், மூன்று தெற்கு நோக்கியும் செல்லும். இரதங்கள் செல்வதற்கென்று பிரத்தியேகமான வீதிகள் இருக்கின்றன. இவைகளுக்கு 'ரத்யா' என்று பெயர். இவ்வீதிகளின் அகலம் 32 அடி. ஆனுல் 'ரதபதம்' என்று மற்ருெரு தெருவு கூறப்படுகின்றது. இதன் அகலம் பத்து அடியாகும். இதனுல் சிறிய இரதங்கள் மாத்திரம் இத்தெரு வழியாகச் செல்லும் என்று தெரிகிறது.

ஆடு மாடுகள் முதலிய மிருகங்கள் செல்ல மூன்று விதமான தெருக்கள் இருந்தன. அவைகளுக்கு முறையே 'பசு பதம்' 'மஹா பசுபதம்' 'க்ஷுத்ர பசு பதம்' என்று பெயர். இப்பெயர்களைக் கொண்டு நாம் என்ன அறிய வேண்டுமென்னின் 'பசுபதம்' என்ற பாதையில் சாதாரண மிருகங்கள் செல்லும், 'மஹா பசுபதம்' என்ற பாட்டையில் பெரிய மிருகங்கள் செல்வதற்குச் சௌகரியங்கள் செய்யப்பட் டிருக்கும். 'க்ஷுத்ர பசுபதம்' என்ற தெருவில் மிகவும் சிறிய மிருகங்கள் செல்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் செய்யப்பட் டிருக்கும். இப்படிக் கூற வேண்டுவதற்குக் காரணம் என்னவென்ருல், 'பசுபதம்' என்ற வீதியின் அகலம் எட்டு அடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'க்ஷுத்ரபசுபதம்' என்ற பாதையின் அகலம் நான்கு அடி எனக்கூறப்பட்டிருக்கிறது. 'க்ஷுத்ரம்' என்பதற்கு அற்பம், சிறிது என்று பொருள் கொள்ளலாம். ஆகையால் 'க்ஷுத்ர பசுபதம்' என்ற தெருவு சிறிய மிருகங்கள் செல்லும் வண்ணம் அமைக்கப்பட்டிருக்கும் என்று நன்ருகத் தெரிய வருகிறது. இன்னும் 'கரோஷ்ட்ர பதம்' என்ற ஒரு வீதியிருந்தது. அவ்வீதி ஒட்டகங்களும் கழுதைகளும் செல்லுமாறு அமைக்கப்பட்டிருக்கும். இவ்வீதிகள் தவிர, இன்னும் சில நெருக்கமான வீதிகளும் இருந்தன. 'சக்ரபதம்' என்று ஒன்றிற்குப் பெயர். அதில் சாமான்களை ஏற்றிக் கொண்டு செல்லும் வண்டிகள் போக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'பாதபதம்'என்றும் 'மனுஷ்யபதம்' என்றும் இரண்டு பாதைகள் இருந்தன. 'மனுஷ்யபத'த்தின் அகலம் நான்கடியாகும். இச் சிறிய பாதைகளில் பாதசாரிகளே செல்லலாம். இவை தவிர, 'அம்சபதம்' என்ற நெருக்கடியானதொரு பாதை இருந்தது. மேற்கூறிய பாதைகளுட் சில 'வணிகபதம்' என்று வியாபாரப் போக்கு வரவுக்காகவே பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இவைகள் தவிர, எந்தெந்த இடங்களுக்குப் பாதைகள் சென்றனவோ அவைகளுக்குத் தகுந்தாற் போல் பெயர்களும் வழங்கப்பட்டன. முக்கிய நகரங்களுக்குச் (ஜில்லாக்கள்)

செல்லும் பாதைகளுக்கு 'ராஷ்ட்ர பதம்' என்று பெயர். இவைகளின் அகலம் 32 அடியாகும். புற்றரையுள்ள இடங்களுக்குச் செல்லும் பாதைகளுக்கு 'விவீதபதம்' என்று பெயர். இன்னும் 400 அல்லது 800 ஊர்களுக்கு மத்தியிலிருக்கும் கோட்டைக்குச் செல்லும் வழிக்கு முறையே 'துரோணமுகபதம்' என்றும் 'ஸ்தானீய பதம்' என்றும் பெயர்.

சாகுபடியிலிருக்கும் நிலங்களுக்குச் செல்லும் பாதைக்கு 'ஸயோனீய பதம்' என்று பெயர். இராணுவப் பயிற்சி சாலைக்குச் செல்லும் வழிக்கு 'வ்யூஹபதம்,' இடுகாட்டிற்குச் செல்லும் சாலைக்கு 'ஸ்மசான பதம்' கிராமங்களுக்குச் செல்லும் பாதைக்குக் 'கிராம பதம்' என்றும் பெயர். 'ஸயோனீயபதம்,' 'வ்யூஹபதம்' 'ஸ்மசான பதம்' 'கிராம பதம்' என்ற இப் பாதைகள் ஒவ்வொன்றின் அகலம் 64 அடியாகும். காடுகளிற்குச் செல்லும் பாதையின் அகலம் 32 அடியாகும். இதன் பெயர் 'வன பதம்.' யானைகள் சஞ்சரிக்கும் வனங்களுக்குச் செல்லும் வழிக்கு 'ஹஸ்தி க்ஷேத்ரபதம்' என்று பெயர். இவ்வழியின் அகலம் 16 அடியாகும். கஷ்டமான இடங்களைக் கடந்து செல்லும் பாதைகளுக்கோ வாராவதிகளுக்கோ 'ஸேதுபதம்' என்று பெயர்.

மேற் சொன்னவைகள் தவிர, கோட்டைகளுக் கென்று சில பிரத்தியேக பாதைகள் இருந்தன. 'ரதசர்யா சஞ்சாரம்' என்றொரு பாதை உண்டு. இப் பாதை உயர்ந்த கற்களாலாவது பனைமரப் பட்டைகளினாலாவது அமைக்கப்பட்டிருக்கும். இப் பாதைகளில் ரதங்கள் செல்லும். இரண்டு கோபுரங்களின் நடுவில் செல்லும் அகலமான தொரு பாதைக்கு 'ப்ரதோளி' என்று பெயர். ஒரு கோவிலுக்குச் செல்லும் பாதைக்கு 'தேவபதம்' என்று பெயர். இன்னும் 'ஸகந்த' 'சர்யா' என்ற சிறு பாதைகளுமிருந்தன. கழனிகள் மத்தியில் செல்லும் பாதைக்கு 'உபாத்வம்' என்று பெயர். அரசாங்கத்துக் கம்மியன் சாலைகள் இருக்கும் தெருவிற்கு 'விசிகம்' என்று கூறுவதுண்டு.

அனுவசியமாகத் தெருக்களின் மத்தியில் கூட்டம் போட்டு வழிமறித்தால், அங்ஙனம் செய்தவர்களுக்கு அபராதம் விதிப்பது வழக்கம். தெருக்களில் யாதொரு தடையுமிராமல் பார்த்துக் கொள்வது அரசாங்கத்தாரின் கடமையா யிருந்தது.

ஜெக்கோ ஸ்லோவேகியாவின் இன்றைய பொருளாதார நிலை

——வா.

அரசியல் விஷயங்களைக் கவனிப்பதை விட அதனால் பொருளாதாரம் எவ்விதம் பாதிக்கப் பட்ட தென்பதைக் கவனிப்பது அவசியமாகும். மியூனிச் ஒப்பந்தத்தினாலும் அதன் பின்னாலேற்பட்ட அது போன்ற போலந்து, ஹங்கேரி உடன்படிக்கைகளாலும் ஜெக்கோ ஸ்லோவேகியா, 4,922,440 ஜனசங்கியை கொண்டதும் 16,067 சதுர மைல் விஸ்தீரணமுள்ளதுமான பிரதேசங்களை விட்டுக் கொடுக்க நேர்ந்தது. மீதமுள்ளது 38,204 சதுர மைலும் 9,807,096 ஜனங்களுமே யாகும். ஜர்மனிக்கு விட்டுக் கொடுத்த பிரதேசத்தில் விவசாயப் பிரதேசங்களைக் காட்டிலும் கைத்தொழில் பிரதேசங்களே அதிகம். ஹங்கேரி எடுத்துக் கொண்டது இதற்கு நேர் மாறானதாகும். போலந்து அடைந்த பிரதேசங்களில் நிலக்கரி ஏராளமாகக் கிடைப்பதுடன் உருக்கு வேலைகளும் அதிகமாய் செய்யப்பட்டு வருகின்றன. கைவிட்டுப் போனவைகளைப் பற்றிப் பேசுவதை விட மீதமிருப்பவைகளைப்பற்றிப் பேசுவது பயன் தரும். ஆகவே ஏற்பட்ட நஷ்டங்களைப் பற்றிக் கவனிப்போம். இதில் முக்கியமானது நிலக்கரியால் ஏற்பட்டதாகும். ஏனென்றால் கைத்தொழிலுக்கு முக்கியமானது நிலக்கரியே. ஜெக்கோ ஸ்லோவேகியா இதுவரை நிலக்கரி ஏற்றுமதி செய்து வந்தது போய் தற்பொழுது அதன் உபயோகத்துக்கு 15 லட்சம் டன் இயற்கை நிலக்கரியும் 65 லட்சம் டன் லிக்னைட் என்னும் தவிட்டு நிற நிலக் கரியும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் வந்து விட்டது. இப்பொழுதைய நாணய மாற்று விகிதப்படி வருடந்தோறும் இதற்காக ஐம்பது லக்ஷம் பவுனுக்கு மேல் செலவாகிறது. தேசத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் விஷயத்தில் இது முக்கியமானதாகும்.

இரும்பு, உருக்குத் தொழிலில் ஜெக்கோ ஸ்லோவேகியா எவ்வளவு இழந்திருக்கிறதோ அதனைப் போலந்து எடுத்துக் கொண்டுள்ளது. உள் நாட்டு உற்பத்தியில் ஏற்படும் நஷ்டத்தைக் காட்டிலும் வியாபார அசௌகரியங்களால் ஏற்படும் நஷ்டம் அதிகமானதாகும். உற்பத்தியில் நூறுக்கு 26 வீதமும் வியாபார அசௌகரியத்தில் நூற்றுக்கு 40 வீதமும் என்று கணக்கிடலாம்.

ஆகவே ஜெக்கோ ஸ்லோவேகியா, ஏற்றுமதியை அதிகமாக்குவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

மாறுதல்களால் வியாபாரத்திற்கு ஏற்பட்ட பாதகங்கள்.

கண்ணாடித் தொழிலில் நாலிலொரு பாகமே ஜெக்கோ ஸ்லோவேகியாவிடமிருந்து வருகிறது. முக்கியமான கண்ணாடித் தகட்டு வேலைகள் ஜெர்மனியைச் சார்ந்துவிட்டன. ஜெக்கோ ஸ்லோவேகியாவிலுள்ள கயாவில் ஜன்னல் கண்ணாடிகள் மட்டும் செய்யப்பட்டு வருகின்றன. அங்கிருக்கும் இன்னும் சில ஆலைகள் தொழில் செய்யவில்லை. இவைகளும் வேலை செய்து வருமாகில் உள் நாட்டு உபயோகத்திற்குப் போதுமானதாவது கிடைக்கும். தனிச் சிறப்பு வாய்ந்த கண்ணாடிகளும், கண்ணாடிப் போத்தல்களும் சுடேடன் பிரதேசங்களிலும் செய்யப்பட்டு வருகின்றன. உள் நாட்டுத் தேவைக்குப் போதுமான போத்தல் செய்யக்கூடிய சாலைகள் இங்குள்ளன. கெட்டிக் கண்ணாடிகளும் பொஹிமியா கண்ணாடிகளும் உள்நாட்டுத் தேவைக்கே செய்யப்பட்டு வருகிறதென்றாலும், ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கும் உற்பத்தி செய்யக்கூடுமென்று நம்ப இடமிருக்கிறது. ரஸாயன முறையில் செய்யப்பட்ட கண்ணாடித்தொழிலில் மாறுதலேற்படவில்லை. கார்ல்ஸ்பாடுக்குச் சுற்று வட்டகையில் செய்யப்படும் பீங்கான் வேலைகளுக்கு அத்தியாவசியமான சீனக் களிமண் மேல் பொஹிமியாவில் ஏராளமாய்க் கிடைக்கிறது. ஆனால் அப்பிரதேசம் ஜெர்மனியில் சேர்ந்து விட்டது. இருந்தாலும் பில்ஸன் ஜில்லாவில் இவ்விதக் களி மண் கிடைப்பதால், சீனப் பாத்திரங்கள், நெருப்புப் பிடியாச் செங்கல், காகிதம் முதலியன செய்யப் பெற்று ஏற்றுமதியும் செய்யக் கூடும்.

நூல் தொழிலில் பாதி ஜெக்கோ ஸ்லோவேகியாவிலேயே இருந்து வருகிறது. அதிகமாக நெசவுத் தொழிலே ஈடுபட்டிருப்பதால் இஃது ஓர் ஏற்றுமதிச் சரக்காய் அமைகிறது. தொப்பித் தொழிலீடு பட்டுள்ள பெருந்தொழிற் சாலைகள் ஜெர்மனிக்குள்ளாகி விட்டனவென்றாலும் உற்பத்தி செய்யக்கூடியவர்களிருப்பதால் மறுபடியும் ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையை அடையக்கூடும். ஏற்கனவே செய்து கொண்டு வந்த காகிதத் தொழிலிலும் அது சம்பந்தமான இதர தொழில்களிலும் பாதிக்குமேல் ஜெக்கோ ஸ்லோவேகியாவிலேயே இருந்து வருகிறது. ரஸாயன சாமான்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளது. மர வியாபாரத்தில் ஐந்தில் மூன்று பாகம் இங்கிருந்து வருகிறது. இது உள்நாட்டுக் கட்டிட வேலைகளுக்கும் இதர மர வேலைகளுக்கும் போதுமானதாகும். விளையாட்டுச் சாமான்கள் செய்வதில் மூன்றிலொரு பாகமே இங்குள்ளது. செருப்புச் செய்வதில் அதிகமாற்றமேற்படவில்லை.

ஏற்றுமதி சம்பந்தமான மற்றொரு முக்கிய கைத்தொழில் இயந்திர சம்பந்தமானதாகும். இது அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. விவசாயக் கருவிகள் ஏற்றுமதியிலும் மின்சார சாமான்கள் ஏற்றுமதியிலும் அதிகக் குறைவு ஏற்படவில்லை. ஆனால் உலோகங்களும் உலோகங்களால் செய்யப்

பட்ட சாமான்களும் பாதிக்கப்பட்டுள்ளன. ஜெக்கோ ஸ்லோவேகியா ஒரு பிரபல சீனி ஏற்றுமதி தேசமாகும். இப்பொழுதும் அத்தொழிலில் 100க்கு 70 பங்கு அங்கிருந்து வருகிறது. கருங்கல் பிரதேசம் பெரும்பாலும் ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்குச் சொந்தமானது. இது வெளி நாட்டு வியாபாரத்துக்கு உபயோகப் படக்கூடும்.

பிற்காலம் எப்படி யிருக்கும் என்ற கேள்வி எழலாம். இறக்குமதியையும் இதர தேசங்களுக்குக் கொடுக்க வேண்டியவை களையும் ஈடு செய்ய ஜெக்கோ ஸ்லோவேகியா 550 லட்சம் பவுண்டுக்குள்ள சாமான்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும். இது ஒரு எளிதான விஷயமல்லாவிடினும் அசாத்தியமான தொன்றல்ல.

பழைய பொருளாதார நிலையைக் கொண்டு வர முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. வெகு நாளாக ஆலோசனையிலிருந்து வந்த ஓடர் தனுபே கால்வாய் போன்ற திட்டங்கள் நடவடிக்கையில் கொண்டு வரப்பட்டுள்ளன. புதிய ரோடுகளும், ரயில்வேக்களும் அமைக்கப் பெற்றிருப்பதுடன் ஆகாய மூலம் பல தேசங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளப் பட்டுள்ளது. கார்ல்ஸ்பாடிலிருந்து மேரியன் பாடிலிருந்தும் செய்து வந்த உலகப் பிரசித்தியான ஏற்றுமதியில் குறைவு ஏற்பட்டு அதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்வதற்காக யாத்ரீகர்களுக்கு ஊக்க மளிக்கப் பட்டு வருகிறது.

வியாபார ஒப்பந்தங்கள் புதுப்பிக்கப் பட வேண்டும். சுற்றிலுமுள்ள தேசங்களோடு—சிறப்பாக ஜெர்மனியோடு வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளுவதோடு ஜெக்கோ ஸ்லோவேகியா தடையின்றி வியாபாரம் செய்து வரும் தேசங்களுடன் சிறப்பாக கிரேட் பிரிட்டனுடன் முன் போலவே இருந்து வர அனுமதிக்கப் பட வேண்டும். ஜெக்கோ ஸ்லோவேகியாவின் புதிய தலைவர் டாக்டர் ஹச்சா பதவி யேற்கும் காலத்தில் சொன்னதை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். 'பொருளாதார பந்தம் என்ற வழியில் தான் பிரிட்டனோடுள்ள நமது சம்பந்தம் ஸ்திரமாயும் சாதகமாயும் அபிவிருத்தியடைய முடியும். கியாதி பெற்ற பிரிட்டிஷ் சாமான்களை நாம் ஆதரிப்பது போல் பல ஜெக்கோ ஸ்லோவேகிய சாமான்களையும் பிரிட்டிஷார் ஆதரித்து வருகிறார்கள்.' பிரிட்டனுடனும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடனும் வியாபார பந்தம் வைத்துக் கொள்ளுவதின் அவசியத்தை ஜெக்கோ ஸ்லோவேகியா உணர்ந்திருக்கிறது. ஆகையால் தான் ஜெக்கோ ஸ்லோவேகியா அதன் ஏற்றுமதி ஸ்தாபனத்திற்கு அங்கு ஒரு நிரந்தரமான ஏஜென்ஸி ஏற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

சியாங்-கை-ஷேக்கின் ஒரு நாள் வாழ்க்கை

—ப. ம. வி.

உலகத்திலே ஏறக்குறைய நாலில் ஒரு பங்கு ஜனத்தொகையைக் கொண்டது சீனு. இவ்வளவு பெரிய தேசமானது இப்பொழுது, சிறிய ஜப்பானுல் தாக்கப்பட்டு வருகிறது. சீன யுத்தத்தை விடாப்பிடியாக நடத்தி வருகிறவன், பிரதம சேனுதிபதியும் சர்வாதிகாரியுமான சியாங்கை ஷேக் என்பவன். இவனுடைய மனைவியான மே-லிங்-சுங்-சியாங் என்பவள் அமெரிக்காவில் படித்தவள். இவள், தன் கணவனுக்கு ராணுவ சம்பந்தமாக எல்லா உதவிகளையும் செய்து வருகிருள். இந்த இருவரும் சேர்ந்து தங்களுடைய அன்ருட வாழ்க்கையை எப்படி நடத்துகிருர்கள்? தற்போதைய யுத்த நெருக்கடியை எப்படிச் சமாளிக்கிருர்கள்? இவைகளைப்பற்றி நாம் சிறிது சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

ஒரு துறவி ஆசிரமத்தில் எப்படி எளிய வாழ்க்கை நடத்தப்படுகிறதோ, அதைப்போல் இவர்களும் மிகவும் எளிய வாழ்க்கையை நடத்துகிருர்கள். தினசரி வேலைகளை குறிப்பிட்ட ஒழுங்குகளின்படி செய்கிருர்கள். கொஞ்சங்கூட மனஞ்சோராமல் இவர்கள், தினசரி வந்து குவியும் ஏராளமான வேலைகளை மிகவும் அசாதாரணமாகச் செய்து முடிக்கிருர்கள்.

சியாங்-கை-ஷேக் தினந்தோறும் காலை ஆறு மணிக்கு எழுந்திருக்கிருர். சுமார் இருபது முப்பது நிமிஷம் வரை தேகப்பயிற்சி எடுத்துக் கொள்கிருர். பின்னர் ஸ்நானம்; க்ஷவரம். பிறகு ஏழு மணியிலிருந்து ஏழரை மணி வரை, புருஷனும் மனைவியும் கலந்து அமைதியாகப் பேசுகிருர்கள். எது விடுபட்டாலும், இந்த அரை மணி நேரக்கூட்டுறவை இவர்கள் விடுவதில்லை. இருவரும் சேர்ந்து கிறிஸ்தவ மதாசாரப்படி சிறிது தெய்வப்பிரார்த்தனை செய்கிருர்கள்.

அடுத்தாற்போல் காலைப்போஜனம். இது மிகச் சாதாரண உணவுதான். அரிசிக் கஞ்சி, முட்டை, இரண்டுவித கறிகாய் தினுசுகள் இவைதான் காலை ஆகாரம். சியாங்-கை-ஷேக் எப்பொழுதுமே காபி, டீ முதலிய பானங்களை அருந்துவதில்லை. இந்த மாதிரியான கிளர்ச்சி தரும் பான வகைகள், நீடித்த உழைப்புக்கு விரோதமானவை என்பது இவருடைய அபிப்பிராயம்.

காலைப் போஜனம் முடிந்தவுடன், ராணுவ சம்பந்தமான கடிதப் போக்கு வரத்துகள், அறிக்கைகள் முதலியவைகளைப் படிக்கிருர். பின்னர்

பல போர் முகங்களின் நிலைமைகளை யும் படத்தைக் கொண்டு கணித்துக் கொள்கிறார். உடனே அந்தந்தப் போர் முனைகளில் யுத்தத்தை இந்தந்த மாதிரி நடத்த வேண்டுமென்று அறிக்கைகளும் உத்திரவுகளும் எழுதி யனுப்புகிறார். இதற்குள் காலை எட் டரை மணியாகி விடுகிறது. உடனே பேட்டி காணக் காத்துக் கொண்டி ருக்கப் பட்டவர்கள் அநுமதிக்கப்படு கிறார்கள். தினந்தோறும் சராசரி இருபது அல்லது முப்பது பேருக்கு மேல் வந்து பேட்டி காண்கிறார்கள். இவர்கள் அநேகமாக அரசாங்க உத் தியோகஸ்தர்கள், ராணுவ அதிகாரி கள், விசேஷ இலாக்காக்களின் நிபு ணர்கள் இவர்களாகவே இருக்கிறார் கள். இங்ஙனம் பல பேரைச் சந்தித் துப் பேச வேண்டியிருப்பதால், பேட்டி காணவருவோர்கள், குறிப் பிட்ட சில விதிகளை அநுசரிக்க வேண்டுமென்று கட்டளை யிட்டிருக் கிறார். முதலாவது, பேச வருவோர், விஷயங்களை வளைத்து வளைத்துப் பேசாமல், விஷயத்தைச் சுருக்கமாக வும் நேரடியாகவும் பேச வேண்டும். இரண்டாவது, பேச வருவோர், தாங் கள் என்ன விஷயத்தைப் பற்றிப் பேசுகிறோம் என்பதை முன் கூட் டியே எழுத்து மூலமாகத் தெரிவித்து விட வேண்டும். அநேகமாக இந்த அறிக்கைகள், முதல் நாளன்றே, சியாங்கை ஷேக்குக்குக் கிடைத்து விட வேண்டும். இந்த அறிக்கைகளும் புராதன முறையில் எழுதப் பெறக் கூடாது. மூன்றாவது பேச வரு வோர் ஒவ்வொருவருக்கும் ஐந்து நிமிஷ நேரத்திற்கதிகமாகக் கொடுக் கப்படுவதில்லை. இவர்கள் சொல் வதை சியாங்கை ஷேக் முதலில் கேட்டுக் கொள்கிறார். பின்னர் சில கேள்விகள் போடுகிறார். உடனே ஒருவித முடிவு சொல்லி விடுகிறார். பக்கத்திலேயே அமர்ந்திருக்கும் ஒரு சீனச் சுருக்கெழுத்தாளர், சம்பா ஷணைகள் அனைத்தையும் அப்படியே குறித்துக் கொள்கிறார்.

பேச வருவோரின்கூட்டம் கலைந்து போனவுடன், சியாங், காலை நேரத் திற்குப் பிறகு, வந்திருக்கும் அறிக் கைகளைப் படிக்கிறார். ஏறக்குறைய எல்லாப் பத்திரிகைகளையும் இவர் படிக்கிறார். சீன பாஷையிலே மொழி பெயர்த்து வந்திருக்கும் அநேக நூல்களையும் இவர் படிக்கிறார்.

சியாங்-கை-ஷேக்கின் மனைவி, அந் நிய நாட்டுப் பத்திரிகைகளை வாசித்து, அவற்றின் சாரத்தை, சுருக்கமாகவும் அழகாகவும் கணவனுக்கு எடுத்துச் சொல்கிறார்.

மத்தியான போஜனம், பன்னிரண் டரை மணி அல்லது ஒரு மணிக்கு நடைபெறுகிறது. இந்தப் போஜன காலத்தில், யாராவது பெரிய ராணுவ உத்தியோகஸ்தர், அல்லது அந்நிய நாட்டு ஸ்தானீகர் முதலியோர் விருந் தினராக வரவழைக்கப்படுகின்றனர். அநேகமாக ஐந்து அல்லது ஆறு பேருக்குக் குறையாமல் விருந்துண் பார்கள். வாரத்தில் இரண்டு மூன்று முறை ஐரோப்பிய முறையில் உணவு பரிமாறப்படுகிறதேயாயினும், அநேக மாக சீன முறையில் சமைக்கப்படு கிற உணவே பரிமாறப்படுகிறது.

அநேகமாக சியாங்கைஷேக், குறை வாகவே சாப்பிடுகிறார். இவரு டைய நண்பர்கள், இவ்வளவு குறை வான ஆகாரத்தைச் சாப்பிட்டும் இவர் எப்படி இவ்வளவு பெரிய, பொறுப்புள்ள வேலைகளைச் செய்.

கிறார் என்று ஆச்சரியப் படுகிறார்கள். சாப்பிடுவதைக் காட்டிலும் குடிப்பதில் இவர் மிகவும் மிதமாகவே நடந்து கொள்கிறார். எந்த விதமான மதுபான வகைகளையும் இவர் அருந்துவதே யில்லை. ஏதாவது முக்கியமான நாள், அதாவது தனது பிறந்த நாள் அல்லது மனைவியின் பிறந்த நாள் இந்தமர்திரி ஏற்பட்டால், ஒரு கோப்பை திராட்சை ரஸம் சாப்பிடுவார்.

சியாங் தம்பதிகள் இரண்டுபேரும், எவ்வளவு எளிய ஆகாரத்தைச் சாப்பிடுகிறார்களோ அதைப்போல் எளிய, சாதாரணமான உடையையே உடுத்துகிறார்கள். வீட்டிலும், படிக்கிற அறையி லிருக்கிறபோதும், சீன முறையிலுள்ள நீண்ட அங்கியை, சியாங்கைஷேக் தரித்துக் கொள்கிறார். கோடை காலத்தில் பஞ்சுத் துணியும், குளிர் காலத்தில் பட்டுத் துணியும் இந்த அங்கிக்கு உபயோகமாகிறது. பழுப்பு நிறம் இவருக்குப் பிடித்த நிறம். யுத்தத் தலைமைக் காரியாலயத்தி லிருக்கிறபோதோ, அல்லது மகாநாடுகளின்போதோ, பொது ஜனங்களின் முன்னர் ஆஜராகும்போதோ, ஐரோப்பிய முறையிலுள்ள சட்டையை அணிந்து கொள்கிறார். இதில், தன்னுடைய ராணுவப் பதவி முதலிய எந்த விதமான சின்னங்களும் இல்லாமலிருக்கும்.

ஸ்ரீமதி சியாங்கைஷேக்கோ, எப்பொழுது பார்த்தாலும், எந்தவிதமான கடினமான வேலைகளைப் பார்த்தாலும், மிகவும் ஒழுங்கான முறையிலேயே இருப்பார். அதாவது தலைசீவுதல், உடை சுத்தமாக இருத்தல் முதலியன யாவும் ஒழுங்காக இருக்கும். இவருடைய உடுப்புகள் யாவும் சீன முறையில் தைக்கப்பட்டிருக்கும். இங்ஙனம் எளிய முறையில் உடை உடுத்துவதன் மூலமாக, மற்ற சீன ஸ்திரீகளையும் எளிய வாழ்க்கையை நடத்துமாறு தூண்ட வேண்டும் என்பது இந்த அம்மையாருடைய எண்ணம். இவர் எந்த விதமான ஆபரணங்களையும் அணிவதில்லை.

பகல் போஜனத்திற்குப் பிறகு, சியாங்—கை—ஷேக் சுமார் அரை மணி நேரம் அல்லது ஒரு மணி நேரம் கண்ணயர்ந்து நித்திரை செய்கிறார். பிறகு, வந்து குவிந்து கிடக்கும் அறிக்கைகள், கடிதப் போக்குவரத்துகள் முதலியவற்றைக் கவனிக்கிறார். இந்தப் பிற்பகல் வேளையின்போது தான், இவர், போர்முகத்தி லுள்ள சேனைத் தலைவர்களுடன் டெலிபோன், தந்தி, ரேடியோ முதலியவைகள் மூலமாக நேரடியான தொடர்பு வைத்துக் கொள்கிறார். சில சமயங்களில் இந்தப் பிற்பகல் நேரங்களில் ராணுவ மகாநாடொன்று கூட்டி அதில் பல ராணுவப் பிரச்னைகளைப் பற்றியும் பேசுகிறார். சிறிது ஓய்வு இருந்தால், பேட்டிகாண விழைவோருக்கும் பேட்டி யளிக்கிறார்.

சமாதான காலங்களில், சியாங் தம்பதிகள் மாலை நேரத்தில், சிறிது தூரம் உலாவச் செல்வார்கள். ஆனால் இப்பொழுது இந்தச் சுகத்தைக்கூட இவர்கள் அநுபவிப்பதில்லை.

சியாங் தம்பதிகள் சாதாரணமாக இரவு ஏழரை அல்லது எட்டு மணிக்கு இராப் போஜனம் உண்பார்கள். பின்னர் இருவரும் சேர்ந்து சிறிது நேரம் ஓய்வு கொள்கிறார்கள். இந்தச் சமயத்தில் கடிதங்கள் படிப்பது, யுத்தகளத்தி லிருந்து வரும் அறிக்கைகளைப் படிப்

பது, அல்லது நூல்களை வாசிப்பது இவற்றில் காலங்கழிக் கிறார்கள். சியாங்கை-ஷேக், சாதாரணமாக புராதன சீனாவில் நடைபெற்ற ராணுவப் போராட்ட சம்பந்தமான சரித்திரங்களைப் படிப்பதிலே ஆசையுள்ளவராயிருக்கிறார். இராப் போஜனத்திற்குப் பிறகு, முக்கியமான பிரச்னைகளைப் பற்றி வாதஞ் செய்ய இவர் விரும்பவில்லை. சாதாரணமாக இரவு பத்து அல்லது பதினொரு மணிக்கு படுத்துக் கொள்ளச் செல்கிறார்கள் சியாங் தம்பதிகள்.

ஸ்ரீமதி சியாங்-கை-ஷேக்கின் தினசரி வாழ்க்கையானது, தனது கணவனைவிட அதிக சுறு சுறுப்புடையதாகவும் பலதிறப்பட்டதாகவும் இருக்கிறது. இந்த அம்மையார் முதலில் ஆகாயப்படை கமிஷனின் காரியதரிசியாயிருந்தார். இந்தப் பதவியை இவர் ராஜீநாமா செய்துவிட்ட பிறகு, சமூகத் தொண்டிலே இவர் அதிகமாக ஈடுபட்டு வேலை செய்கிறார். இந்த வேலைகளை எங்கெந்த விதமாகச் செய்ய வேண்டுமென்பதைப் பற்றியும், இவைகளுக்கான திட்டங்கள் போடுவதிலும் இவருடைய காலை நேரம் கழிகிறது. பின்னர் தனக்கு வரும் கடிதப் போக்கு வரத்துகளைக் கவனிக்கிறார். இவர், தமக்கு வரும் கடிதங்களுக்குத் தாமே பதில் எழுதியனுப்புகிறார். டைப் அடிப்பதில் இவர் பெரிய நிபுணர். இந்தக் கடிதப் போக்குவரத்துகள் அநேகமாக வெளி நாடுகளுடனேயே இருக்கிறது.

மாலை நேரங்களில் ஸ்ரீமதி சியாங், பேட்டிகாண வருவோரைக் கண்டு பேசுகிறார். சில சமயங்களில், ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு மணி நேரத்திற் கதிகமாகக்கூடப் பேசுகிறார். யுத்தந் தொடங்கின பிறகு, சியாங் தம்பதிகள், உல்லாசப்பொழுது போக்கு என்பதில் சிறிது கூடக் கழிப்பது கிடையாது. ராத்திரி நேரங்களில் சிறிது காலம் படிக்கிறார்களே, அதுதான் இவர்களுடைய ஓய்வு. இவர்களுக்கு அந்நிய நாட்டு நண்பர்களும் சிலர் உண்டு. இவர்களில் முக்கியமானவர்கள், டப்ளியு. எச். டோனால்ட் என்பவரும், ஜார்ஜ் டப்ளியு. ஷெப்பர்ட் என்பவரும் ஆவர். இவர்களிருவரும், உத்தியோகப் பற்றற்ற முறையில், சியாங் தம்பதிகளுக்கு அரசியல் சம்பந்தமாக ஆலோசனை கூறுகிறவர்கள். இவ்விரண்டு பேருடனும், சியாங் தம்பதிகள் அடிக்கடி கலந்து பேசுவார்கள்.

சாதாரணமாக ஒரு மனிதன், நிமிஷத்திற்கு 90 வார்த்தைகள் பேசுகிறான். வேகமாகப் பேசுகிறபோது, 150 வார்த்தைகளுக்கு மேல் பேச முடியாது.

ஃ ஃ ஃ

ஒரு மனிதனோடு சாதாரணமாகச் சம்பாஷணை செய்ய வேண்டுமானால் 850 வார்த்தைகள் தெரிந்து கொண்டால் போதுமானது.

திருக்குறளின் அமைப்பு

—வ. மு.

தமிழ் நாட்டில் தமிழ் மொழியை வளர்த்தோர் பலர். முன்னாளில் தமிழ் வளர்க்கப் பாடு பட்டவர் புரவலரும், புலவரும் என்ற இரு பாலாருமே யாவர். ஆண் மக்களன்றிப் பெண் மணிகளும் தமிழ்ப் புலமை பூண்டிருந்தனர். அரசர் மன்னுயிர்களைக் கண்ணெனக் காத்து வந்தனர். தமிழ் நூல்கள் பெரும்பாலாகச் செய்யுட்களாகவே இருந்தன. காலந்தோறும் புதுப் புது நீதி நூல்களும் இலக்கண நூல்களும் தமிழ் வளங் காட்டித் தோன்றின. சமய நூல்கள் இடைக் காலத்தில் தமிழன்னைக்கு வனப்பளித்தன. தமிழ் மேதாவிகள் எல்லாரும் ஒரே காலத்தவ ரல்லர். எல்லாருக்கும் பொதுவாக நிலவும் நூல்கள் தமிழில் மிகச்சிலவே. அவற்றுள் திருக்குறள் மிக்க இனிமையும், தக்க நுண் பொருளுங் காட்டி இன்று வரையும் விளங்குகின்றது. இருபதாம் நூற்றாண்டில் தமிழிற் புதுக் கலனாகிய பாடலணியைத் தமிழன்னை தாங்கினள். தேசியப் பாடல்கள் சில பாவலர்களால் இன்றும் தமிழ் மாதுக்குப் புனையப் பெறுகின்றன. எவரும் திருவள்ளுவரையும், திருக்குறளையும் மறக்கவுமில்லை.

திருவள்ளுவர் ஆயிரத்துத் தொண்ணூறு ஆண்டுகளுக்குமுன்பு அவதரித்த ஒரு பெரியார். காலத்தொடு பயின்று எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டவர் நம் பெரியார். கற்புடை வாசுகி அவருக்கு மனைவியாக வாய்த்தமை ஒரு அற்புதச் செயலாலேயாம். இல்லற மாட்சியை வள்ளுவனார் மக்களுக்கு நடத்திக் காட்டியவர் என்றே அறிஞர் கூறுவர்.

உலக சக்தியை நிலை நிறுத்தும் உயர்ந்தபொருள் ஒன்று உண்டு. அப்பரம்பொருள் உடலுடை உயிர்களின் கவலையை ஒழிக்க வல்லது என்பது வள்ளுவர் கருத்து.

தனக்கு உவமை இல்லாதான் தாள் சேர்ந்
தார்க்கு அல்லான்
மனக்கவலை மாற்றல் அரிது.

இக்குறளின் அமைப்பும் அரும்பொருள் அமைதியும் சிந்திக்கத் தக்கதாம். சிற்சில குறிப்பை இங்கே தருவாம்.

'எட்டுவான் குணத்தீசனெம்மான்றனை' என்று தமிழ் மறையாகிய தேவாரம் புகல, 'கோளில் பொறியிற் குணமிலவே எண் குணத்தான் தாளை வணங்காத் தலை' என்ற திருவள்ளுவர் பொது மறை, தலை சாய்க்காதவர்க்கு ஒரு போதனையாகுமே! ஆனால், ஆகமம் புகலும் அரிய எண் குணப் பரம்பொருளை வணங்கியே

வள்ளுவர் தெள்ளியரானார் என்பதும் தெளிவாம்.

மழையும்தெய்வஆணைவழியதாகும். ஓரறிவு உயிரும் மழை இன்மையால் இல்லாமற் போய்விடும். கடலாலும் மழையின்றிப் பயனுண்டாக மாட்டாது. அன்பு நிரம்பிய உள்ளமுடைய மக்கள் சீரியோராவர். அவர் பெரிய வல்லபமுடையவர். மஹாத்மா காந்தியடிகளை இக்காலம் கண்ணுற் பாருங்கள்! அவர் நடையைப் பின்பற்றுங்கள்! அப்போது முன்னூலுள் கூறிய பல உண்மைகள் புலனாகும்.

திருவள்ளுவர், ஓரெழுத்துச்சொல், பெரிய பொருள் காட்டக் குறளில் அமைத்துத் தந்தார். ஆ—பசு. பசு யாவருக்கும் சுகந் தருவது. அது பாலர்களுக்குத் தாயாய் நிலவுவது; கடவுளுக்கும் அபிஷேகப்பால் உதவுவது. பயிர்த் தொழிலாளர்க்கு இன்றியமையாத பல சாதனங்களைப் பசுவினால் அடைகிறோம். பசுவினால் மறு உலக நலமும் உண்டாகும் என்பது நமது சமய நூற்றுணிபு.

> 'ஆ பயன் குன்றும் அறுதொழிலோர் நூல்
> மறப்பர் காவலன் காவா னெனின்'

என்ற குறள் விசித்திரமாக இருக்கிறது. அறு தொழிலோர் பார்ப்பனர் என்பது பழையவுரை. அதனை மாற்றி வேறு பொருள் கூறுவாருமுளர்.

ஒருவன் எதனைக் காக்கா விட்டாலும் நாவைக் காக்க வேண்டும் என்று ஒரு குறள் கற்பிக்கின்றது. நா என்ற ஓரெழுத்து உலக வாழ்வில் மனிதன் மேன்மை பெற அச்சாணியாக நிற்றலை விளக்குவது பாராட்டக் கூடியதல்லவா?

வறியவர்களுக்குக் கொடுத்தலே ஈகையாகும். ஆடம்பரக் கொடை நன்மை தரமாட்டாது. பணம் வைத்துக் கொண்டு ஒருவன் இரப்பது இழிவாகும். 'ஏற்பதிகழ்ச்சி' இப்பொருளை நிலை நாட்டும். ஈ—கொடு. தீ என்பது நெருப்பு; உத்ராக்கினி முதலிய பொருள் தரும். 'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்' 'தீ அளவன்றித் தெரியான்' என்ற குறள்கள் எவ்விதமான பொருட் பொலிவுடையன! வீயாது பின் சென்றடையும், கை செய்தூண் மாலையவர் என்பவற்றில் வீ கை முதலிய நெட்டெழுத்துகள் அழியாமை, கைத் தொழில் என்னும் அர்த்தங்களைத் தருகின்றன. கைத் தொழில் வளர்ச்சியுடைய நாடும் மக்களும் முன்னேற்றம் பெற்றிருப்பதை நாம் வெளிப்படையாகக் காணலாம்.

வள்ளுவர் வீரமுடையார் செயலைப் பாராட்டிக் கல் நடும் வழக்கத்தையும் ஒரு குறளில் காட்டினார்.

> என் ஐமுன் நில்லன்மின் தெவ்விர்! பலர் என்ஐ
> முன் நின்று கல் நின்றவர்.

பகைவர்களே! நீங்கள் எனது தலைவன் முன் நில்லாதீர்; பலர் எனது தலைவன் முன் எதிர்த்து நின்று கல் நின்றனர். எனவே, பகைவர் தோற்று இறப்பெய்தினர் என்றபடி.

இவ் வரலாறு வேறு நூலுள் வருமாறு:—

> முனைக்கு வரம்பாகிய வெவ்வேல் நெடுந்தகை
> நடுகல் பிறங்கிய உவல்இடு பறந்தலை
> பரலோடு மருங்கில் பதுக்கை சேர்த்தி
> மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
> அணிமயிற் பீலிசூட்டிப் பெயர் பொறித்து
> இனிது நட்டனரே கல்லும்

(உவல்—தழை. பதுக்கை—கற்குவியல்.)

இல்லறத்திற்கு ஒரு பெரு விளக்கான பெண்மணி தன் கணவனே இன்புடன் வழிபாடாற்றின் தேவருலகிற் சிறப்பெய்துவள் என்பது உயரிய போதனையாம்.

உயிர்கள் தாந்தாம் செய்த நல்வினை தீவினைகளினுல் பிறப்பை யடையும். பிறப்புப் பலவாகும். நல்வினை தீவினை என இருதிறமானுலும் அவை பிறவிக் கேதுவாம் என்பதை வள்ளுவனுர் செவ்விது விளக்கினுர்.

இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு.

நல்வினைப்பயன் இன்பம். தீவினைப் பயன் துன்பம். இருவினை யொப்பும் மல பரிபாகமும் உயிரை இறைவனுடன் கூட்டும் இம் மனிதப் பிறவியுடன் எல்லாம் நீங்கும் என்பது பகற் கனவாகும். வித்தகராகிய மணிவாசகரின் அணிவாசகத்தை அக மகிழ்வொடு படித்தால் உண்மை காண முடியும். உண்மை நூலாலன்றி அறிவு வளரமாட்டாது.

அறிவுடைமையாவது பிறப்புக்குக் காரணமாய் அறியாமை நீங்கும் பொருட்டு, வீட்டிற்குக் காரணமாகிய இன்பமெய்ப் பொருளை அனுபவத்தாற் தெளிதலேயாகும். இக் குறளுக்குச் சித்தாந்தப் பெருநூல்கள் முழுதும் சமம் பெற்று நிற்கும்.

பிறப்பென்னும்பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்பது அறிவு.

இதனையே 'செம்பொருட்டுணிவே' என்று வாதவூரடிகள் வாழ்த்தினுர்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள் சிலவற்றில், பிரிட்டிஷ் மன்னரின் பிரதிநிதிகளாக ஐந்து கவர்னர்—ஜெனரல்கள் நிருவாகத்தை நடத்துகிறுர்கள். இவர்கள் பெயரும் எந்தெந்த நாட்டுக்கு அதிகாரிகள் என்ற விவரமும், இவர்களின் சம்பள விகிதமும் கீழே தரப்பட்டிருக்கின்றன :—

பெயர்.	எந்த நாட்டு கவர்னர்–ஜெனரல்	வருஷ சம்பளம் பவுன்.
லார்ட் லின்லித்கோ	இந்தியா	20,000
லார்ட் ட்வீட்ஸ் மூயிர்	கானடா	10,000
லார்ட் கௌரீ	ஆஸ்திரேலியா	10,000
லார்ட் கால்வே	நியூ ஜீலந்து	5,000
ஸர் பாட்ரிக் டங்கன்	தென்னுப்ரிக்கா	10,000

ஞானக்களஞ்சியம்

ஜோதி

வேதாந்த ரகசியங்கள்

—ரா. ஸ்ரீனிவாசன்

(அன்னார் மகன் ஸ்ரீ ராமசந்திரன் உதவியது)

மனத்தின் நடுநிலைமை :—

கப்பலும் கொடிமரக் காக்கையும்

கரைக்குச் சமீபத்தில் நெருங்கி நின்று கொண்டிருந்ததோர் கப்பலினைக் கண்ட காக்கையானது அக் கப்பலின் பாய் மரத்தினது நுனியிற் போயுட்கார்ந்து கொண்டது. கப்பல் புறப்பட்டுக் கடலில் வெகு தூரஞ் சென்றபொழுதுதான் காகமானது 'தான் கடல்மத்தியில் யாத்திரை செய்வதை யுணர்ந்து, பாய்மரத்தில் வெகு உக்கிரமமாய்த் தாக்கிக் கொண்டிருந்த காற்றின் மிகுதியால் காக்கைக்கு அப் பாய்மரத்தில் ஒரு நிமிஷ (நேரம்)ங்கூட இருக்க முடியாமலும், பாய் மரத்தினின்றும் பறந்து சென்றால் கண்ணுக்குக் காணாத மறு கரைக்குப் போய்ச் சேருவோ'மென்பதில் நம்பிக்கையில்லாமலும், கப்பல் கரையை யடையும் வரை வாயசம் மிகத் தாங்கமுடியாத கஷ்டங்களை யனுபவித்து வந்தது.

அதுபோல் சகலவிதமான சம்சார விஷயங்களிலும் மல மூத்திரங்களே போல வெறுப்புண்டாவதால் இவ்வுலக வின்பமும், பிரஹ்மானந்த சமரச சுவாநுபூதியை யடையப்பெறாததால் பேரின்பமுஞ் சித்தியாத முமுக்ஷுவானவன், பிரகிருதி புருஷனது (ஈசுவர ஜகத்தினது) மத்தியிற் கிடந்து கொடி மரத்துக் காக்கை போல் பரிதவிக்கின்றான்.

மோகம் பொல்லாது :—

குரங்கும் இளநீரும்

குரங்கு பிடிக்குங் குறவர்கள் இளந் தேங்காய்களைச் சிறிது மட்டும் திறந்து குரங்கிற்கெதிரே வைப்பார்கள். குரங்கானது இளநீரிலுள்ள ஆசையால் கிட்டநெருங்கி அதற்குள்ளே கையை நுழைத்து அங்குள்ள வழுக்கைகளை நகங்களினாற் சுரண்டி ஒருங்குசேர்த்து முழுதையும் உள்ளங்கையில் அடக்கிக் கொண்டு தின்பதற்காகக் கையை மேலே தூக்

கும். அப்பொழுது கை நிறைய வழுக்கை யிருப்பதனால் அச்சிறிய துவாரத்தின் வழியே கையை யுயர வெடுப்பதற் கதனால் முடிவதில்லை. இச்சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற குறவர்கள் உடனே சென்று குரங்கைப் பிடித்துக்கட்டிக் கொண்டு போய்விடுவார்கள். இது போலவே மனிதர்கள் சாரமற்ற சம்சார விஷயங்களை அனுபவிப்பதற்காகத் தங்களுடைய மோஹத்தை ஒருங்கே கூட்டித்திரட்டிப் பருவதாகாரமாக்கிக் கொள்ளுகின்றார்கள். அதனாலவர்கள் எம தூதர்களின் பாசத்தாற் கட்டப்பட்டவர்களாய் இடையறாது ஜனன மரணங்களாகிய பெருந்துக்கங்களை யனுபவிக்கின்றார்கள். குரங்கினுடைய கையிலிருக்கின்ற வழுக்கைகளை விட்டுவிட்டால் அது குறவர்களின் கையிலகப்படாது தப்பித்துக் கொள்வது போல் மோகத்தை மாத்திரம் மனிதர்கள் விட்டு விடுவார்களே யானால் அவர்கள் எம பாதையினின்றுந் தப்பித்துயிர் வாழலாம். ஐயோ பாவம், ஆருயிர் பெற்ற மானிடர்க்கெல்லா மிவ்விவேகமோர் சிறிதுந் தோன்றுவதில்லை யன்றோ?

நன்மொழி ஏற்றல் —

ரூபாயும் சத்தக்கட்டையும்

மனிதர்கள் ஒருவர்க் கொருவர் ரூபாய்களை வாங்கிக் கொள்ளும் பொழுது நல்லசத்த முள்ளதுதானா? அல்லது சத்தக் கட்டையா? என்று தெரிந்து கொள்வதன் பொருட்டு ரூபாயைக் கையினது கட்டை விரல் நகத்தின் மேல் வைத்து உயரச் சுண்டிப் பார்க்கவோ அல்லது தரையில் தட்டிப்பார்க்கவோ செய்வார்கள். அப்பொழுது சத்தத்தில் ஏதேனும் குறை யிருப்பதாகத் தெரிந்தால் உடனே அதனை யுறைகல்லிலுறைத்துப் பார்ப்பார்கள். இவ்வளவு பரீக்ஷைகளுஞ் செய்து பார்த்த பிறகு தான் ஜனங்கள் நாணயங்களைச் சாதாரணமாக அங்கீகரிக்கவோ அல்லது தள்ளவோ செய்வார்கள். இது சர்வதேசத்திலுமுள்ள பழக்கம். இது போல மனிதர்களின் முகங்களில் நின்றும் இடைவிடாது பொழிந்து கொண்டிருக்கின்ற வசனகோடிகள் முழுதையும் குணாகுணங்களைஞ் சீர்தூக்கி யறிகின்ற விவேகிகள் மிகப்பரிசோதனை புரிந்து நல்ல பிரயோஜனமுள்ளவைகளை யங்கீகரித்தும் அதற்கெதிரிடையா யுள்ளவைகளைத் தள்ளியும் வரவேண்டியதவசியமாகும்.

உலக அனுபவம் ஏற்றல் :—

நஞ்சுண்ட குஞ்சன் கதை

குஞ்சனென்ற வொருவன் நஞ்சைத்தின்று சகிக்க முடியா வண்ணம் வாந்தி பேதி யெடுத்துக் கடைசியாக உயிரை விடுத்தான். ஆனால் அக்குஞ்சன் தான் நஞ்சுண்டதால் நேர்ந்த துன்பங்களையும் அனுபவித்த கஷ்ட நஷ்டங்களையும் தனது பிற்காலத்திய சந்ததியார்களு மறிந்து கொண்டால் அவ்விதமான ஆபத்திற்காளாக மாட்டார்களெனக் கருதி, நஞ்சின் கொடுமைகளைப் பற்றி விஸ்தாரமாக வொரு புஸ்தக மெழுதி வைத்தான்.

ஷை கிரந்த கர்த்தாவினுடைய பிள்ளைகளும், பேரன்மார்களும் அக்குஞ்சனது அநுபவ சாஸ்திரமாகிய புஸ்தகத்தைச் சிறிதும் உண்மையற்றதெனத் தள்ளி அவர்களும் முறையே

நல்ல புத்தி

(சரத் சந்திர சட்டர்ஜி)

வங்காளி மூலத்திலிருந்து மொழி பெயர்த்தவர்

—எஸ். கிருஷ்ணன்

2

சுமார் இரண்டு மாதங்கள் சென்றன. ஒரு நாள் நாராயணி குளித்துவிட்டு வந்து இடுப்பிலிருந்த குடத்தை இறக்கி வைத்துக் கொண்டே சொன்னாள்—நித்தோ! அந்தக் குரங்கு எங்கே போயிருக்கு?

'குரங்கு' யாரென்று அந்த வீட்டிலுள்ள யாவரும் அறிவார்கள். 'சின்ன ஐயா இதுவரை இங்கேதான் இருந்தார். அதோ அங்கே உட்கார்ந்து பட்டம் பண்ணிக் கொண்டிருக்கிறார் பாருங்கள்' என்றாள் நித்தியகாளி.

நாராயணி ராமனைப் பார்த்து—'அடே சிடுமூஞ்சி இங்கே வா. இனி உன்னாலே குளத்திலேயோ கிணற்றிலேயோ விழுந்து முழுகிச் சாகத்தானா வேணும்?' என்றாள்.

ராமலால் கொடி யொன்றைச் சீவிக் கொண்டே நாராயணி முன் வந்து நின்றான்.

நாராயணி கேட்டாள்—'பிஹாரி வீட்டு வெள்ளரிக் கொடியை ஏன்

நஞ்சை யுண்டு குஞ்சனது உலகைத் தேடிச் சென்றார்கள்.

அது போலவே, வேதங்களால் விலக்கப் பட்டுள்ள கெட்ட கர்மங்களை மனிதர்கள் அனுஷ்டித்து அனுபவத்திற் பார்க்க வேண்டுமென விரும்பாமலே அவைகளை நீக்கி விட வேண்டும். அல்லது ஒருக்கால் 'கெட்ட தாயினும் அனுபவித்துப் பார்த்துத் தள்ளுவோம்' என்று ஊகிப்பதனால்;

'யம்யம் சீலயதே நித்யம் தம்த மேவானு சீலயேத்'

'எதெதைத் தினந்தோறும் பழகி வருகின்றானோ அதனையே செய்ய வேண்டியதாய்—நேரிடும்' (அதாவது அதுவே யியற்கையா யமையும்) என்ற நியாயப் பிரகாரம் எவர்கள் கெட்ட நடத்தை யுடையவர்களாகின்றார்களோ அவர்கள் அக் கொடிய வழக்கமே பழக்கமா யடைந்து அதற்கே அடிமையாகிப் பின்னர் அவர்கட்கு அதினின்றும் மீண்டு நற்செய்கைகளைப்பின் பற்றுவதற்குச் சற்றும் முடியாமற் போய் விடுமென்பது குஞ்சன் கதையிற் கைகண்ட அநுபோகமாம்.

பிடுங்கிக் கொண்டு வந்தாய் சொல்லு?'

'நான் பிடுங்கினதை அவன் பார்த்தானு?'

'அவன் பார்க்கா விட்டால் நான் பார்த்தேன். ஏன் பிடுங்கினுய் சொல்லு?'

'அந்தக் கிழட்டு கைம்பெண்டாட்டி என்னை ஏன் வைதாள்?'

நாராயணி கோபம் பொங்கக் கேட்டாள்—'வசைவு பற்றி பின் பேசு. நீ ஏன் திருடினுப்? அதுக்கு முதலில் சமாதானம் சொல்லு.'

ராமன் கோபமும் ஆச்சரியமும் நிறைந்த குரலில் கேட்டான்—'திருடினேனு?' கிடையவே கிடையாது. ஒரு வெள்ளரிக் கொடியைப் பிடுங்கினுல் அது திருடா?'

நாராயணி இன்னும் அதிக ஆத்திரமடைந்தாள். 'ஆம், குரங்கே ஆம்! அது நூறு தடவை திருட்டுத்தான். பச்சைக் குழந்தைகூட திருட்டு இன்னதென்று அறியுமே. முதல் போக்கிரியானபோதும் திருட்டு என்ன என்றுகூடத் தெரியாதா? ஒரு காலில் நில்லு. தடிப்பயலே ஒரு காலில் நில்லு!'

இந்த வீட்டில் கோவிந்தன்தான் ராமனுடைய வாகனம். இருபத்தி நான்கு மணி நேரமும் அவன் ராமன கூடவே இருப்பான். அவனுக்கு வேண்டியதெல்லாம் செய்து கொடுப்பான். ராமன் சொற்படி இதுவரை அவன் பட்டத்தைப் பிடித்துக்கொண்டிருந்தவன் குழப்பத்தைப் பார்த்து பட்டத்தை விட்டெறிந்தபின் தாயின் அருகே போய் நின்று கொண்டான்.

ராமன் அங்கும் இங்கும் திரும்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவன் —இப்படி நில் சித்தப்பா! என்று ஒற்றைக் காலால் நிற்கும் மாதிரியைக் காட்டிக் கொடுத்தான்.

ராமன் 'பளார்' என்று ஒரு அறை அவன் கன்னத்தில் வைத்து விட்டு மறுபுறம் திரும்பி ஒற்றைக் காலால் நிற்க ஆரம்பித்தான்.

நாராயணி சிரிப்பை சிரமத்துடன் அடக்கிக் கொண்டு இடுப்பில் குழந்தையை ஏற்றிய வண்ணம் சமையல் அறைக்குள் சென்றுள். இரண்டு நிமிஷத்துக்குப் பிறகு நாராயணி திரும்பி வந்து பார்க்கையில் ராமன் முனபோலவே ஒரு காலால் நின்று கொண்டு வேஷ்டி நுனியால் அடிக்கடி கண்களை துடைத்துக் கொண்டிருக்கிருன்.

நாராயணி சொன்னுள்—'சரி போ. நின்றது போதும். இனிமேல் இப்படி போக்கிரித்தனம் பண்ணுதே.'

ராமன் அவள் சொன்னதைக் கேட்கவில்லை. கோபத்துடன் முன் போல் ஒற்றைக் காலால் நின்று கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

நாராயணி அருகே போய் அவன் கையைப் பிடித்து இழுத்தாள். ஆனுல் அவன் உறுதியுடன அங்கேயே நின்றுன். அவளுடைய கையை இழுத்து தூர எறிந்தான். நாராயணி மறுபடியும் சிரித்துக் கொண்டே கையைப் பிடித்து இழுத்தாள். இப்பொழுது முன் போல் அவள் கையை உதறித் தள்ளி விட்டு ஓடிப் போய் விட்டான்.

ஒரு மணி நேரத்துக்குப் பின் நித்தியகாளி ராமனைத் தேடிப் புறப்பட்

டாள். அவன் காளி கோயில் மண்டபத்தில் முகத்தைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்.

'பள்ளிக்கூடத்துக்கு மணியாயிட்டுதே. அம்மா கூப்பிடுகிறாள்,' என்றாள்.

• ராமன் பதில் சொல்ல வில்லை. கேட்காதவன் போல் உட்கார்ந்திருந்தான். நித்தோ எதிரே போய் நின்று கொண்டு சொன்னாள்—'பெரியம்மா உங்களைக் குளித்து விட்டுச் சாப்பிட வரச் சொல்கிறாள்.'

ராமன் அவளைக் கூர்ந்து பார்த்துக் கொண்டு கத்தினான்—'போ. இங்கிருந்து தூரப் போ.'

'ஆனால் அம்மா சொன்னது தெரிகிறதா !'

'கேட்க மாட்டேன். போ. நான் குளிக்க மாட்டேன். சாப்பிட மாட்டேன். ஒன்றும் செய்ய மாட்டேன். இங்கிருந்து போய் விடு.'

'சரி நான் போய் சொல்லி விடுகிறேன' என்று சொல்லிக் கொண்டு நித்தியகாளி புறப்பட்டாள்.

ராமன் சட்டென்று எழுந்து பின்புறத்திலுள்ள பாசி பிடித்த குளத்தில முழுக்குப் போட்டு விட்டு சொட்டச் சொட்ட ஈரவேஷ்டியுடன் மறுபடியும் அங்கேயே வந்து உட்கார்ந்தான. நாராயணி இதைக் கேட்டு பயந்து ஓடி வந்தாள்—'அட பிசாசே' நீ என்ன செய்து விட்டாயடா? பயத்தினாலே குளத்தின பக்கத்திலேயே யாரும் போக மாட்டார்கள். நீயானால் அதில் சுகமாகக் குளித்து விட்டாயே,' என்றாள் திகைப்புடன்.

தன் முந்தானையால் அவன் தலை உடம்பெல்லாம் துடைத்து வேறு வேஷ்டி உடுத்தி வீட்டுக்கழைத்துப் போய் தட்டில் சாதம் பரிமாறினாள். ராமன் கல்லுப் பிள்ளையார் போல் தட்டின்முன் முகத்தைத்தொங்க விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான்.

நாராயணி அவன் மனதை அறிந்து அருகே போய் தலையை மெதுவாய் தடவிக் கொடுத்துக் கொண்டே சொன்னாள். 'நீ என் ராஜாவல்லவா, இப்போ சாப்பிட்டு விடு. ராத்திரி நான் ஊட்டுகிறேன். இதோ இவ்வளவு மாப்பிசைந்து வட்டு இட வேண்டும். ராஜாவோன்னோ, சாப்பிட்டு விடு.'

பிறகு ராமன் பேசாமல் சாப்பிட்டு விட்டு வேஷ்டி கட்டிக் கொண்டு பள்ளிக்கூடம் போய் விட்டான்.

வேலைக்காரி சொன்னாள் 'அம்மா உங்களால்தான் பையன் கெட்டுப் போகிறான், இவ்வளவு பெரிய பையனை மடியில் உட்கார வைத்து சாதம் ஊட்டுவது எங்காவது உண்டா? கொஞ்சம் கோபித்துக் கொண்டு விட்டால் மடியில் எடுத்து வைத்து சாதம் ஊட்டணும். இது எந்த ஊர் வழக்கம்?

நாராயணி சிரித்துக் கொண்டே சொன்னாள்—இல்லா விட்டால் சாப்பிட மாட்டானே. ராத்திரி ஊட்டுகிறேன் என்றதால் சாப்பிட்டான். இல்லா விட்டால் முகத்தைத் தூக்கிக் கொண்டு உட்கார்ந் திருப்பான். பள்ளிக் கூடத்துக்குப் போகவும் மாட்டான்.

வேலைக்காரி சொன்னாள்—சாப்பிட மாட்டானா? பசித்தால் தானே சாப்

பிடுகிறுன். இவ்வளவு வயதாகி விட்டது.

நாராயணி சொன்னுள்—நீங்கள் அவளுடைய வயதைத் தான் காண்கி நீர்கள். பெரியவனுகி விட்டால் தானே அறிந்து கொள்கிறுன். வெட்கப் பட்டுக் கொள்கிறுன். அப்போ அவன் மடியில் வந்து உட்காரவும் மாட்டான்' ஊட்டச் சொல்லவும் மாட்டான்.

வேலேக்காரி வருத்தத் துடன் சொன்னுள்-நான் நல்லதுக்குத்தானே சொன்னேன். அப்படியில்லா விட்டால் எனக்கென்ன? பதின்மூன்று பதி நான்கு வயதாகிறது. இன்னும் புத்தி வராமல் போனுல் என்றைக்குத் தான் வரப் போகிறது?'

நாராயணிக்கு கோபம் வந்து விட்டது. சொன்னுள்—'புத்தி வருவது வயதைப் பொறுத்தில்லே. கொஞ்சம் பேருக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்னுல் வருகிறது. இன்னும் கொஞ்சம் பேருக்கு பின்னுலே வருகிறது. அவனுக்குப் புத்தியே வரவில்லே என்ருலும் உங்களுக்கு என்ன மோசம் வந்து விட்டது?'

வேலேக்காரி சொன்னுள்—இதுதான் உங்களுக்குள்ள தோஷம்! அவன் விஷமக்காரனுய்ப் போனது உங்களுக்குத் தெரியாமலா போய்விட்டது? அக்கம் பக்கங்களில் நீங்கள் கொஞ்சுவதால் தான் அவன்—'

நாராயணி கடுகடுத்த குரலில் சொன்னுள்—அக்கம் பக்கத்துக்காரர்கள் கொஞ்சுவதைத் தான் பார்க்கிறுர்கள். அவனே கோபித்துக் கொள்வதையும் அதட்டுவதையும் அவர்கள் காண்கிறதில்லே. ஆனுல் நீயோ அயல் வீட்டுக்காரி அல்லவே. காலேயிலிருந்து ஒற்றைக் காலில் நின்று அழுது கொண்டிருந்தான். குளத்தில் அழுக்கடைந்தஜலத்தில் குளித்தான். காய்ச்சலாய் படுத்துவிடுவானே என்னமோ கடவுளுக்குத்தான் தெரியும் அவனே இன்னும் பட்டினியே. பள்ளிக் கூடத்துக்கு அனுப்ப வேண்டுமென்ரு நீ விரும்பினுய்? வீட்டுக் காரரும் வெளியே உள்ளவரும் இப்படிக் குறை கூறுவது பொறுக்கவே முடியவில்லே: நித்தோ!'

சொல்லும் போதோ அவளுடைய குரல் தழு தழுத்து கண்களில் நீர் ததும்பிற்று. முந்தானேயால் கண்ணேத் துடைத்துக்கொண்டாள். இதே விஷயமாய் நேற்று கணவனுடன் போருக்கு நின்றதை வேலேக்காரி எப்படி அறிவாள்!

தாஸி துயரமும் வெட்கமும் தாங்காமல் சொன்னுள்—'என் அழுகிறீர்கள்? நான் கெடுதலாக ஒன்றும் பேசவில்லேயே. ஊர்க்காரர் பலதும் சொல்கிறுர்களே. அவனேக் கொஞ்சம் கவனியுங்கள் என்றுதான் சொன்னேன்.'

நாராயணி கண்களேத் துடைத்துக் கொண்டு சொன்னுள்—கடவுள் எல்லோரையும் ஒரே மாதிரி சிருஷ்டிக்கவில்லே. அவன் விஷமக்காரனுய்ப் போய் விட்டால் யார் யார் ஏசுவதையெல்லாம் கேட்க வேண்டியிருக்கிறது? எப்பொழுது பார்த்தாலும் நான் அவனே அருமையாய் வளர்ப்பதைப் பற்றித் தான் குறை! அவனே வெட்டி ஆற்றில் மிதக்க விட்டு விடட்டுமா? அப்போத்தான் எல்லோருடைய மனதும் ஆறும். இவ்வளவும் சொல்லி விட்டு பதில் கூட எதிர் பார்க்காமல் அவள் வீட்டுக்குள் சென்ருள்.

வேலைக்காரியுடைய முகம் சுண்டிப் போய் விட்டது. மனதிற்குள் சொல் லிக் கொண்டாள்—ஈசனே எல்லா வற்றையும் அறிவார். புத்தியும் தைரி யமும் எந்த விஷயத்திலும் காட்டுகிற வள் இந்தச்சிறு விஷயத்தை ஏன் அறி யாமல் இருக்கிறாள்? பையன் ஒருநிமி ஷம் ஒரு காலால் நின்றால் உலகமே தலை கீழாய்ப்போய் விட்டதோ?'

அண்ணனுடன் உட்கார்ந்து சாப் பிடுவது என்றால் ராமனுக்கு அது கொஞ்சம் கூடப் பிடிக்காது. அன் றிரவு நாராயணி வேண்டுமென்றே இரு தட்டையும் அருகில் வைத்து விட்டுத் தான் ஒரு பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

ராமன் சமையல் அறைக்குள் நுழைந்தவுடன் ஒரு குதி குதித்தான். சொன்னான்—'இன்று நான் சாப்பிடப் போகிறதில்லை. சாப்பிடவே மாட். டேன்.'

நாராயணி சொன்னாள்—'போய் தூங்கு போ.'

நாராயணியுடைய உறுதி நிறைந்த வார்த்தைகளில் அவன் குதிப்பு அடங்கியது. ஆனால் அவன் சாப் பிட உட்காரவில்லை—பேசாமல் நின்று கொண்டிருந்தான்.

இன்னொரு வாசல் வழியாய் சாம லால் நுழைந்ததும் ராமலால் ஓட்டம் பிடித்தான். சாமலால் சாப்பிட உட் கார்ந்தார்—கேட்டார்—'ராமன் சாப் பிட வரவில்லை?'

நாராயணி சுருக்கமாய் பதில் அளித்தாள்—என்கூடச் சாப்பிடு வான்.'

சாமலால் சாப்பிட்டு எழுந்து வெளியே போனாரோ இல்லையோ, கையில் ஒருபிடிச் சாம்பலுடன் ராமன் உள்ளே வந்தான். சொன்னான் —'யாரையும் சாப்பிட விடமாட் டேன். எல்லோருடைய கலத்திலும் சாம்பலைக் கொட்டி விடுகிறேன். கொட்டட்டுமா?'

நாராயணி நிமிர்ந்து பார்த்துக் கொண்டே சொன்னாள்—'கொட்டித் தான் பாரேன். என்ன தண்டனை கிடைக்கிறது பார்க்கலாம்.'

ராமன் கையில் சாம்பலை இறுக்கப் பிடித்துக் கொண்டு ஏளனமாய் சொன்னான் 'பெரிய தண்டனையாம்! காலமே ஏமாற்றிச் சாப்பிடச் சொல்லி விட்டாய். இப்போ தண்டனை வேறாம்!'

'நீ ஏன் சாப்பிட்டாய் காலையில்?'

'நீ சொல்லவில்லையா? ராத்திரி—'

'நாசமாய்ப் போகிறவனே! அன் னியன் கையிலிருந்து வாங்கிச் சாப் பிட வெட்கமில்லை?'

ராமன் ஆச்சரியத்துடன் கேட் டான்—'அன்னியனா? நீ தானே சொன்னாய்?'

நாராயணி பேச்சை வளர்க்காமல் சொன்னாள்—'போ. சாம்பலை எறிந்து கையை அலம்பிவிட்டு வா. இன்னொரு நாள் ஊட்டச் சொன்னால் தெரியும்?,

வேலைக்காரி காரணமில்லாமல் சமை யல் அறைவழியாய் நாராயணி ராம னுக்குச் சாதம் ஊட்டுவதைப் பார்த் துக் கொண்டு போனாள்.

நாராயணி ஊகித்துக் கொண்டு ராமனிடம் சொன்னாள்—'ராமா, உனக்கு புத்தியே வராதா? கடவுள்

உனக்கு நல்ல புத்தியே கொடுக்க மாட்டாரா? ஊர்க்காரர் குத்தலாய் பேசுவதை என்றால் பொறுக்கவே முடியவில்லையே.'

ராமன் சாதத்தை விழுங்கிக் கொண்டே கேட்டான்—'அந்த ஊர்க் காரர் யார்? அவர் பேரைச் சொல்லு.'

நாராயணி பெரு மூச்சு விட்டுக் கொண்டே சொன்னாள்—'சரிதான்—யார் என்று பெயர்கூட வேறு சொல்லணுமா?

ஆனால் சில மாதங்களுக்குள் நாராயணி பாடு மிகவும் திண்டாட்டமாகி விட்டது. அவளுடைய விதவைத் தாய் திகம்பரி தன் பத்து வயதுப் பெண் சுரதுனியுடன் இதுவரை எப்படியோ தன் அண்ணன் வீட்டில் வசித்து வந்தாள். திடீரென்று சகோதரன் இறந்து விட்டதன் காரணமாய் அவளுக்கு மழைக்கு ஒதுங்கக்கூட இடம் இல்லாமல் போய் விட்டது. நாராயணி, கணவன் அனுமதி பெற்றுக் கொண்டு ஆட்களை அனுப்பி தாயை தன் வீட்டிற்கு அழைத்து வந்தாள். வந்ததும் வராததும் தன் மகள் நாராயணியைத் தன் ஆணையின் கீழ் நடத்த ஆரம்பித்தாள். ராமனை தன் வழிக்கு கொண்டு வர ஆசைப் பட்டாள். ஆரம்பத்திலிருந்தே அவனை வெறுப்புடன் பார்க்க ஆரம்பித்தாள்.

இன்று காலை ராமன் இரண்டு மூன்று முழம் நீளம் உள்ள அரசங் கன்று ஒன்றை எங்கிருந்தோ கொண்டு வந்து வீட்டு நடு முற்றத்தில் நட ஆரம்பித்தான். சமையல் அறை வாசற்படியில் கையில் ஜபமாலை ஏந்தி ஜபித்துக் கொண்டிருந்த திகம்பரி இதைப் பார்த்துவிட்டு கடுங்குரலில் மொழிந்தாள். 'இதென்ன செய்கிறாய் ராமா?'

ராமன் அவளைப் பார்த்துச் சொன்னான்—அரச மரம் பெரிதாய் வளரும். அப்புறம் நல்ல நிழல் ஏற்படும். அரச மரத்து நிழல் நல்லதென்று வாத்தியார் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கோவிந்தா போய் ஒரு டம்ளர் ஜலம் கொண்டு வா. போலா ஒரு பெரிய மூங்கில் கழி எடுத்துவா. கிளியோ குருவியோ வந்து வெட்டி விடும். மூடிப் போட வேண்டும்?

திகம்பரியின் கோபம் கொழுந்து விட்டெரிந்தது. சொன்னாள் 'முற்றத்தில் அரசமரமா? இது உலகத்தில் இல்லாத வழக்கமாயிருக்கிறதே. வீட்டில் அரசமரம் வைக்கிறதை இங்கேதான் பார்த்தேன்.

ராமன் அவளுடைய வார்த்தையை கேட்டதாகவே பாவிக்க வில்லை.

கோவிந்தன் தன் சக்திக்குத் தகுந்த விதம் ஒரு சிறு லோட்டாவில் ஜலம் கொண்டு வந்தான். ராமன் அவனுடைய கையிலிருந்த டம்லரை வாங்கிக் கொண்டு புன்முறுவலுடன் அன்பாய் கேட்டான். 'இவ்வளவு ஜலம் போருமா, 'அசடே, நீ இங்கேயே நில்லு. நான் ஜலம் கொண்டு வருகிறேன். (தொடரும்)

ஜெர்மனியின் நோக்க மென்ன?

ஐரோப்பாவின் தென் கிழக்குப் பக்கமாகத் தன் ஏகாதிபத்தியத்தை விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டு மென்பது ஜெர்மனியின் நோக்கமல்லவா? இஃது, இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ஹிட்லர், 1933ம் வருஷம் சர்வாதிகாரப் பதவியை ஏற்றுக் கொண்ட பிறகு தோன்றியதுமல்ல. 1866ம் வருஷத்திலிருந்தே ஜெர்மானியர்கள் இந்த ஏகாதிபத்திய ஆசையில் வாழ்ந்து வரத் தொடங்கினார்கள். இந்த ஆசையை உண்டு பண்ணியவன் பிஸ்மார்க். சென்ற எழுபது வருஷங்களாக ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிற பலவிதமான அரசியல் கொந்தளிப்புகளுக்கும், ஜெர்மனி, அவ்வப்பொழுது பல நாடுகளுடன் செய்து வந்திருக்கிற ஒப்பந்தங்களுக்கும் அடிப்படையான காரணமா யிருந்ததும், இருப்பதும் எது என்பதை நாம் கூர்ந்து கவனித்தோமானால் ஜெர்மனியின் இந்த ஏகாதிபத்தியப் பேராசைதான். ஜெர்மன்—ஆஸ்திரிய—ஹங்கேரிய ஒப்பந்தம், பால்கன் யுத்தம், மொராக்கோ சண்டை, 1914ம் வருஷத்து ஐரோப்பிய மகா யுத்தம், ஆஸ்திரிய ஆக்ரமிப்பு, ஸுடேடென் பிரச்னையைக் கிளப்பியது ஆகிய எதை எடுத்துப் பார்த்தாலும், அனைத்திற்கும் கீழே நூலிழை போல் ஓடிக் கொண்டிருந்ததும், இருப்பதும் இந்த ஏகாதிபத்திய ஆசையாக இருக்கும்.

1866ம் வருஷத்திலிருந்து ஜெர்மனியின் சரித்திரத்தை நாம் வேறொரு திருஷ்டியில் பார்ப்போமானால், ஜெர்மனி, ஐரோப்பாவின் மேற்குப் பக்கமாகவே தன் ஏகாதிபத்தியத்தை விரித்துக் கொள்வதில் முனைந்திருப்பதாகத் தோன்றும். பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் உள்ள இடைவிடாத பகைமைக்கு இதுதான் காரணமென்று சிலர் கருதலாம். ஆனால் உண்மையில், கிழக்கு ஐரோப்பாவின் கவனத்தை வேறொரு பக்கம் திருப்பிவிட்டு, அப்படி பராமுகமா யிருக்கிற சமயம் பார்த்து அங்கேயுள்ள ஒவ்வொரு நாட்டையும், தன் கழுகுக் கொடியின் கீழ் கொண்டு வருவதற்காகவே, ஜெர்மனி இங்ஙனம் மேற்குப் பக்கமே தன் கவன மெல்லாம் இருப்பதாக நடந்து கொண்டு வந்திருக்கிறது.

தன்னுடைய ஏகாதிபத்திய லட்சியத்தை யடைவதற்கு, ஜெர்மனி, மூன்று படிகளைத் தாண்ட வேண்டு மென்று திட்டம் போட்டிருக்கிறது. முதல் படி, மத்திய ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகளை யெல்லாம், தன்னுடைய பொருளாதார, ராணுவ ஆதிக்கத்திற் குட்படுத்திக் கொள்ளு

தல். இரண்டாவது படி, தன்னிடத்தில் ஐக்கியமாகிவிட்ட இந்த நாடுகளின் பலத்தைக் கொண்டு, பெர்லின் நகரத்திலிருந்து பாக்தாத் நகரம் வரையில் தன் ராஜ்ஜியத்தை விஸ்தரித்துக் கொள்ளுதல். மூன்றாவது படி, கடலாதிக்கம் பெற்றுள்ள பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா முதலிய சாம்ராஜ்யங்களை வீழ்த்தி, அதுமுகாந்திரமாகச் சமுத்திர ஆதிக்கம் பெற்று உலக வல்லரசாதல். ஹோஹென் ஜோல்லென் ஏகாதிபத்தியம், முதலிரண்டு படிகளைத் தாண்டுவதற்கு ஆஸ்திரிய—ஹங்கேரிய ஏகாதிபத்தியத்தை ஒரு கருவியாக உபயோகித்து வந்ததை 1914ம் வருஷ ஐரோப்பிய யுத்தம் வரையிலும் கண்டோம்.* இதற்கு முன்னரேயே, ஜெர்மனிக்காகத்தான் ஆஸ்திரியா இருக்க வேண்டுமென்றும், ஐரோப்பிய யுத்தம் ஒரு விதமாக முடிவு பெற்ற பிறகு, ஆஸ்திரியாவை ஜெர்மனியோடு சேர்த்துவிட வேண்டுமென்றும் ஜெர்மானிய ராஜதந்திரிகள் ஒளிவு மறைவின்றிச் சொல்லிக் கொண்டு வந்தார்கள். ஆகவே, 1938ம் வருஷம் மார்ச் மாதம், ஹிட்லர் ஆஸ்திரியாவை ஆக்ரமித்துக் கொண்டது திடீரென்று ஏற்பட்ட ஒரு யோசனையினாலன்று என்பதை நாம் திண்ணமாகத் தெரிந்து கொண்டு விடுதல் நல்லது. பிஸ்மார்க் கண்ட கனவை ஹிட்லர் நனவாக்கி விட்டான். அவ்வளவுதான்.

தன்னுடைய ஏகாதிபத்தியத்தைத் தென் கிழக்குப் பக்கமாக விஸ்தரித்துக் கொண்டு போவதற்கு, ஆஸ்திரியாவும், ஜெக்கோ ஸ்லோவேகியாவும் பெரிய தடையா யிருப்பதாக ஜெர்மனி கருதி வந்திருக்கிறது. ஏனென்றால், ஆஸ்திரியாவுக்கும், ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் தென் கிழக்கேயுள்ள நாடுகளில் ஏராளமான மூலப் பொருள்கள் இருக்கின்றன. உதாரணமாக யூகோஸ்லேவியாவில் உலோக வகைகள் நிறையக் கிடைக்கின்றன. ஹங்கேரியிலும் பல்கேரியாவிலும் தானிய வகைகள் அதிகம். ருமேனியாவில் எண்ணெய்க் கிணறுகள் ஏராளம். துருக்கியில் பருத்தி விளைவு ஜாஸ்தி. இந்த மூலப் பொருள்களையெல்லாம் சுரண்ட வேண்டுமானால், இந்த நாடுகளை ஆக்ரமித்துக் கொள்ள வேண்டுவது அவசியமாகிறது. அப்படி ஆக்ரமித்துக் கொள்வதற்கு ஆஸ்திரியாவும் ஜெக்கோ ஸ்லோவேகியாவுமே குறுக்காக நிற்கின்றன. இந்த இரண்டு நாடுகளும் பெரும்பாலும் விவசாய நாடுகளே. ஆயினும் கைத் தொழிலிலும் அதிக அபிவிருத்தி யடைந்து, ஜெர்மனியின் ஏற்றுமதி வியாபாரத்தோடு போட்டி போட்டு வந்தன. எனவே, இந்த இரண்டு நாடுகளையும் முதலில் தன் அணைப்பில் இழுத்துக் கொள்வது ஜெர்மனிக்கு அவசியமாகிறது. அப்பொழுதுதான், ஹங்கேரி, ருமேனியா முதலிய நாடுகளுடன் இது நேரான தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்.

இந்தப் பொருளாதாரக் காரணங்கள் தவிர, அரசியல் தேவைக்காகவும், ஆஸ்திரியாவையும் ஜெக்கோ ஸ்லோவேகியாவையும் தன் வசப்படுத்திக் கொள்வது அவசியமென்று ஜெர்மனி கருதியது. இத்தலியின் ரோம ஏகாதிபத்திய நிழல், தன்னு

* 1918ம் வருஷம் வரையில் துருக்கிசாம்ராஜ்யம், ஜெர்மனியின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தது இங்குக் கவனிக்கத்தக்கது.

டைய ஏகாதிபத்திய ஆசையின் மீது விழாமலிருக்க வேண்டுமானால் ஆஸ்திரியாவை ஒரு தடைக்கல் மாதிரி உபயோகித்துக் கொள்ள வேண்டும். அதற்காக, ஆஸ்திரியா, ஜெர்மனியின் சுவாதீனத்திற் குட்பட்டிருக்க வேண்டியது அவசியமில்லையா? இதனால், இத்தலியின் சந்தேகத்திற்கு ஆளாகாமலும் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. அதே சமயத்தில் ஆஸ்திரியாவையும் விழுங்க வேண்டியிருந்தது. இந்த இரண்டு காரியங்களையும் 1936ம் வருஷம் ஜுலை மாதத்திலிருந்து ஹிட்லர் நிரம்பச் சாமர்த்தியமாகச் செய்யத் தொடங்கி, 1938ம் வருஷம் மார்ச் மாதம் இரண்டிலும் வெற்றி பெற்றிருக்கின்றான்.

இப்படியே, ஜெக்கோ ஸ்லோவேகியா, தென் கிழக்குப் பிரதேசங்களுக்குச் செல்லவொட்டாமல் ஜெர்மனியைத்தடுத்து நிற்கிற ஒரு நுழைவாயில் மாதிரி இருக்கிறது. இதனை ஜெர்மன் ஏகாதிபத்திய வாதிகள் பகிரங்கமாகவே கூறியிருக்கிறார்கள்.

> 'மத்திய ஐரோப்பாவின் தெற்குப்பாகத்தில் நுழையாதபடி பாதுகாத்துக் கொண்டிருக்கும் மலைப் பிரதேசம் ஜெக்கோ ஸ்லோவேகியா. இதனை அப்புறப்படுத்தி விட்டால், டான்யூப் பிரதேசங்களுக்குச் செல்கிற மூன்று ராணுவ பாதைகளும் நமது கையிலே சிக்கிவிடும். ஜெக்கோ ஸ்லோவேகியாவை அழித்துவிடுவதன் மூலம், ஜெர்மனிக்கு 300 மைல் நீளமுள்ள யூரேஷிய பாதை கிடைக்கும். இதனோடு 140 மைல் நீளமுள்ள ஹங்கேரியையும் சேர்த்துக் கொண்டால், மொத்தம் 720 மைல் நீளமுள்ள பாதை நம் வசமாகும்.'

ஒரு சமயம் பிஸ்மார்க் என்ன கூறினான்? 'எவனொருவன் பொஹிமியாவுக்கு நாயகனாகிறானோ அவன் ஐரோப்பாவுக்கும் நாயகனாகிறான்.' இந்த வாசகந்தான், ஜெர்மனியின் ஜெக்கோ ஸ்லோவேகிய ஆக்ரமிப்புக்கு வழிகாட்டும் வெளிச்சம் போலிருந்தது.

ஜெக்கோ ஸ்லோவேகியா விஷயத்தில், ஜெர்மனி, இரண்டுவிதமான முறைகளை அநுசரித்து வந்தது. ஒன்று, பிரான்ஸுடனும் சோவியத் ருஷ்யாவுடனும் ஜெக்கோ ஸ்லோவேகியா செய்து கொண்ட சிநேக ஒப்பந்தங்களை எதிர்த்து, சதா பிரசாரஞ் செய்து வந்தது. இரண்டாவது, சிறுபான்மையோர் பிரச்னையைக் கிளப்பி அதற்கு தூபம் போட்டு வளர்த்து வந்தது. ஹிட்லர், 1933ம் வருஷம் பதவி ஏற்றுக் கொண்டதற்கு முன்னரேயே இந்தச் சிறு பான்மையோர் பிரச்னை, ஜெக்கோ ஸ்லோவேகியாவில் துளிர் விட்டிருந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஜெர்மனியின் நோக்கம் இன்னதென்பதை அந்நிய நாட்டு விவகாரங்களில் மகா நிபுணர்களான மஸாரிக்கும் பெனேஷும் அறிந்திருந்தும், இவர்கள் ஜெர்மனியுடன் சிநேகமனப்பான்மையையே காட்டி வந்திருக்கிறார்கள். இரண்டு நாடுகளுக்கும் இடையே சிநேக ஒப்பந்தங்கள் பல ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும், ஜெர்மனி, ஜெக்கோ ஸ்லோவேகிய அரசாங்கத்தின் அஸ்திவாரத்தில் குழி பறித்துக் கொண்டுதானிருந்தது.

ருஷ்யாவுடன் ஜெக்கோ ஸ்லோவேகியா ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பது ஐரோப்பிய சமாதானத்

திற்கே ஆபத்து என்று ஜெர்மனி இடைவிடாது பிரசாரஞ் செய்து வந்திருக்கிறது. இதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. 1926ம் வருஷம் ஜெர்மனிக்கும் ருஷ்யாவுக்கும் சிநேக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அப்பொழுது, ருஷ்யாவினால் எவ்வித ஆபத்துமில்லை யென்று ஜெர்மனி கருதியது. பின்னர் ருஷ்யாவும், பிரான்ஸூம் சிநேக ஒப்பந்தம் செய்து கொண்டபோது, தன் மீது ஏதோ தூர் எண்ணங் கொண்டு இரண்டு நாடுகளும் ஒன்று சேர்ந்திருப்பதாக ஜெர்மனி மிரள ஆரம்பித்து விட்டது. கிழக்கு ஐரோப்பிய வல்லரசு ஒன்றும், ஜெர்மனியின் தலைக்குமேலே கை குலுக்கிக் கொள்ளும்படி விடக்கூடா தென்பது பிஸ்மார்க்கின் உபதேசம். எனவே, பிரெஞ்சு—ருஷ்ய ஒப்பந்தத்தைக் கண்டு ஜெர்மனி மருண்டு விட்டதில் ஆச்சரியமில்லை. பிரான்ஸூம் ருஷ்யாவும் ஒப்பந்தம் செய்து கொண்ட சந்தர்ப்பத்தில்தான் ஜெக்கோ ஸ்லோவேகிய—ருஷ்ய ஒப்பந்தம் ஏற்பட்டது. இதை ஜெர்மனி சகிக்குமா?

ஜெக்கோ ஸ்லோவேகியாவில் பொதுவுடமை இயக்கம் தலைகாட்டவே யில்லை. இந்த நாட்டைச்சுற்றி அரசியல் புரட்சிகள் பல நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் கூட, இஃது எந்த விதமான புயற்காற்றிலும் அகப்பட்டுக் கொள்ளாமல் நிதானமாகவே நடந்து வந்திருக்கிறது. 1935ம் வருஷம் மே மாதம் 21ந் தேதி, ஹிட்லர், ஜெர்மன் பார்லிமெண்டில் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில், 1918ம் வருஷம் நவம்பர் மாதம் முதல், உலகத்தின் பல நாடுகளிலும் போல்ஷ் வெஸத்தினால் ஏற்பட்ட புரட்சிகளைத் தொகுத்து ஒரு ஜாபிதா கொடுத்திருக்கிறான். அதில் ஜெக்கோ ஸ்லோவேகியாவைக் குறிப்பிடவே யில்லை. அங்கு ஏதேனும் புரட்சிகள் நடைபெற்றிருந்தால் தானே?

ஜெக்கோ ஸ்லோவேகியா, ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகிய மூன்று நாடுகளும் சேர்ந்து செய்து கொண்ட 'சிற்றரசுகள் ஒப்பந்தம்' ஜெர்மனிக்குச் சிறிதுகூடப் பிடிக்கவில்லை. இந்த ஒப்பந்தம் குலையாமல் பாதுகாத்து வர முயற்சி செய்தது ஜெக்கோ ஸ்லோவேகியா தான். ருமேனியாவையும், யூகோஸ்லேவியாவையும் இந்த ஒப்பந்தத்தினின்று பிரித்துவிட ஜெர்மனி, பகீரதப் பிரயத்தனம் செய்து கொண்டு வந்திருக்கிறது. சிறப்பாக 1935ம் வருஷத்திலிருந்து இந்தப் பிரயத்தனம் மும்முரமாகிக் கொண்டு வந்தது. இப்படித் தனித்தனியாகப் பிரித்து விட்டால்தான், ஒவ்வொன்றையும் இது தனித்தனியாகச் சுவாதீனப் படுத்திக் கொள்ள முடியும். தவிர, இந்த மூன்று ஒப்பந்த நாடுகளுக்கும் பிரான்ஸுக்கும் நெருங்கிய சம்பந்த மிருந்தது. இது ஜெர்மனிக்குப் பிடிக்கவில்லை. தன்னுடைய தென் கிழக்கு விஸ்தரிப்பு யோசனை நிறைவேறு வண்ணம், இந்த மூன்று சிறிய நாடுகளுடன் பிரான்ஸு மல்லவோ சேர்ந்து கொள்ளும்? ஆகவே, இந்த ஒப்பந்தத்திற்கு மூலகாரணமாயிருந்த ஜெக்கோ ஸ்லோவேகியாவை அப்புறப்படுத்தி விடுவது ஜெர்மனிக்கு அவசியமா யிருந்தது.

இங்ஙனம் ஜெக்கோ ஸ்லோவேகியாவின் அந்நிய நாட்டுக் கொள்கையைக் கண்டித்துப் பிரசாரஞ்

செய்து வந்தது ஒரு முறை. அடுத்த படியாகச் சிறுபான்மையோர் பிரச்னை எவ்வாறு கிளப்பிவிடப்பட்ட தென்பதையும், அஃது எவ்வாறு வேலை செய்து வந்த தென்பதையும் சிறிது கவனிப்போம்.

உலகத்தின் நாலு பாகங்களிலும் நாஜி கட்சிகள் இருக்கின்றன. இவை, ஜெர்மனியிலுள்ள நாஜி கட்சியின் உத்திரவைப் பெற்று இயங்குகின்றன. நாஜி கட்சி வேறு, தற்போதைய ஜெர்மானிய அரசாங்கம் வேறு என்று நாம் பிரித்துக் காட்ட முடியாதல்லவா? அந்நிய நாடுகளிலுள்ள நாஜி கட்சிகளையும் நாஜி ஸ்தாபனங்களையும் கவனிப்பதற் கென்று தனியான ஓர் இலாகா இருக்கிறது. இது, ஜெர்மன் அந்நிய நாட்டு இலாகாவோடு இணைக்கப்பட்டு, அதனுடைய ஒரு கிளை இலாகாவாக இருக்கிறது. இந்த இலாகாவுக்குத் தனியாக ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறான். 30—1—1937ல், இ. டப்ளியு. பொஹ்ளே (E. W. Bohle Chief of Foreign Organization attached to the Foreign Office) என்பவனை அதிகாரியாக நியமித்து, அது சம்பந்தமாக ஜெர்மன் அரசாங்கம் விடுத்த ஓர் உத்திரவில், 'ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்கு உட்பட்ட பிரஜைகளாக வெளி நாடுகளில் வசிப்பவர்கள் சம்பந்தமாக எல்லா விவகாரங்களையும் கவனிப்பதும், அவற்றை நிருவாகம் செய்வதும் இந்த அதிகாரியின் பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டிருக்கிறது' என்ற வாக்கியங்கள் காணப்படுகின்றன.* இந்த அதிகாரிக்கு, மந்திரிச் சபைக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. கொஞ்சம் இதை விரித்துக் கூறப்போனால், அந்நிய நாடுகளில் நியமிக்கப்பட்டிருக்கும் ஜெர்மன் அரசியல் உத்தியோகஸ்தர்களுடைய வேலைகளனைத்தும் இந்த இலாகாவினாலேயே கவனிக்கப் படுகிற தென்று சொல்லலாம்.

ஜெர்மானியப் பிரஜைகளாக வெளி நாடுகளில் வசிக்கிறவர்கள் விஷயத்தில் கவனஞ் செலுத்துவது; ஜெர்மன் ராஜ்ஜியத்துப் பிரஜைகளல்லாத லட்சக் கணக்கான ஜெர்மானியர்கள் விஷயத்தில் அக்கரை செலுத்துவது; மத்திய ஐரோப்பாவிலும், தென் கிழக்கு ஐரோப்பாவிலும் உள்ள சிறிய நாடுகளின் எல்லைகளை மாற்றியமைப்பதற்கு என்னென்ன முயற்சிகள் செய்யப்படலாமோ அந்த முயற்சிகளுக்குச் சமமான வேலைகளுக்கு ஆதரவு கொடுப்பது; ஆகிய இவை இந்த இலாகாவின் பொறுப்பாகும்.

ஆக, மத்திய—தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள அரசாங்கங்களிடத்தில் பலவிதமான செல்வாக்குகளை உபயோகப்படுத்தவும், சமயம் வந்த போது அவைகளை நெருக்கவும் இந்த இலாகா தனியாக அமைக்கப்பட்டிருக்கிற தென்பது தெளிவாகி விட்டது. இந்தக் காரியங்கள் நிறைவேறுவதற்காக, மூன்று முறைகள் கையாளப்படுகின்றன.

ஆங்காங்குச் சிறுபான்மைச் சமூகத்தினராயுள்ள ஜெர்மானியர்களை, திறமையான பிரசாரத்தினால் நாஜி கட்சியின் செல்வாக்குக்கு உட்படுத்துதல்.

* Germany Pushes South East by Dr. Gerhard Schacher—p. 176.

அந்தந்த நாடுகளிலுள்ள பல அரசியல் கட்சிகளில், எவை எவை நாஜி கொள்கைகளுக்கு இணங்கின மாதிரி நடைபெறுகின்றனவோ அவற்றை உபயோகப்படுத்திக் கொள்ளுதல்.

ஜெர்மனியின் அந்நிய நாட்டுக் கொள்கை எவ்வளவு தூரம் வெற்றி பெற்றிருக்கிற தென்பதை அவ்வப் பொழுது பரிசீலனை செய்து பார்த்தல்.

ஜெர்மனிக்குப் புறம்பாக வசிக்கும் ஜெர்மானியர்களனைவரையும், ஜெர்மன் ராஜ்ஜியத்தின் ஆதிக்கத்திற்குட் படுத்திவிட வேண்டுமென்று சொல்வது அநுபவ சாத்தியமானதன்று என்பதை யாருமே ஒப்புக்கொள்வர். மத்திய-தென் கிழக்கு ஐரோப்பாவில் வசிக்கிற ஜனங்களிடத்தில் அநேக விதமான ரத்தக் கலப்பு ஏற்பட்டிருக்கிறது. இவர்களில் இன்னார்தான் ஜெர்மானியர் என்று பிரித்துக் காட்ட முடியாது. தவிர இவர்கள் அந்தந்த நாட்டு மண்ணோடும், இதயத்தோடும் ஒன்றுபட்டுப் போயிருக்கிறார்கள். உதாரணமாக பொஹிமியாவில், ஜெர்மானியர்களும் ஜெக்கர்களும் ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஒன்றுபட்டவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கிறார்கள். ஜெர்மானியப் பெயர்களை ஜெக்கர்களும், ஜெக்கப் பெயர்களை ஜெர்மானியர்களும் தாங்கிக் கொண்டு, தாங்கள் தனித்தனி ஜாதியினர் என்ற எண்ணமேயில்லாமல், எல்லாரும் ஒரு நாட்டுப் பிரஜைகள் என்ற ஒரே எண்ணத்துடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இவர்களை எப்படி தனித் தனியாக இப்பொழுது பிரிக்க முடியும்?

ஜெர்மனிக்கு வெளியே—சிறப்பாக மத்திய தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில்—அதாவது ட்யூடானிய—ஸ்லாவிய ரத்தக் கலப்புடைய ஜாதியினரைக் கொண்ட தேசங்களில்—வசிக்கும் ஜெர்மானியச் சகோதரர்கள், அந்நிய ஆட்சியினால் அவதிப்படுகிறார்களென்றும், அவர்களை அந்த அவதியினின்று விடுதலை செய்வதே நாஜி கட்சியின் வெளி நாட்டு இலாகாவின் நோக்கமென்றும் சொல்லப்படுகின்றன. ஆனால் சரித்திர உண்மைகள் வேறு விதமாக இருக்கின்றன. உதாரணமாக, ஜெக்கோஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்கள் எப்பொழுதும் ஜெர்மனிக்குட்பட்டவர்களாயிருக்கவில்லை. இவர்களுடைய வாழ்க்கை, நாகரிகம், கலை வளர்ச்சி முதலிய அனைத்தும் ஆஸ்திரிய—ஹங்கேரிய ஏகாதிபத்தியத்தின் வாழ்வு தாழ்வுகளைப் பொறுத்தனவாகவே இருந்தன. தவிர, பொஹிமியாவைத்தான், இவர்கள், ஜெக்கர்களோடு சேர்ந்து தங்கள் தாய் நாடாகப் போற்றி வந்தார்களே தவிர, ஜெர்மனியைக் கருதவேயில்லை. சரித்திர பூர்வமாக ஏற்பட்ட இந்தத் தொடர்பை, ஜெர்மனி இப்பொழுது அரசியல் சூழ்ச்சிகளினால் கத்தரித்து விட்டது. இதே மாதிரி நிலையில் ருஷ்யா, யூகோஸ்லேவியா, பல்கேரியா, ஹங்கேரி முதலிய நாடுகளில் லட்சக்கணக்கான ஜெர்மானியர்கள் இருக்கிறார்கள். இவர்களையும் பிரித்து ஜெர்மனியுடன் சேர்த்து விடுவதா?

சர்வதேச சங்க ஒப்பந்தப்படியும், சிறுபான்மைச் சமூகத்தினர் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள ஒப்பந்தங்கள் படியும், வெளி நாடுகளில் வசிக்கும் ஜெர்மானிய சமூகத்தினரின் ரட்சகனாக ஜெர்மனி நியமிக்கப்படவில்லை. சிறுபான்மைச் சமூகத்தினருக்கு அளிக்

கப்பட்டிருக்கிற உரிமைகள் சரிவர அநுஷ்டிக்கப் படுகின்றனவா வென்று கவனிக்கும் பொறுப்பு சர்வதேச சங்கத்தையும், ஹேக் நகரத்தில் ஸ்தாபிதமாயுள்ள சர்வதேசநீதி ஸ்தலத்தையும் சேர்ந்தது. இதனால்தான், 1936ம் வருஷம் மார்ச் மாதம், ஜெக்கோஸ்லோவேகியாவின் அந்நிய நாட்டு மந்திரியாயிருந்த டாக்டர் க்ரோப்டா, சர்வதேச சங்க ஒப்பந்தத்தின் 86-வது ஷரத்துப்படி, ஜெக்கோஸ்லோவேகியாவிலுள்ள ஜெர்மானியர்கள் விஷயமாக ஜெர்மனி தலையிடுவதற்கு அதிகாரமில்லையென்று கூறினான். ஆயினும் நாஜி அரசாங்கமானது 'விடுதலை செய்யப்பெறாமல் அந்நிய நாடுகளில் அவதியுறும் ஜெர்மானியர்' களை ஒன்றுபடுத்தி, அவர்களைத் தன்னுடைய அந்நிய நாட்டுக் கொள்கைக்குரிய ஒரு கருவியாக வைத்துக் கொண்டு, ஐரோப்பிய சமாதானத்திற்குப் பங்கம் ஏற்படக்கூடிய ஒரு நிலைமையை உண்டுபண்ணி, அதன் மூலமாகத் தன் காரியத்தைச் சாதித்துக் கொண்டு வந்திருக்கிறது. இதை மேற்கு ஐரோப்பிய வல்லரசுகள் கவனித்து வந்தும், பராமுகமாகவே இருக்கின்றன. சர்வதேச சங்கமும் இதைப்பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வில்லை.

ஜெர்மனிக்குப் புறம்பா • யுள்ள எல்லா ஜெர்மானியர்களும் ஒரு ராஜ்ஜியத்திற் குட்பட்டவர்களாதல் வேண்டுமென்ற இந்தக் கொள்கையை, நாஜி அரசாங்கம் பாரபட்சமின்றி எல்லா நாடுகள் விஷயத்திலும் அநுஷ்டித்து வருகிறதென்று சொல்ல முடியாது. தன் கொள்கைகளோடு இணங்கிப்போகிற, தனக்குச் சாதகமாயிருக்கிற தேசங்களிலுள்ள ஜெர்மானியர்களின் குறைகள் இதன் கண்ணுக்குப் படுவதில்லை. உதாரணமாக இத்தலி, போலந்து முதலிய நாடுகளில் ஜெர்மானியர் பெரும்பாலோர் இருக்கின்றனர். இவர்கள் மேற்படி அரசாங்கங்களின் கீழ் சௌக்கியமாக எல்லா உரிமைகளையும் அநுபவித்துக் கொண்டு வாழ்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஜெர்மனிக்கும் இத்தலிக்கும் அடிக்கடி ராஜ தந்திரிகள் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருக்கிறார்கள். ஆனால், தென் டைரோல் மாகாணத்தில் வசிக்கும் ஜெர்மானியர்களுக்குப் பாஷா சுதந்திரம் கொடுக்கப்பட வேண்டுமென்றோ, இவர்களுடைய தெய்வப் பிரார்த்தனைகள் ஜெர்மன் பாஷையிலேயே நடைபெற வேண்டுமென்றோ, இறந்து போனவர்களுடைய சவக்குழிகளின் மீது ஜெர்மன் பாஷையில் சரம வாக்கியங்கள் எழுதி வைக்க உரிமை வேண்டுமென்றோ ஜெர்மானிய ராஜதந்திரிகள் முஸோலினியிடம் கூறினார்களில்லை.*

* ஜெர்மனிக்குப் புறம்பாகவுள்ள வெளிநாடுகளில் வசிக்கும் ஜெர்மானியர்களின் தொகையை இங்குக் கவனித்தல் நல்லது.

ஜெர்மானியர்கள்	ஆயிரக் கணக்கில்
ஜெக்கோஸ்லோவேகியா	3,790
ஸ்விட்ஜர்லாந்து	2,900
பிரான்ஸ்	1,634
போலந்து	1,245
ருஷ்யா	1,185
ருமேனியா	800
யூகோஸ்லேவியா	740
ஹங்கேரி	385
டான்ஸிக்	·348
லக்ஸம்பர்க்	250

பால்டிக் பிரதேசங்கள்	248
இத்தலி	235
டென்மார்க்	77
பெல்ஜியம்	50
லீசென்டென்ஸ்டைன்	10
அமெரிக்கா (ஐ. மா)	12,000
ப்ரேஜில்	750
சில்லி	720
அர்ஜண்டைன்	200
ஆஸ்திரேலியா	100
ஆப்ரிக்கா	78
கானடா	50
அமெரிக்காவிலுள்ள மற்ற நாடுகளில்	28
மொத்தம்	27,823

1934ம் வருஷம், ஜெர்மனியும் போலந்தும் ஒரு சிநேக ஒப்பந்தம் செய்து கொண்ட பிறகு, இந்த நாட்டில் வசிக்கிற ஜெர்மானியர்கள் விஷயத்தில் நாஜி அரசாங்கம் அதிகமான சிரத்தை கொள்ளவில்லை. ஏற்கனவே ஜெர்மானியர்கள் அநுபவித்து வந்த சில உரிமைகள் கூட இந்த வருஷத்தில் பறிமுதல் செய்யப்பட்ட போதிலும், ஜெர்மனி, தன் விரலைக் கூட அசைக்கவில்லை. இதே பிரகாரம் ஹங்கேரியாவிலுள்ள ஜெர்மானியர்கள் விஷயத்திலும் நாஜி அரசாங்கம் பராமுகமாக இருந்து வந்திருக்கிறது. எனவே, தனக்குத் தேவையான வகையில், இந்த 'ஜெர்மானியர் ஒற்றுமை'ப் பிரசாரத்தையும் 'ஜெர்மானியரைக் கை தூக்கி விடுகிற' பிரசாரத்தையும் ஜெர்மனி செய்து வந்திருக்கிறது. இதனுடைய கவனமெல்லாம் மத்திய-தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் மீதுதான். ஏனென்றால் இவற்றைப் பலஹீனப் படுத்தி வைத்தால்தான், தன்னுடைய தென் கிழக்கு விஸ்தரிப்பு சுலபமாக நிறைவேறும் என்பது இதன் எண்ணம்.

ஜெக்கோ ஸ்லோவேகியாவில் இந்தச் சிறு பான்மைப் பிரச்னை எவ்வாறு எழுந்தது என்பதையும், அதன் ஸ்வரம் எப்படி படிப்படியாக ஏறிக் கொண்டு வந்ததென்பதையும் முந்திய அத்தியாயங்களில் தெரிந்து கொண்டிருக்கிறோம். இந்த ஸுடேடென் ஜெர்மானியக் கட்சியின் தலைவனான ஹென்லேன், ஜெக்கோ ஸ்லோவேகிய அரசாங்கத்தின் அந்நிய நாட்டுக் கொள்கையை மாற்றியமைக்கும் விஷயத்தில், முதலிலிருந்து தீவிரமாகப் பிரசாரஞ் செய்து வந்திருக்கிறான். சிற்றரசுகளின் ஒப்பந்தத்திலிருந்தும், பிரான்ஸ்—ருஷ்ய ஒப்பந்தங்களிலிருந்தும், ஜெக்கோ ஸ்லோவேகிய அரசாங்கம் விலகிக் கொண்டு ஜெர்மனியின் தயவில் வாழ வேண்டுமென்பதே இதனுடைய பிரசாரத்தின் அடிப்படையான தத்துவமாயமைந்திருந்தது. 23—8—38ல் ஹென்லேன் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவில் பின்வருமாறு கூறுகிறான்:—

> 'ஜெர்மன் நாஜி கட்சியின் கொள்கை, எண்ணம் இவற்றை அடிப்படையாகக்கொண்டே நமது கொள்கைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன வென்பதை நாம் பகிரங்கமாகத் தெரிவிக்க, விரும்புகிறோம். ஜெக்க ராஜதந்திரிகள், ஜெர்மானியர்களாகிய நம்முடனும், ஜெர்மானிய ஏகாதிபத்தியத்துடனும் நிரந்தரமான ஒரு சமரஸம் ஏற்படுத்திக் கொள்ள விரும்புவார்களானால், அவர்கள் இன்று வரை அநுஷ்டித்து வரும் அந்நிய நாட்டுக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்

டும். ஜெக்கோ ஸ்லோவேகியா, தற்போழ்து அநுஷ்டித்து வரும் அந்நிய நாட்டுக் கொள்கையானது அதனை, ஜெர்மானியர்களுடைய விரோதிகளின் கையில் சிக்க வைத்திருக்கிறது.'

1937ம் வருஷம் ஜூலை மாதம் லண்டனில் நடைபெற்ற ஒரு மகாநாட்டிற்கு ஹென்லேன் கட்சிக்குப் பிரதிநிதியாகச் சென்றிருந்த ஹென்ரிக் ரூதா வென்பவன் பின் வருமாறு கூறினன் :—

'இப்பொழுது அச்சுறுத்திக்கொண்டிருக்கிற ஆபத்தைக் குறித்து நான் ஐரோப்பா முழுவதுக்கும் எச்சரிக்கை செய்கிறேன். இந்தப் போராட்டத்தின் (ஸுடேடென் ஜெர்மானியப் பிரச்னையின்) இயற்கையான காரணங்களை அப்புறப்படுத்தா விட்டாலும், தாய்நாடு (ஜெர்மனி) இவற்றை அப்புறப்படுத்தும். சிறுபான்மைப் பிரதேசங்களில் வசிக்கும் தன் சகோதரர்களை அது காப்பாற்றுகிறது.'

1936ம் வருஷக் கடைசியிலேயே ஜெக்கோ ஸ்லோவேகியாவின் மீது ஜெர்மனி படையெடுக்கப் போகிற தென்று ஐரோப்பிய வல்லரசுகளுக்குத் தெரிந்திருந்தது. இந்தச் செய்தியைக் கேட்டு ஒவ்வொரு நாடும் தன்னை பந்தோபஸ்து செய்து கொண்டது. இதனையே, ரூதா 1937ம் வருஷத்தில் பகிரங்கமாகக் கூறினன்.



இந்த ஜெக்கோ ஸ்லோவேகியாவைத் தான் ஜெர்மனி விழுங்கி விட்டது.

ஆக, ஜெர்மனியின் நோக்கமென்ன? ஜெக்கோ ஸ்லோவேகியாவிலுள்ள சுமார் 32 லட்சம் ஜெர்மானியர்களுடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டு மென்பதா? இல்லை.

பண்டித மதன்மோகனமாளவியா

ஜனனம் 25 - 12 - 1861

—"ஒரு காங்கிரஸ் வாதி"

இந்தியாவில் பண்டித மதன் மோகன மாளவியாவை யாருக்குத்தான் தெரியாது? காங்கிரஸ் ஆரம்ப காலத்திலிருந்து இவர் அதில் ஈடுபட்டுழைத்து வருகிறார். இவர் அலகாபாத்தில் 1861ம் வருஷம் டிசம்பர் மாதம் 25ந் தேதி ஜனனமானார். இவருடைய மூதாதையர்கள் மாளவ தேசத்திலிருந்து வந்து பிரயாகையில் குடியேறியவர்கள். அதனால்தான் இவர்களுக்கு மாளவியா குடும்பம் என்ற பெயர் வந்தது. இவர்கள்பரம்பரையான சமஸ்கிருத வித்துவான்கள். நமது சரித்திர நாயகருடைய தகப்பனார் பண்டித வ்ருஜநாத் மாளவியா, பெரிய வடமொழிப் புலவர். அநேக நூல்களை எழுதியிருக்கிறார்.

பண்டித மாளவியாவின் வித்தியாரம்பம் சமஸ்கிருதபாடசாலையிலேயே தொடங்கியது. சிறிது காலத்திற்குப் பின்னரே இவருக்கு ஆங்கிலக் கல்வி போதிக்கப் பட்டது. கல்கத்தாவிற்குச் சென்று படித்து அங்கு மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பிறகு ஆமதாபாத்திலுள்ள பேயர்

தன்னுடைய தென் கிழக்கு ஏகாதிபத்திய விஸ்தரிப்புக்குத் தடையாயிருக்கிற ஜெக்கோ ஸ்லோவேகியாவை அப்புறப்படுத்த வேண்டுமென்பதுதான். இந்த நோக்கம் ஒருவாறு நிறைவேறி விட்டது. அடுத்த பலி யார்? ஹங்கேரியா?

ஐரோப்பாவில் நாடு பெருக்குகிற தன்னுடைய நோக்கம், ஸுடேடென் பிரதேசத்தோடு முற்றுப் புள்ளி பெற்றுவிடுகிறதென்று ஹிட்லர், சேம்பர்லேனிடம் கூறியிருப்பது உண்மை. ஆனால் இந்த வாசகத்தைச் சுலபமாக ஜீரணிக்க முடியவில்லையே. ஆஸ்திரியாவைத் தன்னுடன் ஐக்கியப் படுத்திக் கொள்வதற்கு ஒரு மாதம் முன்னர்தான், 11—2—38ல் ஜெர்மனிக்கும் ஆஸ்திரியாவுக்கும் சிநேக ஒப்பந்தம் நிறைவேறியது. ஆனால் இந்த ஒப்பந்தம் எவ்வளவு தூரம் கௌரவிக்கப் பட்டது?—'ஜெக்கோ ஸ்லோவேகியா' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

காலேஜில் இவர் பீ. ஏ. பரீட்சைக்குப் படித்துத் தேறினார். இதன் பின்னர் இவருக்குக் குடும்பப் பொறுப்பு ஏற்பட்டது. எனவே, கவர்ன்மெண்ட் ஹைஸ் கூலில் மாதம் ஐம்பது ரூபா சம்பளத்தில் ஆசிரியராக அமர்ந்தார். சுமார் மூன்று வருஷ காலம் இங்ஙனம் ஆசிரியராக வேலை பார்த்தார்.

காலாகங்கார் என்பது வட இந்தியாவிலுள்ள ஒருசிறிய சமஸ்தானம். இதன் அரசராகிய ராஜா ராம்பால் சிங், 1887ம் வருஷம், 'ஹிந்துஸ்தான்' என்ற தினசரிப் பத்திரிகையொன்று ஆரம்பித்தார். அதற்கு பண்டித மாளவியா, மாதம் 250 ரூபாய் சம்பளத்தில் ஆசிரியராக நியமிக்கப் பட்டார். இவருடைய திறமையையும், நாவன்மையையும் பார்த்து, இவரை வக்கீல் பரீட்சைக்குப் படிக்குமாறு இவருடைய நண்பர்கள் தூண்டினார்கள். அங்ஙனமே பத்திரிகாசிரியத் தொழிலோடு, வக்கில் பரீட்சைக்கும் படித்துக்கொண்டு அதில் சிறப்பாகத் தேறினார். உடனே வக்கீல் தொழிலில் பிரவேசித்தார். ஏராளமான பொருள் சம்பாதிப்பதிலேயே தன் மனத்தைச் செலுத்தவில்லை. பொது ஜன சேவையில் இவர் மனம் ஈடுபட்டிருந்தது. அப்படிப் பட்ட பொது ஜன சேவையில் தான் மனிதனுடைய வாழ்க்கையானது பூரண பயன் பெறுகிறது' என்பது இவருடைய நம்பிக்கை. பண்டித மோதிலால் நேரு, சர் தேஜ பகதூர் சாப்ரு இவர்களைப் போல் வக்கீல் தொழிலிலேயே இவர் ஈடுபட்டிருந்திருப்பாரானால் இப்பொழுது இந்தியாவிலுள்ள கோடீஸ்வரர்களில் இவரும் ஒருவராய் இருக்கலாம்.

வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலிருந்தே பண்டித மாளவியாவுக்குக் கல்வி அபிவிருத்தியில் நிரம்ப சிரத்தை இருந்திருக்கிறது. 'அலகாபாத் கல்விக்கழகம்' 'ஹிந்து சமாஜம்' ஆகிய ஸ்தாபனங்களை காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்னரேயே இவர் ஆரம்பித்து நடத்தி வந்தார். இரண்டாவது காங்கிரஸிலிருந்து ஒவ்வொரு காங்கிரசுக்கும் தவறாமல் ஆஜராகியிருந்து நடவடிக்கைகளில் கலந்து கொண்டிருக்கிறார். மகாத்மா காந்தியின் தலைமையில் ஒத்துழையா இயக்கத்தைக் காங்கிரஸ் ஏற்று அதன்படி நடந்து வந்த காலத்திலும் பண்டித மாளவியா அந்தத் தீர்மானத்திற்கு விரோதமாயிருந்துங்கூட ஒவ்வொரு காங்கிரசுக்கும் தவறாமல் விஜயம் செய்து கொண்டிருந்தார். மற்ற மித வாதத் தலைவர்கள் காங்கிரஸினின்று விலகி விட்ட காலத்தில்கூட இவர் ஒருவர்தான் தேசத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றும் பொருட்டு காங்கிரசுக்கு வந்து அதன் நடவடிக்கைகளில் கலந்து கொண்டார்.

இவர் இரண்டாவது காங்கிரஸில் ஆஜராகியிருந்து முதல் முதலாகப் பேசிய போது இவருடைய நாவன்மையைக் கண்டு பலரும் வியந்தனர். இவர் பேசுகிற போது விஷயங்களை தொகுத்துச் சொல்வதிலும், அதனை பிறர் மனதில் படும்படி சொல்வதிலும் மிகத் திறம்படைத்தவர். சில சமயங்களில் மூன்று மணி நேரம் அல்லது நான்கு மணி நேரம் தொடர்ந்து பேசுவார். இங்கிலீஷ், சமஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மூன்று பாஷைகளிலும் மிகச் சாங்கோபாங்கமாகத் தங்கு தடையின்றிப் பேசுவார்.

ஐக்கிய மாகாண சட்ட சபையிலும் இந்தியா சட்ட சபையிலும் இவர் பல வருஷ காலம் அங்கத்தினரா யிருந்து அநேக நற்காரியங்களைச் செய்திருக்கிறார்.

ஏற்கனவே இவருக்குக் கல்வியபி விருத்தியில் அதிக சிரத்தை உண்டு என்று சொல்லி யிருக்கிறோம். காசி யில் ஹிந்து சர்வ கலாசாலை யொன்று ஸ்தாபிக்கப் படுவதற்கு இவர் 1904ம் வருஷத்தி லிருந்தே முயற்சிகளைச் செய்தார். சுமார் ஏழு வருஷ காலம் இதற் கென்று பலவிதமான முயற்சி கள் செய்து, கடைசியில் 1911ம் வருஷம் இதனை நல்ல முறையில் திறக்கும்படி ஏற்பாடு செய்தார். இதற்காகப் பல இடங்களுக்கும் சென்று இவர் நன்கொடை வாங்கி னார். யாசக மெடுப்பதில் இவர் மகா நிபுணர் என்று பெயரெடுத்தவர். இவ ருடைய பரிசுத்தமான உள்ளத்தை யும் தன்னலமற்ற சேவையையும் கண்ட பல சுதேச மன்னர்கள், லட்சக் கணக்கான ரூபாய்களை இவ ருக்கு நன்கொடையாக அளித்தார் கள். இப்பொழுதுள்ளபடி காசி ஹிந்து சர்வகலாசாலை, பண்டித மாள வியாவின் கீர்த்தி ஸ்தம்பமாகும்.

ஹிந்தி பாஷா இலக்கிய விகாசத்தி லும் இவர் பெரிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். 1908ம் வருஷத் தில் 'அப்யுதயம்' என்ற பத்திரிகை யையும், 1910ம் வருஷம் 'மரியாதை' என்ற பத்திரிகையையும் நடத்து வதற்கு இவர் ஏற்பாடு செய்தார். இங்ஙனமே, அலகாபாத்தில் பிரபல ஆங்கில தினசரிப் பத்திரிகையாகிய 'லீடர்' என்ற பத்திரிகையைத் தொடங்குவதற்கு இவர் காரண பூதரா யிருந்தார்.

ஹிந்துக்கள் அனைவரும் கட்டுப்பா டாகவும், திடசாலிகளாகவும் இருக்க வேண்டு மென்பது இவருடைய நம் பிக்கை. ஹிந்து மஹா சபையில் இவர் முக்கிய பங்கெடுத்து வேலை செய்து வருகிறார். ஹிந்து மஹா சபையின் தலைவராகவும் இவர் இருந்து வரு கிறார்.

1930ம் வருஷம் தேசத்தில் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கப் பெற்று மும்முரமாக நடை பெற்று வந்த காலத்தில், இவர் அதில் பூரண பங் கெடுத்துக் கொண்டு, பல முறை சிறைக்கும் சென்றிருக்கிறார்.

பண்டித மாளவியா, இரண்டு முறை காங்கிரஸ் தலைவராகத் தெரிந் தெடுக் கப் பட்டு, அப்பதவியை வகித்து வந் திருக்கிறார். 1909ம் வருஷம் லாகூரில் நடைபெற்ற இருபத்து நான்காவது காங்கிரஸிலும், 1918ம் வருஷம் டில்லி யில் நடைபெற்ற முப்பத்து மூன்றா வது காங்கிரஸிலும் இவர் தலைமை வகித்திருக்கிறார்.

இவர் நீடூழி வாழ்க!

விபரீத ஆசை

"புதுமைப்பித்தன்"

தாந்தோன்றித் தனமாக இசையில் படியாமல் குழம்பும் பாண்டு மேவும் வாத்யங்கள், ரோஜாப்பு, பன்னீர், ஊதுவத்தி, எரு முட்டை கலந்த வாசனை, தூரத்துப் பாடை எல்லாம் மெட்ராஸ் பிண 'வாசனை நாற்றம்' கலந்த காட்சியை என் புலனறிவில் இடித்து சிந்தனையையும் தாக்கியது...............

நான் இப்பொழுது என் வீட்டு மொட்டை மாடியில் நின்றேன்........

மனிதனுக்குப் பிணத்தைப் பார்க்கும் ஆசை, எல்லா ஆசைகளையும் விடப் பெரிது. பயத்தில் பிறந்த ஆசையோ என்னவோ...........

அது ஒரு பணக்காரப் பிணம். அதாவது மாஜி பணக்காரனாக இருந்த பிணம்...........

உடன் வருகிறவர்கள் ஜாஸ்தி........ கொள்ளி வைப்பவனுக்கு கைத்தாங்கல் சம்பிரமம் எல்லாம்...........

பிணம், பட்டு அணிந்திருந்தாலும் வாயைத் திறந்திருந்தது........திறந்த வாயை சந்தனமிட்டு மூடியிருந்தார்கள்........அப்பொழுதுதான் குளித்து எழுந்தவர் மாதிரி வாரிவிடாத நரைத்த கிராப்புத் தலை...........

என் கண்கள் இந்த நுணுக்கமான விபரங்களை உயரா விருந்து இரண்டொரு நிமிஷ காலத்தில் கவனித்த தென்றாலும் என் மனம் வேறெங்கோ சென்று விட்டது...............

நேரத்தையும் தூரத்தையும் தாண்டி செல்லும் யந்திர—விசை, சிந்தனையிடந்தானே இருக்கிறது........

புனரபி மரணம், புனரபி ஜனனம்....

இதிலென்ன புதுசு........சவத்தை விட்டுத்தள்ளு என்கிறது விவகார அறிவு. ஆனால் பற்றுதல் விட்டால் தானே.

புனரபி மரணம்........இத்யாதி........ இத்யாதி.

இதைக் கங்கைக் கரையில் உட்கார்ந்து கொண்டு நிர்விசாரமாகச் சொல்லிக் கொண்டிருக்கலாம்........

கலியாணமாகாத வயது வந்த கன்னிப் பெண்ணை வைத்துக் கொண்டு காக்க முயலும் மாஜி—சுமங்கிலி அவ்வாறு நிர்விசாரமாக இருப்பாளா?.... அதுதான் போகட்டும்; நாளைக்கு அடுப்பு மூட்ட வேண்டுமே...............

வாழ்வென்ற குளத்தில் நிரந்தரக் கடன் என்ற பாசியை ஏதோ இரண்டொரு நாளாவது விலக்கும் முப்பது ரூபாய் இனி யார் வந்து போடுவார்கள்...........ஜட்கா வண்டிக் குதிரை மாதிரி ஓடி ஓடி உழைத்தவருக்கு நாலு பேர் சவாரி சௌகரியமாக இருக்கும்...........ஆனால் அவரை விட்டால் கதியில்லை என்பவர்க்கு...........

அந்தக் காலத்தில் ரங்கசாமி நண்பன்தான். ரொம்ப நல்லவன். சாது. ....அத்தோடு அவனது மனைவி

யும் ரொம்ப நல்லவள். சாது........அது மட்டுமா? விவரம் தெரியாத அழகி....

நான் அப்பொழுது அவர்கள் வீட்டுக்குப்போவேன்........அடிக்கடி........

என் குழந்தையின் வியாஜமாக நான் அங்குச் செல்லுவேன்........என் குழந்தைக்கு அவர்கள் பேரில் ரொம்பப்பிரியம்...........அவர்களுக்கும் அப்படித்தான்.

நான் என் நண்பனைப் பார்க்கப் போவேன்...............என் எண்ணம் அத்துடன் நின்றுவிடவில்லை. அது அவர்கள் இரண்டு பேருக்கும் தெரியாது........என் மனமும் விழுந்துவிட ஆரம்பித்தது...............இப்பொழுது எனக்கு அவள் பேர்கூட ஞாபகமில்லை...............அவ்வளவு காலமாகி விட்டது...............

ரங்கசாமி வாழ வேண்டிய இடம் சர்க்கார் ஆஸ்பத்திரி. என்னமோ தவறிப் போய் மேடைத் தெரு 9-ம் நம்பர் வீட்டில் குடித்தனம் நடத்தினான். அவனும் நானும் ஒரே ஆபிஸில் தான் வேலை பார்த்து வந்தோம். அவனுக்கு முப்பது ரூபாய் சம்பளம்; எனக்கு ஐம்பது ரூபாய் சம்பளம். எனக்கு கால் தடுக்கினால் எங்கப்பா வைத்து விட்டுப் போன வயல் வரப்பின் மேலாவது விழலாம்; அவன் கடன்காரன் காலடியில்தான் விழ வேண்டும். அவன் எத்தனையோ தடவை கடன்காரன் காலடியில்விழுந்திருக்கிறான்; கடன்காரனுக்குப் பின்னால் டாக்டர் எப்பொழுதும் நிற்பார்...............

நான் அப்பொழுது என் குடும்பத்தை வீட்டுக்கு ஊருக்கு அனுப்பி விட்டிருந்தேன். என் கைச் சமையல் கசந்தால், ரங்கசாமி வீட்டுச் சாப்பாடு அல்லது அட்டுப் பிடித்த ஐயன் கிளப் உண்ணுவிரதம்.

இந்த சமயத்தில் தான் நான் ரொம்ப நெருங்கி ரங்கசாமி வீட்டில் பழக நேர்ந்தது. டாக்டர் ஏதோ லத்தீன் பெயரில் காய்ச்சல் என்று சொன்னார்...........அவனது மறுநாள், மறுநாள் என்று எல்லையில்லாமல் நீண்டு கொண்டே போயிற்று. படுக்கையாகி விட்டான். மனைவி பிரசவத்திற்காக தாடி வளர்க்கும் ஹோட்டல் ஐயன் மாதிரி முகம், வர வரக் குழிந்து கொண்டு, பிரேதக்களை தட்ட ஆரம்பித்து விட்டது. மூன்று மாதம் அவளும் ஓயாது ஒழியாது உழைத்தாள்............

உத்யோகம் தனிப்பட்ட ஸ்தாபனத்தில்...........எத்தனை நாளைக்குத் தான் ரங்கசாமிக்காகக் காத்துக் கொண்டிருப்பான் எஜமானன்....... வேலையும்போய் விட்டது. சுமை முழுவதும் என் மேல் விழுந்தது............

முதலில் எனது உதவியை சந்தோஷத்துடன் ஏற்றாள்...........பிறகு 'அண்ணா! அண்ணா!' என்று கூப்பிட்டு மனதைத் திருப்தி செய்து கொண்டாள்.

டாக்டர் வருவார்; மருந்து எழுதிக் கொடுப்பார், உணவு எழுதிக் கொடுப்பார்; உயிரை உடலுடன் ஒட்ட வைக்க அவரும் என்னென்னவோ வித்தை எல்லாம் செய்து தான் பார்த்து வந்தார்.

ரங்கசாமியைத்தூக்குவது, கிடத்துவது, அவனுக்கு வேண்டிய சிசுருஷைகளைச் செய்வது எல்லாம் நானும் அவளும்தான். அந்தத் தனியான வீட்டில் நானும் அவளுந்தான்....... இதே நினைப்புத்தான் 'எப்பொழுதும்

என் மனதில்........உதவி செய்யும் பொழுது எங்கள் உடலம் தொட்டுக் கொள்ளும். எனக்கு சுரீர் என்று விஷமேறும். அவளுக்கு எப்படியோ...........

இராத்திரியில் வென்னீர் ஏதாவது போட வேண்டுமென்றால், நான் அடுக்களைக்குச் செல்லுவேன்; அவள் உடனிருந்து பார்த்துக் கொள்ளுவாள்.

'அண்ணா என்னமோ போல் பார்க்கிறாரே!' என்ற ஓலம் கேட்கும். அடுப்பில் போட்டது போட்ட படி அங்கு ஓடுவேன். அவள் கணப்புச் சட்டியில் தவிட்டை வறுப்பாள்; நான் வாங்கி வாங்கி ஒத்தடம் இடுவேன். நான் அவளையே பார்த்துக் கொண்டு பின்புறம் கை நீட்டும் பொழுது சில சமயம் என் கை அவளது வளையலில் படும்; அல்லது ஸ்தனங்களில் பட்டு விடும். அந்த ஒரு நிமிஷம் எனக்கு நரகவேதனைதான். அவளது இளமையில் என் மனம் லயித்து நிற்குமே ஒழிய, அவளது சங்கடமோ, அவளது ஊசலோ எனக்குப்படாது. அச்சமயங்களில் நான் அவளைத் திரும்பிப் பார்த்ததில்லை. அவள் அதில் படபடப்பைக் காட்டிக் கலவரத்தை உண்டு பண்ணிவிடவில்லை. பின் பல முறை வேண்டுமென்றே தனியாக நாங்கள் நிற்கும் பொழுது அவள் மீது நான் பரீட்சை நடத்தியதுண்டு........ஆனால் பிரதிபலன், எதிர் பிரதி பலிப்பற்ற பார்வை.

நாலைந்து நாட்கழித்து நான் ஆபீசுக்குப் போகப் புறப்படும் பொழுது ரங்கசாமியைப் பார்க்க அவன் வீட்டுக்குள் போனேன். விடியற் காலையில்தான் அவர்கள் வீட்டிலிருந்தே என் ரூமுக்குத் திரும்பியிருந்தேன்.

முந்திய நாள் ராத்திரி ஒரு கண்டம். நடுநிசி டாக்டர் வந்தார். மருந்து கொடுத்திருந்தார்; தூங்கினால் விழிக்க வைக்க வேண்டாம் என்று சொல்லி விட்டுச் சென்றிருந்தார். காலை வரையில் ரங்கசாமி தூங்கவேயில்லை.

பார்வி கஞ்சியைப் போட்டு வைத்திருக்கும்படி சொல்லிவிட்டு நான் என் ரூமுக்குச் சென்றிருந்தேன்.

திரும்பி வந்து பார்க்கும்பொழுது அவள் ரங்கசாமி பக்கத்தில் அலங்கோலமான உடையில் நின்று கொண்டிருந்தாள். தலையில் ஈரம் சொட்டுகிறது. இடையில் ஒரு துண்டுதான். மஞ்சள் யிட்ட மாங்கல்யம் துல்யமாகப் பிரகாசித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது. துண்டு, அவளது ஈரம் காயாத அங்க லட்சணங்களை எடுத்துக் காண்பித்தது.

என்னைக் கண்டவுடன்,—அவள் தன் உடை அலங்கோலத்தை நினைக்கவில்லை—என்னைப் பார்த்து தழுதழுத்த குரலில் 'வந்து பாருங்களேன், என்னமோ மாதிரி இருக்கே' என்றாள்.

நான் அருகில் சென்று ரங்கசாமியைத் தொட்டுப் பார்த்தேன்; நாடியைப் பார்த்தேன்; நாசியைப் பார்த்தேன்;—அங்கிருந்தது மாஜி ரங்கசாமிதான்........

இவ்வளவும் என் புலனறிவுக்குத் தெரிந்ததே ஒழிய எனது மனம், அவள் கட்டியிருந்த துண்டின் இடைவெளியிலேயே லயித்தது. மனதில் குமுறல் பேய்க்கூத்து.

'ஒன்றுமில்லை, அயர்ந்த தூக்கம், இப்படிப் பயப்படலாமா? வாருங்கள் இந்தப் பக்கம்.' என்னமோ அன்று தைரியமாக அவள் கையைப் பிடித்தேன். எதிர்ப்பின்றி உடன் வந்தாள்.

அந்த புடவையை உடுத்துங்கள் என்று கொடியிலிருந்து அதை எடுத்தேன்; அவளிடம் கொடுக்கவில்லை. அவள் தீண்டு நெகிழ்ந்தது; நான் மிருகமானேன்; அவள் பிணமானாள்.

நான் அன்று ஆபீஸுக்குப் போகவில்லை. ரங்கசாமியின் சடலத்தைப் பின் தொடர்ந்தவர்கள் நாங்கள் இருவர்தான். அவள் தீச்சட்டி எடுத்துக் கொண்டு நடந்தாள். திரும்பி வரும்பொழுது, அவளைப் பார்ப்பதற்கு எனக்குப் பரிதாபமாக இருந்தது. அவளை ஊருக்கு அனுப்பும்வரை நான் மீண்டும் அதைப்பற்றி நினைக்கவில்லை; அதனால் ஏற்பட்ட வெறுப்பையோ பாசத்தையோ அவள் காட்டிக் கொள்ளவில்லை........

அது எங்களுக்குள் ஓர் மறந்த சம்பவமாகியது. என் மனம் நிம்மதியடைந்தது.

இப்பொழுது ஏன் சொல்ல வந்தேன் என்றால், என் மகள் லக்ஷ்மிக்கு, அவர்கள் இருவரும் பிரியம் வைத்த சுண்டான், இப்பொழுது பருவமடைந்து விட்டாள்; எனக்கும் கொஞ்சம் கடன் இருக்கிறது; அதோடு பிராவிடன்ட் நிதியிலிருந்தும், இன்ஷூர் தொகை கொஞ்சமும் அவளுக்கும் அவள் தாயாருக்கும் கிடைக்கும். கவலையில்லை; ஆனாலும் பிணத்தைப் பார்க்கும்போதெல்லாம் என் மனதில், ரங்கசாமி வீட்டில் நடந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது ....அதேமாதிரி மிருக இச்சை தோன்றுகிறது........

பார்க்காமல் ஓட முயலுகிறேன். முடியவில்லையே. கீழ்ப்பக்கத்திற்கு என்னைக் கொண்டு போகுமுன், நாலு பேர் சவாரி கிடைத்தால் தேவலை என்று தோணுகிறது.

எல்லாம் ரங்கசாமியால் வந்த வினை; அவன் ஏன் இப்படி நொஞ்சானகக் குடும்பம் நடத்த முயல வேண்டும்?

ஃ ஃ ஃ

இப்படி ஒன்றும் நிஜமாக நடக்கவில்லை. பிரேதத்தைப் பார்க்கும்போதெல்லாம் ஏன் இந்தக் கற்பனை ரங்கசாமியும் அவனது மனைவியும் வந்து இந்த நாடகமாடிவிட்டுப் போக வேண்டும்?

என-க்-குப்-பய-மா-இருக்-கு........

ஒரு சிறு நாடகம்

மனை தர்மம்

—வெ. சா.

(இது ஸ்ரீமான் மாரிஸ் மெடர்லிங்க் என்ற பேரறிஞர் எழுதிய நாடகத்தின் மொழிபெயர்ப்பு.)

நாடக பாத்திரங்கள்

உதியமான்	—	ஒரு வயோதிகன்
சேரலாதன்	—	வயோதிகனின் நண்பன்
பெருந்தேவி, மாரியம்மை	—	வயோதிகனின் பேர்த்திகள்
பிச்சன்	—	ஒரு குடியானவன்

கூட்டத்தைச் சார்ந்த சிலரும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தகப்பனார், தாயார் இரண்டு சிறுமிகள், ஒரு கைக் குழந்தை முதலியோர்.

நாடக நிகழ்விடம்: ஒரு தோட்டம்

முதலங்கம்

இடம்: ஒரு தோட்டத்தில் சிறு குடிசை

காலம்: பின் மாலை

(மூன்று பலகணிகள் உடைய ஒரு குடிசையில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த தகப்பனார், தாயார், இரண்டு சிறு பெண்கள் முதலியோர், கணப்புச் சட்டியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டு குளிர் காய்ந்து கொண்டிருக்கின்றனர். இரண்டு சிறு பெண்களும், காலையில் தங்கள் தாயார் கற்றுக் கொடுத்த தையல் வேலையில் கைபழகிக் கொண் டிருக்கிறார்கள். தாயார் தனது கைக் குழந்தையை மடியில் வைத்துச் சீராட்டிப் பாடிக் கொண் டிருக்கிறாள். மூலையில் ஒரு சிறு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. எங்கும் அமைதி நிறைந்திருக்கிறது.)

(உதியமானும் சேரலாதனும் மெதுவாகப் பிரவேசிக்கிறார்கள்)

உதியமான்: (பெரு மூச்சு விட்டு) அப்பா! மெதுவாக வீட்டுக்குப் பின்புறம் வந்து சேர்ந்தோம். (குடிசையிலுள்ளவர்களைச் சுட்டிக் காட்டி) அதோ பார்! அவர்கள் இப் பக்கம் வருவதே யில்லை. வீட்டுக்கு முன்புறமாகவே கதவுகள் முதலியன எல்லாம்! இந்தப் பக்கம் ஒன்றுமில்லை. (குடிசையைக் கூர்ந்து கவனித்து) இப்படி வா! இந்த ஜன்னலின் வழியாகப் பார்! எல்லோரும் நெருப்புக் குமட்டியைச் சுற்றி உட்கார்ந்து கொண் டிருக்கின்றனர். நல்ல காலம்! நாம் வந்ததும், இங்குப் பேசிக் கொண்டிருப்பதும் அவர்களுக்குத்

தெரியாது. தெரிந்திருந்தால், தாயாராவது, அந்தப் பெண்களாவது ஓடி வந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்திருப்பார்கள். அப்பொழுது நாம் என்ன செய்வது ?

சேரலாதன்: (சிறிது திகைப்புடன்) என்ன செய்வது ?

உதிய: (கையை அமர்த்தி) இரு; குடும்பத்தினர் அனைவரும் அந்த அறையிலேயே இருக்கிறார்களா வென்று பார்க்கிறேன். (தலையைத் தூக்கிப் பார்த்துச் சிறிது பொறுத்து) ஆம்; தகப்பனார் குமட்டியின் கிட்டே ஒரு மூலையாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். குளிருக்காக முழங்காலைக் கட்டிக் கொண்டு, ஏதோ யோசனை செய்து கொண்டிருக்கிறார். அந்த அம்மாள்—குழந்தைகளின் தாயார்—சுவற்றின் மீது சாய்ந்து கொண்டு—

சேர: நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

உதிய: இல்லை; இல்லை. அவள் எதையும் பார்க்கவில்லை. இப்பொழுது அவள் உட்கார்ந்து கொண்டிருக்கிற மாதிரியில் நம்மைப் பார்க்க முடியாது. மரத்தின் நிழல் நம்மை மறைத்துக் கொண் டிருக்கிறது.—உஸ்!—இன்னும் அருகில் போகாதே. இறந்துபோன பெண்ணின் இரண்டு சகோதரிகளும்—பாவம்! தையல் வேலையில் கைபழகிக் கொண்டிருக்கிறார்கள்: கைக் குழந்தை அயர்ந்து தூங்கிவிட்டது. (ஆகாயத்தைப் பார்த்து) நாழிகை ஒன்பதுக்குமேலிருக்கும். (குடிசையை நோக்கி) மௌனத்தின் ஆட்சிக்கு இந்தக் குடிசை உட்பட்டிருக்கிறது.

சேர: அந்தக் குழந்தைகளின் தகப்பனாருடைய கவனத்தைக் கவரும் படியாக நாம் ஏதேனும் சந்தடியோ சைகையோ செய்தாலென்ன? இந்தப் பக்கம் அவர் தலையைத் திருப்பிக்கொண்டிருக்கிறார். ஏதேனும் ஒரு பல கணியின் கீழ்ப் போய் நான் தட்டிச் சப்தஞ்செய்யட்டுமா? யாராவது ஒருவர் முதலில் இந்த துக்க சமாசாரத்தைக் கேட்டுத் தானே தீர வேண்டும்.

உதிய: எதைச் செய்வது என்று எனக்குத் தோன்றவில்லை. நாம் மிகுந்த ஜாக்கிரதையுடனிருக்க வேண்டும். தகப்பனார் வயதானவர்; தவிர நோயாளி. தாயாரும் வியாதியால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண் குழந்தைகளுக்கோ மிகுந்த பாலிய வயது. இவர் எல்லாரும் அவளை—இறந்து போன அந்தப் பெண்ணை—எவ்வளவு அன்புடன் நேசித்து வந்தார்கள் தெரியுமா ? வேறெவரிடத்திலும் இவர்கள் அம்மாதிரி அன்பு செலுத்தவில்லை. இத்தகைய சந்தோஷம் நிறைந்த குடும்பத்தை நான் எங்கும் பார்த்தது கிடையாது. (பொறுத்து) வேண்டாம்! வேண்டாம்! சேரலாதா! ஜன்னலண்டை போகாதே. இதுவே அவர்களுக்கு நாமிழைக்கும் பெரிய தீங்காகும். சாதாரண ஒரு சம்பவத்தைப் போலவே, இந்த மரணச் செய்தியை அவர்களுக்கு நாம் தெரிவிக்க வேண்டும். மற்றும், நாம் அதிக துக்கமடைந்தவர்களாகவும் காட்டிக்கொள்ளக் கூடாது. ஏனென்றால், நமது துக்கத்தை விட தங்களுக்கு அதிகதுக்கம் இருக்கிறதென்று காட்டக் கருதி, என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்பார்கள். (பொறுத்து) நாம் மெதுவாகத் தோட்டத்திற்கு முன் புறம்

போவோம். போய்க் கதவைத் தட்டுவோம். கதவைத் திறப்பார்கள். பிறகு, ஒன்று மறியாதவர்கள் போல் உள்ளே செல்லலாம். முதலில் நான் போகிறேன். என்னைக் கண்டு அவர்களில் ஒருவரும் ஆச்சரியப்பட மாட்டார்கள். நான் சாதாரணமாக மாலை வேலைகளில், பழம், புஷ்பம் முதலியவைகளைக் கொண்டு வந்து இவர்களுக்குக் கொடுத்து விட்டு சிறிது நேரம் பேசி விட்டுச் செல்வேன்.

சேர: அப்படியானால் நானும் உன்னுடன் வர வேண்டு மென்று ஏன் விரும்புகிறாய்? நீ மாத்திரம் போ. நீ என்னை அழைக்கும் வரை, நான் வெளியில் காத்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் என்னை எப்பொழுதும் பார்த்ததே யில்லை. நான் ஒரு வழிப் போக்கன் தானே! அந்நிய மனிதன் தானே!

உதிய: நான் ஒருவனாகப் போவது நல்லதல்ல. ஒருவனே சென்று அறிவிக்கும் துக்கச் செய்தி, அதிக துன்பத்தைத் தரக்கூடியதா யிருக்கிறது. நான் வரும் போதே இதைப் பற்றி யோசித்தேன். நான் தனியனாகவே சென்றால் போனதும் முதலில் இந்தத் துக்கச் செய்தியையே தெரிவிக்க வேண்டி யிருக்கும். என்னுடைய இரண்டொரு வார்த்தை களிலேயே அவர்கள் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொள்வார்கள். பிறகு எதையும் சொல்ல எனக்கு வழியிராது. துர்ச் சம்பவத்தைத் தெரிவிக்கும் வார்த்தைகள் முற்றுப் பெற்ற பிறகு ஏற்படும் அமைதி இருக்கிறதே, ஓ! எவ்வளவு பயங்கரமானது தெரியுமா? அந்த அமைதியில் தான் இதயம் வெடித்துப் போகிறது. நாமிருவரும் ஒன்றாகப்போனால், வளைத்து வளைத்து நான் பேசத் தொடங்குவேன். 'நாங்கள் அந்தப் பெண்ணை அப்படிப் பார்த்தோம்; இப்படிப் பார்த்தோம்; அவள் ஆற்றின் மீது மிதந்து கொண்டிருந்தாள். அவள் இரு கைகளும் ஒன்றாகச் சேர்ந்திருந்தன' என்று இப்படியெல்லாம் பேச ஆரம்பிப்பேன்.

சேர: அவள் கைகள் ஒன்றாகச் சேர்ந்திருக்கவில்லையே. இரண்டு கைகளும் இரண்டு பக்கங்களில் மிதந்து கொண்டிருந்தனவே.

உதிய: பார்த்தாயா; நம்மையும் மீறி நாம் பேச ஆரம்பிக்கிறோம். அந்தப் பெண் இறந்து போன விவரங்களில் தான் துக்க மெல்லாம் அடங்கியிருக்கின்றன. நான் தனியாகச் சென்று இந்தச் செய்தியைத் தெரிவித்தால்,—அவர்களுடைய சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும்—என்னுடைய முதல் வார்த்தைகளே அவர்களுக்கு எவ்வளவு துயரத்தை உண்டாக்கும் தெரியுமா? ஆண்டவனே அதை அறிவான். நாமிருவரும் சென்று, மாறி மாறிப் பேசினால், அவர்கள் நமது பேச்சிலே கவனத்தைச் செலுத்தி விட்டு, நமது முகத்திலே தங்கியிருக்கும் துக்கக் குறியைக் காண மறந்து விடுவார்கள். இறந்து போன பெண்ணின் தாயார் அங்கு இருக்கிறாள் என்பதை நீ மறந்து விடக் கூடாது. அவளுடைய பிராணன் ஒரு நூலிழையில் தான் தொங்கிக் கொண்டிருக்கிறது. துக்கத்தின் முதல் அலையானது, அநாவசியமான வார்த்தைகளில் சென்று அடங்கி விடுவதே நல்லது. ஒரு துக்கச் செய்தியை பலர் சென்று தெரிவித்தால், அந்தத் துக்கத்தைப் பல

ரும் பங்கிட்டுக்கொண்டு விடுகிறார்கள். துக்கத்தில் சம்பந்தப் படாதவர்கள் கூட, அதில் ஒரு பாகத்தை எடுத்துக் கொள்கிறார்கள். இதனால், அத்துக்க மானது, முயற்சியின்றி, சந்தடியின்றி, காற்றைப் போல் கலந்தும், வெளிச்சத்தைப் போல் பரந்தும் போய்விடுகிறது.

சேர: உன் துணிகள் நனைந்திருக்கின்றன.

உதிய: என்னுடைய மேற் சட்டையின் ஒரு பாகந்தான் நனைந்தது; வேறொன்றுமில்லை. நீயென்ன! இவ்வளவு ஈரத்துடனிருக்கிறாயே. உன்னுடைய மேற் சட்டையிலெல்லாம் சேறு படிந்திருக்கிறது. இருட்டாயிருந்ததால், வழியில் இதை நான் கவனிக்கவே யில்லை.

சேர: இடுப்புவரை நான் தண்ணீருக்குள் சென்றேன்.

உதிய: நான் வருவதற்கு நெடு நேரத்திற்கு முந்தியே நீ அவளைக் கண்டு பிடித்து விட்டாயா?

சேர: இல்லை; சில விநாடிகளுக்கு முன்புதான் நான் கிராமத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் இருள் மூடிக்கொண்டு வரத் தொடங்கியது. நான் ஆற்றோரமாகவே, ஆற்றைப் பார்த்துக் கொண்டே சென்றேன். அப்பொழுது ஒரு நாணற் புதருக்கு அருகாமையில் ஏதோ ஒன்று ஆச்சரியமாகப் புலப்பட்டது. நெருங்கிச் சென்றேன். அந்தப் பெண்ணின் தலை மயிரானது தலையைச் சுற்றிப் பின்னவிட்டுக் கொண்டு, அலையின் வேகத்தால் இப்படியும் அப்படியுமாக ஆடிக் கொண்டிருந்தது.

(இச்சமயத்தில் குடிசையிலுள்ள இரண்டு பெண்களும் ஜன்னல் பக்கமாகத் திரும்பிப் பார்க்கின்றனர்.)

உதிய: அந்தப் பெண்ணின் இரண்டு சகோதரிகளின் தலை மயிரும் அவர்களுடைய தோட்களின் மீது அசைந்தாடிக் கொண்டிருப்பதை நீ பார்த்திருக்கிறாயா?

சேர: அந்த இரண்டு பெண்களும் நம் பக்கமாகத் தலையைத் திருப்பிப் பார்க்கிறார்கள். ஒருகால், உரக்கப் பேசி விட்டேனோ என்னவோ தெரியவில்லை. (மீண்டும் இரண்டு பெண்களும் பழையபடி தலையைத் திருப்பிக் கொள்கின்றனர்.) அவர்கள் மறுபடியும் பழையபடி தலையைத் திருப்பிக் கொண்டு விட்டார்கள். (பொறுத்து) நான் உடனே தண்ணீருக்குள் இறங்கி, இடுப்பளவு ஆழம் வரை சென்றேன். மெதுவாக அவள் கையைப் பிடித்துக் கரைக்கு இழுத்துக் கொண்டு வந்தேன். ஆ! தனது சகோதரிகளைப் போலவே அவளும் அழகாயிருந்தாள்.

உதிய: அவர்களைவிட அழகாயிருந்தாளென்று நினைக்கிறேன். நான் ஏன், என் தைரியத்தை யெல்லாம் இழந்து விட்டேனென்று தெரியவில்லை.

சேர: என்ன தைரிய மென்று சொல்கிறாயே. மனிதப் பிரயத்தின மனைத்தையும் நாம் செய்து பார்த்தோம். நான் பார்ப்பதற்கு ஒரு மணி நேரத்திற்கு முந்தியே அவள் இறந்திருக்க வேண்டும்.

உதிய: இன்று காலை அவள் உயிரோடிருந்தாள்! கோயிலிலிருந்து வெளி வரும்போது அவளைப் பார்த்

தேன். எந்த ஆற்றில் அவளை நீ மிதக்கக் கண்டாயோ, அந்த ஆற்றுக்கு அக்கரையிலிருக்கும் தனது பாட்டியைக் காணச் செல்லப் போவதாக அவள் கூறினாள். நான் எப்பொழுது அவளைத் திரும்பிப் பார்க்க வேண்டுமென்று கேட்டதற்கு சரியான பதில் சொல்லக்கூட அவளுக்குத் தெரியவில்லை. ஏதோ என்னைக் கேட்க வேண்டுமென்று விரும்பினாள். ஆனால் அதை வாய்திறந்து கேட்கத் துணியவில்லை. உடனே என்னை விட்டுப் பிரிந்து சென்று விட்டாள். இப்பொழுதுதான் அதன் உண்மை எனக்குப் புலப்படுகிறது. அப்பொழுது எனக்கு ஒன்றுந் தெரியவில்லை. மௌனமாக இருக்க வேண்டுமென்ற தங்கள் விருப்பத்தைச் சிலர் புன்சிரிப்பின் மூலமாகத் தெரிவித்து விடுவது வழக்கம். அல்லது தங்கள் அபிப்பிராயங்களைப் பிறர் சரியாகத் தெரிந்து கொள்ள மாட்டார்களென்ற சந்தர்ப்பங்களிலும் புன் சிரிப்பு சிரித்து விடுவதுண்டு. அதுபோலவே அவளும் அப்பொழுது சிரித்தாள். வாழ்க்கையிலுள்ள நம்பிக்கை கூட அவளுக்கு ஒரு துயரமாக இருந்தது போலும். அவள் என்னோடு பேசிக்கொண்டிருந்த காலையிலும் அவள் கண்கள் என்னைப் பார்க்கவே இல்லை.

சேர: பகல் முழுவதும் அவள் ஆற்றங்கரையிலேயே உலவிக் கொண்டிருந்ததாகச் சில குடியானவர்கள் என்னிடம் கூறினார்கள். ஏதோ புஷ்பம் பறித்துக் கொண்டு செல்வதற்காக அவள் அங்கிருக்கிறாள் என்று அவர்கள் கருதினார்களாம். அவளுடைய மரணம், ஒருகால்—

உதய: அதைப்பற்றி ஒருவரும் சொல்ல முடியாது. யாருக்கு என்ன தெரியும்? அதிகமாகப் பேச விரும்பாதவர் சிலர் இருக்கின்றனர். அவரில் அவள் ஒருத்தியா யிருக்கலாம், இந்த உலகத்திலே வாழ வேண்டாமென்பதற்கு, ஒவ்வொரு வருடைய மனதிலும் எத்தனையோ காரணங்கள் குடி கொண் டிருக்கலாம். இதோ, இந்த அறைக்குள் நீ பார்ப்பதுபோல, ஒவ்வொரு வருடைய ஆத்மாவுக்குள்ளும் சென்று நீ பார்க்க முடியாதல்லவா? இவர்கள்—அதாவது அதிகமாகப் பேசாதவர்கள்—சிறு விஷயங்களைத் தவிர வேறொன்றும் பேசமாட்டார்கள். இவர்களைக் கனவில் கூட எவரும் தவறாக நினைப்பதில்லை. இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையில் ஈடுபடாதவர்கள் அருகில் நீ மாதக்கணக்காய் வசிக்கலாம்; அவர்கள் கேட்ட கேள்விக்கு நீ முன்பின் யோசியாமல் பதில் சொல்லி விடலாம். ஆனால் அவர்களோ உயிரற்ற பொம்மைகள் போல் பார்வைக்குத் தோன்றிய போதிலும், அவர்களுடைய இதயத்தில் எத்தனையோ விதமான எண்ணங்கள் உதயமாகிக் கொண்டும் மறைந்து கொண்டு மிருக்கின்றன. தாங்கள் இன்னதென்று அவர்களுக்கே தெரிவதில்லை. அப்படியே, அந்தப் பெண்ணும், மற்றவர்களைப் போலவே வாழ்ந்திருக்கலாம். தான் மரிக்குந் தினத்தன்று கூட, 'இன்று மழை பெய்யப் போகிறது, நாங்கள் இத்தனை பேர் உட்கார்ந்து விருந்து சாப்பிடப் போகிறோம்; அல்லது அந்தப் பழம் பழுத்திருக்கிறது' என்று இப்படி யெல்லாம் சகஜமாகப் பேசி யிருக்கலாம். இத்தகையவர்கள், ஒரு புஷ்பம் வாடிக் கீழே விழுந்து போனால், அதைப் பார்த்து வெளிப் படையாகச் சிரிக்கிறார்கள்; ஆனால் இருட்டில் சென்று அதற்காக

அழுகிறார்கள். தேவதைகள் கூட, எதைப் பார்க்க வேண்டுமோ அதைப் பார்ப்பதில்லை. மனிதர்களோ, ஒரு காரியம் நடந்து, பூரணமாக முடிந்த பிறகுதான் அதைப்பற்றி அறிந்து கொள்கிறார்கள். (பொறுத்து) நேற்று மாலை, அவள் தன்னுடைய சகோதரி களுடன், (குடிசைக்குள் காட்டி) இந்த விளக்கு வெளிச்சத்தில் உட் கார்ந்து கொண்டிருந்தாள். இன்று அப்படியில்லை. முதன் முதலாக இப் பொழுதுதான் அவளை நான் பார்ப் பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. இந்த உலக வாழ்க்கையின் தத்துவத் தை அறிந்து கொள்ள வேண்டுமா னால், நமது தினசரி சாதாரண வாழ்க் கையில் ஏதேனும் புதிய சம்பவம் ஒன்று ஏற்பட வேண்டும் போலும். நாம் யாரோடு இரவு பகலாகக் கூடவே இருந்து உறவாடுகிறோமோ, அவர்கள், இவ்வுலக வாழ்க்கையி னின்று பிரிந்த பிறகுதான் அவர்கள் இத்தன்மை யுடையவர்கள் என்று தெரிந்து கொள்கிறோம். ஓ! அந்தப் பெண் எவ்வளவு அற்புதமான பிறவி!

சேர: (குடிசையைக் காட்டி) அதோ பார், அந்த அறையின் அமைதியிலே அவர்கள் புன் சிரிப்பு தவழ்கிறது.

உதய: அவர்கள், அந்தப் பெண் ணின் வரவில் ஆவலாயில்லை. இன்று மாலை அவள் வருவாள் என்று அவர் கள் எதிர்பார்க்க வில்லை.

சேர: அவர்கள் சிரித்துக் கொண் டே, அசையாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் பார். தகப்ப னார், தமது உதட்டின் மீது விரல் வைத்து—

உதிய: தாயாருடைய மடியிலே கைக் குழந்தை தூங்குகிறதென்று சொல்கிறார்.

சேர: குழந்தைக்கு எங்குத்தொந் திரவு உண்டாகுமோ என்று கருதி, தாயார் தலைகூட நிமிரவில்லை.

உதிய: சிறு பெண்கள், தையல் வேலையை நிறுத்தி விட்டார்கள். இப்பொழுது பார்; ஒரே அமைதி.

சேர: அவர்கள் மேல் துணிகூட விழுந்து விட்டது.

உதிய: அவர்கள் குழந்தையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சேர: தங்களைப் பிறர் பார்க்கின்ற னர் என்று,—பாவம்!—அவர்களுக் குத் தெரியாது.

உதிய: நாம் கூட கவனிக்கப்படு கிறோம்.

சேர: இப்பொழுதே அவர்கள் பார்வை மேல் நோக்குகிறது.

உதிய: ஆயினும் அவர்களால் ஒன்றும் பார்க்க முடியாது.

சேர: அவர்கள் சந்தோஷமுள்ள வர்களாகத்தான் தென்படுகிறார்கள். ஆயினும்—ஏதோ ஒன்று—அஃ தின்னதென்று என்னால் சொல்ல முடியவில்லை.

உதிய: அவர்கள், எல்லா ஆபத் துக்களையும் கடந்து விட்டதாகக் கருதுகிறார்கள். கதவுகளையும் ஜன்னல் களையும் சாற்றி விட்டார்கள். பழைய வீட்டின் சுவர்களைப் பலப்படுத்தி யிருக்கிறார்கள். கதவுகளுக்குப் புதிய தாழ்ப்பாள்கள் போட்டிருக்கிறார்கள்.

எதை எதிர் பார்க்கக்கூடுமோ அதை எதிர் பார்த்தே காரியங்கள் செய்திருக்கிறார்கள்.

சேர: இப்பொழுதோ பின்னையோ, அவர்களுக்கு நாம் இந்தச் செய்தியைத் தெரிவித்தே ஆகவேண்டும். அல்லது வேறு யாராவது திடீரென்று வந்து கண்டபடி உளறி விடுவர். அந்தப் பெண்ணின் சவத்தை நாம் விட்டுவந்த மைதானத்தில் ஏராளமான குடியானவர்கள் கூடியிருந்தார்கள். அவர்களில் யாராவது ஒருவர் ஓடிவந்து—

உதிய: மாரியம்மையும் பெருந்தேவியும் பிரேதத்தைக் காவல்புரிந்து கொண்டிருக்கிறார்கள். குடியானவர்கள், மரக்கிளைகளைக் கொண்டு, ஒரு தொட்டில் கட்ட ஏற்பாடு செய்து கொண்டிருந்தார்கள். அதில் பிரேதத்தை வைத்துக் கொண்டு அவர்கள் புறப்படுவதற்கு முன்னால் என்னிடம் வந்து தெரிவிக்கும்படி என் பெரிய பேர்த்தியினிடத்தில் தெரிவித்திருக்கிறேன். அவள் வரும்வரை சிறிது காத்திருப்போம். அவளும் வந்துவிடுவாள். நாம், இம்மாதிரி காத்துக் கொண்டிராமலிருந்தால், நன்றாயிருக்கும். ஆனாலும்—நான் நினைத்த தென்னவென்றால், நேரே வந்து கதவைத் தட்ட வேண்டியது, பெண்ணின் பெற்றோர்களுக்குச் சில வார்த்தைகளில் சமாசாரத்தைச் சொல்லிவிட வேண்டிய தென்று கருதினேன்— ஆனால் இங்கு வந்த பிறகு, இக்குடும்பத்தினரை அதிக நேரம் கவனிக்க வேண்டியதாகி விட்டது.

(மாரியம்மை பிரவேசிக்கிறாள்.)

மாரி: தாதா! அவர்கள் வருகிறார்கள்.

உதிய: (ஆச்சரியத்துடன்) நீயா? அவர்கள் எங்கே?

மாரி: மலை யடிவாரத்தின் கீழ் வந்து கொண்டிருக்கிறார்கள்.

உதிய: சந்தடி செய்யாமல் வருகிறார்கள் போலும்!

மாரி: தாழ்ந்த குரலில் பிரார்த்தனை செய்யும்படி கூறிவிட்டு வந்தேன். பெருந்தேவி அவர்களுடன் இருக்கிறாள்.

உதிய: அதிக ஜனங்கள் வருகிறார்களோ?

மாரி: கிராம முழுவதும் புரண்டு வருகிறது. அவர்கள் விளக்குகளை ஏற்றிக் கொண்டு வந்தார்கள். நான் அணைத்துவிடும்படி கூறினேன்.

உதிய: அவர்கள் எந்த வழியாக வருகிறார்கள்?

மாரி: ஒற்றையடிப் பாதையாகவே அவர்கள் வருகிறார்கள்; அதுவும் மெது மெதுவாக.

உதிய: அதிக நேரமாய்விட்டது.

மாரி: தாதா! அவர்களுக்கு இந்தச் சமாசாரத்தைத் தெரிவித்து விட்டாயா?

உதிய: அவர்களுக்கு இன்னும் நான் ஒன்றுங் கூறவில்லை. அதோ பார்! அவர்கள் கணப்புச் சட்டியைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். குழந்தாய்! அவர்களைப் பார்; வாழ்க்கை என்பது இன்னதென்று உனக்குத் தெரியும்.

மாரி: ஓ! அவர்கள் எவ்வளவு சாந்த சீலர்களாய் விளங்குகிறார்கள்! நான் காண்பது ஒரு கனவுபோல் இருக்கிறது! (தொடரும்)

கைம்பெண்

வித்வான்—S. உமைதாணு பிள்ளை.

கணவனை யிழந்த கைம் பெண்ணைக்
கட்டி நாளுஞ் சிறை யிட்டே
உணவு முடையும் அணியு மெலாம்
ஒருங்கே நாமும் விலக்குவது
பிணத்தொடு பிணமாய் எரிப்பதினும்
• பெரிய தண்டனை யாகாதோ?
உணங்கி வாடும் அவர் நிலையை
உலகங் கண்டு வருந்தாதோ? 1.

கொழுநனை யிழந்த கைம் பெண்ணும்
கொள்ளா திந்த வாழ்க்கைக்குப்
பழுது பட்டா ளென்றே நாம்
பலரும் பழித்துக் கூறுவதால்
வழுவி விழுந்த அவர்களையும்
வசைகள் சொல்லி வெறுப்பதனால்
அழுத அவர்கள் கண்ணீரும்
ஐயே! நம்மைத் தொடராதோ? 2.

கண்ணீர் வடித்தே கைம் பெண்ணும்
கால மெல்லாங் கடுஞ் சிறையில்
எண்ணி யழியும் அவர்களது
ஏக்கம் போக்கி யெந்நாளும்
கண்ணைப் போல இவ்வுலகில்
கனிவா யென்றும் கப்பவரே
மண்ணி லவர்தம் கடமைகளை
மாண்பா யென்றும் செய்பவராம். 3.



அறிவுத்துறை

அலைவடிவாய் அசைதல் என்றால் என்ன ?

——"விஞ்ஞான போதகர்"

நமது தினசரி வாழ்க்கையில் ‘அலைகள்’ அதிக முக்கியமானதாகவும், மிகவும் அத்யாவசியமானதாகவுமிருந்து வருகிறது. ஜலத்தின் மீது அலைகள் வட்ட வட்டமாய் அசைந்தோடுவதைக் காண்கிறோம். நம்மைச் சுற்றியுள்ள வஸ்துக்கள் மீது சூரிய வெளிச்சமோ அல்லது வேறு எவ்வித வெளிச்சமோ தாக்கிப் பின் அவ்வஸ்துக்களால் சிதறடிக்கப்பட்டு ஓடி வரும் ‘வெளிச்ச அலைகளால்’ நாம் அவைகளைக் காண முடிகிறது. வாய்ப் பேச்சு, கம்பியுள்ள தந்தி, முதலியவை மூலம் விஷயங்களை ‘சப்த அலைகளால்’ தெரிந்து கொள்ளுகிறோம். கம்பியில்லாத் தந்திகளில் ‘மின்சார அலைகளால்’ விஷயங்களை உணருகிறோம். ஆகவே ஒரு இடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு ஓர் சக்தியை உணர்த்திக் கொள்ளுவதற்கு அச்சக்தியை அலைவடிவமாய் அசைந்தோடச் செய்து கொள்ளுகிறோம். இவ்வாறு உணர்த்தப்படும் சக்தி அலைவடிவமாய்ச் செல்லுவதற்கு ஓர் உபகரணம் (Medium) அத்யாவசியமாயிருக்கிறது. மேலும் ஒரு இடத்திலிருந்து

மற்ருேரிடத்திற்கு ஓர் உபகரணத்தின் மூலமாய்—அலைவடிவாய்—ஒரு சக்தி மாற்றப்படும்போது அச்சக்தி மாத்திரம் அசைந்து செல்லுவதே யொழிய உபகரணம் சேர்ந்து செல்லுவதே யில்லை. திருஷ்டாந்தமாக சப்தத்தை யெடுத்துக் கொள்ளுவோம். சப்த அலை செல்லுவதற்கு வாயு, ஜலம் அல்லது திடப்பொருள் போன்ற உபகரணங்கள் அவசியம். அப்படி ஏதாவது ஒரு உபகரணத்தில்—வாயு வென்று வைத்துக் கொள்ளுவோம்—சப்தம் அலைந்து போகும் போது வாயுவின் அணுக்கள் சப்தத்தைக் கொண்டு செல்லுவதில்லை. ஆனுல் சப்தத்தின் சக்தியை அலைந்து செல்ல அநுமதிக்கிறது. இதனைத் தெளிவாக தெரிந்து கொள்ள வேண்டுமானுல் ஓர் நீர் தடாகத்திலுண்டாகும் அலைகளை எடுத்துக் கொள்ளுவோம்.

கள் அவ்விடத்திலிருந்து வட்டவட்டமாகப் புறப்பட்டு நாலா பக்கமும் செல்லுகின்றன. அப்படிச் செல்லும் அலைகள் உயர்ந்தும், தாழ்ந்தும் காணப்படும். இவ்வாறு உயர்ந்து, தாழ்ந்து கொண்டு செல்லும் வேகம் ஒரே அளவுடன் கூடியதா யிருக்கும். முக்கியமாய் சமுத்திரத்தின் அலைகள்—கரைக்கு வெகு தூரத்தில்—பார்க்கும் போது தண்ணீரே இடம் விட்டு அலை வடிவமாய்ப் போய்க் கொண் டிருப்பதாகத் தோன்றும். ஆனுல் சில கார்க் (Cork) துண்டுகள், அல்லது சமுத்திரப் பறவைகள் சமுத்திர நீரின் மீது மிதந்து கொண்டிருந்தால் அலைகள் மாத்திரம் போய்க் கொண்டிருக்குமே தவிர நீரில் மிதந்து கொண்டிருக்கும் வஸ்துக்கள் இருந்த விடத்திலேயே இருக்கும். மிதக்கும் வஸ்துக்கள் நீரோடே இருந்த விடத்திலேயே உயர்ந்து தாழ்ந்து அசையுமே தவிர



ஒரு சிறு கல்லைத் தண்ணீர் தடாகத்தில் போட்டவுடன் நீர் அலைகள் வட்டமாய்ப் புறப்பட்டுப் பரந்தோடுகின்றன.

ஓர் கல்லைத் திடீரென்று ஒரு குளத்தில் போட்டால் உடனே நீர் அலை நகர்ந்து செல்லும் அலைகள் அவை களைக் கடந்து சென்று கொண்டே

யிருக்கும். ஆகவே தண்ணீரின்பாகங்கள் இருந்த விடத்திலேயே யிருக்கும். ஆனால் அதிலுண்டான அலைகள் மாத்திரம் வளைந்து வளைந்து —மேலும் கீழுமாக—பரந்து செல்லுகின்றன. இஃது ஒரு முக்கியமான

புள்ளியாகக் காட்டப் பட்டிருப்பது பரந்தோடும் அலை. அதில் ஓர் நீர் அணு இருந்த விடத்திலேயே இருந்து மேலும் கீழுமாக அசைந்து கொண்டே யிருப்பதை அம்புக்குறி காட்டுகிறது.

கோட்பாடாகும். அதாவது ஓர் சக்தி அலை வடிவமாக அசைந்தோடும் போது அது ஊடுருவிச் செல்லும் உபகரணம் எவ்விதத்திலும் இடம் விட்டு இடம் மாறுவதில்லை. ஆனால் உண்டான சக்தி இலேசாகச் செல்லுவதற்கு இருந்த விடத்திலேயே மேலும் கீழுமாக அல்லது அங்குமிங்குமாக அசைந்து கொடுக்கும். அவ்வளவுதான்.

ஜலத்தின் மீது உண்டாகும் அலைகள் மேலும் கீழுமாக வளைந்து வளைந்து செல்லுகிறது. ஆனால் சாதாரண காற்றில் உண்டாகும் அலையில் வாயு அணுக்கள் இருந்த விடத்திலேயே ஒரு சமயம் சேர்ந்தும் மறு சமயம் விரிந்தும் கொடுக்கும். (Compression and rarefaction)



வாயுவில், (ஜலத்தில், அல்லது திட பதார்த்தத்தில்) அசைவு ஏற்பட்டால் அணுக்கள் அச் சக்தியை சேர்ந்தும் விரிந்தும் அசைந்து பரந்தோடச் செய்கிறது. இதனைக் கீழ்பாகம் கோடுகளால் காட்டுகிறது. இந்த நேர் அசைவு வளைந்தோடும் அசைவை ஒத்திருப்பதை மேலேயுள்ள அலைக் கோடு குறிக்கிறது.

அதாவது ஓரிடத்தில் சப்த அலைகள் புறப்பட்டால் அச்சக்தி வாயு உபகரணத்தில் செல்லும் போது நீர் அலைகள் போல் வளைந்து வளைந்து செல்லுவதில்லை. ஆனால் அணுக்கள் ஒன்று சேர்ந்து பிறகு அகன்று சென்று இவ்விதமாகவே சப்த சக்தியை படர்ந்து செல்ல அனுமதிக்கின்றன. ஆதலால் அலைவடிவத்தில் இரண்டு விதங்களுண்டு. ஜலத்தின் மீதுண்டாகும் அலை வடிவம் போல வளைந்து (Transverse) செல்



T—அசைந்து கொண்டிருக்கும் பிளவுத் தடி

M—சிறிய கண்ணாடித் துண்டு

C—சுற்றிக் கொண்டிருக்கும் கண்ணாடிப் பெட்டி.

நேர் முகமாக அசைந்து காற்றில் நேர்முக அலை உண்டாக்கிக் கொண்டிருக்கும் பிளவுத்தடியில் வெளிச்சத்தை M, C களில் பிரதிபிம்பிக்கச் செய்து வளைந்து செல்லும் அலை போன்ற அசைவாக மாற்றிக் காட்டப் படுகிறது.

லுவது ஒன்று. வாயுவில் அணுக்கள் சேர்ந்து சேர்ந்து, பிறகு அகன்று அகன்று, நேர்முகமாக (சப்த) அலைகளைப்போல் செல்லுவது மற்றொன்று (Longitudinal). நேர்முக அலைகளை ஜலத்திலும் உண்டாக்கலாம்.



ஒரு அலையின் நான்கு முக்கிய விடங்களில் நீர் அணுக்கள் அசைந்து நிற்குந் தன்மையை அம்புக் குறிகள் உணர்த்துகின்றன. விவரம் கீழே காண்க.

மேற் காட்டிய படத்தில் அலை வடிவம் இடமிருந்து வலம் செல்லுவதென்று வைத்துக் கொள்ளுவோம். a. b. c. d. e. கார்க்குகள் மிதந்து கொண்டிருக்கின்றன வென்று வைத்துக் கொள்ளுவோம். கார்க் a உயரத்திலிருந்து கீழ் நோக்கி வருந்தருணத்திலிருக்கிறது. கார்க் b அசைவற்றிருந்து வேகமாய் உயரத்தில் சென்று கொண்டிருக்கிறது. கார்க் c பள்ளத்திலிருந்து மெதுவாக மேலே எழும்பப் பார்க்கிறது. கார்க் d வேகமாகக் கீழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கார்க் e, கார்க் a யைப் போல, உயரத்திலிருந்து கீழ் நோக்கி வருந் தருணத்திலிருக்கிறது. இப்படியாகவே அடுத்துள்ள அலைகளும் ஆடிக் கொண்டிருக்கும். இப்பொழுது, ஓர் அலையில் அடுத்துள்ள இவ்வைந்து பாகங்களிலும் a யும், e யும் ஒரே தன்மையிலிருக்கின்றன. ஆனால் இன்னும் இதர பாகத்தில் இதே தன்மையானவைகளிருக்கின்றன. வெகு சமீபத்தில் பார்க்கும் போது a, b, c, d இவைகள் நிலைமை ஒன்றுக்கொன்று வித்தியாசத்துடனிருக்கின்றன. ஆனால் a யும் e யும் ஒரே தன்மையை ஒத்திருக்கின்றன. ஆகவே a க்கும், e க்கும் உள்ள நேர் தூரத்திற்கு 'அலைநீளம்' என்று

பெயர் (Wavelength). மேற்கூறிய அலையில் மிதக்கும் கார்க்குகள் மேலும் கீழுமாக எத்தனையோ தடவை அசைந்து கொண்டிருக்கும். அவ்வாறு ஒரு வினாடிக்கு அசையும் தடவையே 'அசை-வேகம்' (Frequency) என்று பெயர். வேகமாக மேலுங்கீழும் அசைந்தால் அதாவது அசை-வேகம் அதிகமாயிருந்தால் அலை-நீளம் சிறிதாயிருக்கும். ஆனால் மெதுவாக அசைந்தால்- அசை வேகம் குறைவாயிருந்தால்— அலை-நீளம் அதிகமாயிருக்கும். ஆகவே அலையின் வேகம் அதாவது ஓர் சக்தி அலை வடிவமாக ஒரு வினாடிக்கு செல்லும் 'நேர் தூரம்' (Wave velocity) அலை-நீளத்தையும், அசை-வேகத்தையும் பொருத்திருக்கிறது.

ஒரு குளத்தில் இரு கற்றுண்டுகளை வெகு சமீபமாக ஒரே சமயத்தில் போட்டால் இரு விடங்களிலும் அலைகள் உண்டாகி பரந்தோடுகின்றன. ஆனால் அப்படி இருவிடங்களிலிருந்து பரந்தோடும் அலைகள் ஒன்றுக்கொன்று தட்டு தடங்கலின்றி தனியாகப் போவது போல பரந்தோடுவதைப் பார்க்கலாம். இதனால்தான் ஆகாயத்தில் பல தொனிகள் உண்டானாலும் அவைகள் மற்றவைகளோடு சம்பந்தமில்லாமல் நமது செவியை வந்து தாக்கிப் பலவித தொனிகளை உணர்த்துகின்றன.

ஆனால் இவ்வாறு வெகு சமீபத்தில் இரு அலைகள் உண்டாகிப் பரந்தோடும் மார்க்கங்களில் ஒவ்வொரு இடத்தில் இரு உயர்ந்த அலைகள்



இரு விடங்களில் ஒரே சமயத்தில் அலைகள் தோன்றி விரிந்தோடுவதில் இரண்டும் தட்டு தடங்களின்றி போவதைக் காண்க.

$$\text{அலை வேகம்} = \text{அலை நீளம்} \times \text{அசைவேகம்}$$

$$\text{ஆகவே, அலை நீளம்} = \frac{\text{அலைவேகம்}}{\text{அசைவேகம்}}$$

சேர்ந்து வெகு உயரமாயும், இரு தாழ்ந்த அலைகள் சேர்ந்து வெகு தாழ்வாயும், ஒரு உயர்ந்த

அலையும், ஒரு தாழ்ந்த அலையும் சேர்ந்து அலையே இல்லாமலும் போவதைப் பார்க்கலாம். மேற்கூறிய முதல் இரண்டு சேர்மானங்களில் சக்தி அதிகரிக்கிறது. ஆனால் கடைசிச் சேர்மானத்தில் அதாவது தாழ்ந்த அலையும், உயர்ந்த அலையும் சேர்வதில் சக்தி குறைந்து இல்லாமல் போகிறது. இத் தன்மைக்கு 'தலையிடல்' (Interference) என்று பெயர். இத் 'தலையிடல்' தோற்றம் வெளிச்சத்தின் தன்மையை அலை வடிவம் என்று நிலை நாட்டிற்று.

உண்டாவதற்கு உபகரணம் ஒன்று அவசியம் என்றும், அவ்வுபகரணம் சக்தியை அலை வடிவாய் அனுமதிக்கும்போது சமயா சமயம் சில மாறுதல்களை அடைகின்றன வென்றும் கண்டோம்.

பூமியைச் சுற்றி சுமார் 200 மைல் உயரத்திற்கப்பால் காற்றே கிடையாது என்று திட்டமாக அறிந்திருக்கிறார்கள். அவ்வித சூன்யமான வெளியில் சூரியனிடமிருந்து வெளிச்சம் நம்மை வந்தடைகிறது. வெளிச்சத்





முதற் படம் ரசத் திராவகத்தில் அலைகள் உண்டாக்கப் பட்டு ஓடுவதைக் காட்டுகிறது.

இரண்டாம் படம் அதே ரசத் திராவகத்தில் ஒரே சமயத்தில் இரண்டு அலைகள் சமீபத்தில் உண்டாக்கப் பட்டு ஒன்றுக் கொன்று தடங்கலின்றி ஓடுவதைக் காட்டுகிறது.

இதுவரை நாம் நீர்மேலும் வாயுவிலும் உண்டாகும் இருவித அலைகளைப் பார்த்தோம். நீரின்மேல் வளைந்து செல்லும் அலையும், நீரின் உள்ளும், வாயுவிலும், திடபதார்த்தங்களிலும், அணுக்கள் குவிந்து தளர்ந்து கொடுத் துண்டாகும் நேர்முக அலையும் உண்டாவதை உணர்ந்தோம். ஆகவே இவ்விருவித அலைகள்

தின் வேகம் ஒரு வினாடிக்கு 186,500 மைல் என்று பலர் கண்டு முடிவுகட்டியிருக்கிறார்கள். அதாவது வெளிச்சம் ஒரு விடத்திலிருந்து மறு இடம் போவதற்குச் சிறிது நேரம்—அது வெகு அற்பமா யிருந்தாலும்—வேண்டியதா யிருக்கிறது. இவ்வாறு நேரம் எடுத்துக் கொள்ளும் வெளிச்சம் இரு வகையில் ஒரு இடம் விட்டு மறு



இரண்டு அலைகள் வெகு சமீபத்தில் ஒரே சமயத்தில் உண்டாக்கப் பட்டால்'அவைகள் தடங்கலின்றி ஓடுகின்றன. ஆனால் படத்தில் காண்பது போல் 'தலையிடல்' (Interference) நடப்பதை அதாவது ஒரு இடத்தில் அலை உயரம் அதிகரித்தும் ஒரு இடத்தில் அலையே யில்லாமலும் போவதைக் காண்க.

இடம் போக வேண்டும். அதாவது வெளிச்சம் அணுக்கள்போல் விட்டு விட்டு வெகு வேகமாய்ப் பாய்ந்தோட வேண்டும், அல்லது நீர்மேல் அலைகள்போல் அலை வடிவாகத் தொடர்ச்சியாக வெளிச்சத்தின் சக்தி வந்து கொண்டிருக்க வேண்டும்.

நாம் முந்திய விகிதத்தைக் கைக்கொண்டால் வெளிச்சத்திற்கு யாதொரு உபகரணமும் தேவையில்லை. ஆனால் பிந்திய அலை வடிவத்தை ஒப்புக் கொண்டால் ஏதாவது ஓர் உபகரணம் இருப்பதாகக் கொள்ள வேண்டும். தற்காலம் வெளிச்சம் அணுவடிவ மென்றும், அலை வடிவமென்றும் ஒப்புக்கொள்ளப் பல காரணங்களுண்டு. அவைகளை அடுத்த இதழில் ஆராய்வோம். ஆனால் அலை வடிவத்தையே பெரும்பாலும் ஏற்கவேண்டி யிருக்கிறது. அதனால் வெளிச்சம் 'ஈதர்' என்ற உபகரணத்தில் அலை வடிவமாக அசைந்து வருகிறது என்று சொல்ல வேண்டியதாயிற்று. இந்த 'ஈதர்' என்ற வஸ்து உலகத்தில் மூலை முடுக்குகள் யாவையும் சூழ்ந்து நிற்க வேண்டும். இதன் உண்மையான தன்மை இன்னதென்று கூறுவது அசாத்தியமா யிருக்கிறது. பூமி சூரியனைச் சுற்றி வரும்போது (சுமார் வினாடிக்கு 20 மைல்) 'ஈதர்' என்ற வஸ்து சூழ்ந்திருக்கும்போது சூரியனிடமிருந்து வரும் வெளிச்சத்தின் வேகத்தை பூமியின் குறுக்காக அளவிடும்போது சிறிது மாறுதல் ஏற்பட வேண்டும். வெளிச்சத்தின் வேகத்தில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. ஆகவே சில சாஸ்திர

நிபுணர்கள் 'ஈதர்' என்ற வஸ்து இல்லை என்று கூற வந்தனர்.

ஆனால் மின்சார சக்தியை ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்கு அனுப்பும் வகையில் 'ஈதர்' என்றதோர் உபகரணம் உண்டு என்று கொள்ள வேண்டியதா யிருக்கிறது. சாதாரணமாக மின்சாரச் சுடரை ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்குப் பாயச் செய்தால் அது அலை வடிவமாகத் தாவுகிறது. மேலும் மின்சார சக்தியை ஒரு கம்பியில் விட்டு விட்டு உண்டாக்கினால் அச் சக்தியை வெகு தூரத்தில் கிரகிக்க முடிகிறது. இதனையே கம்பியில்லாத் தந்தி யென்கிறோம். இவ்வாறு மின்சார சக்தி ஒரு இடத்திலிருந்து மறு இடத்திற்குப் போய்ச் சேர வெளிச்சத்தைப்போல வெகு அற்ப நேரமே பிடிக்கிறது. அனால் மின்சார சக்தி அணுக்கள் வடிவமாய்ச் செல்லுகிற தென்று ஒப்புக் கொள்ள முடியாது. ஆகவே அது அலை வடிவாகவே செல்லுகிற தென்று முடிவுகட்ட வேண்டும். அப்படியானால் ஒரு உபகரணம் வேண்டுவதவசியம். இதனால் 'ஈதர்' என்றதோர் வஸ்து உளது என்று நாம் ஒப்புக் கொள்ள வேண்டி யிருக்கிறது.

குறிப்பு:—வீடுகளில் வைத்தானந்திக்கப்படும் ஆகாய வசனிப் பெட்டியைப் பார்த்து 'இது 16.78 மீட்டரில் பாடுகிறது' என்று சொல்லுவதுண்டு. அதாவதுமின்சாரம் 'ஈதரி'ல் அலை மயமாய் வந்து ஆகாய வசனிப் பெட்டியை அடையும் போது அதின் அலை—நீளம் 16.78 மீட்டர் எனப்படும். மின்சார அலையைப் பலவித அலை—நீளத்துடன் பல விடங்களிலிருந்து அனுப்புகிறார்கள். மீட்டர் என்பது பிரான்சு தேசத்து நீள அளவு. ஒரு மீட்டர் என்பது $3\frac{1}{3}$ அடியாகும்.

இந்தியாவிலிருந்து அரிசி எவ்வளவு ஏற்றுமதியாகிறது ?

வருஷம்		ஏற்றுமதி டன்
1913—14	....	2,419,850
1918—19	....	2,017,900
1930—31	....	2,253,784
1931—32	....	2,301,415
1932—33	....	1,828,196
1933—34	....	1,732,539
1934—35	....	1,592,537

நமது நிருபர்களுடன்

ஐராவதி நதி

அன்புள்ள ஐயா!

பர்மாவைச் செழிப்பிக்கும் ஐராவதி நதி எங்கிருந்து உற்பத்தியாகி எவ் வழியாகப்பர்மாவுக்கு வருகிறது? பர்மாவில் நுழையு முன்னரே நதி அகலமாக இருக்கிறதா? என்ற விபரங்களை 'ஜோதி'யின் மூலம் அறிவிக்கக்கோருகிறேன்.

வெ. சொக்கலிங்கம்

ஐராவதியின் உற்பத்தி ஸ்தானத்தை இன்னும் யாரும் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. அஸ்ஸாமின் வட கிழக்குப் பாகத்தில் இஃது உற்பத்தியாகிற தென்று அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். மலி—கா, மை—கா என்ற இரண்டு சிறிய உபநதிகள் ஒன்று சேர்ந்தபிறகே ஐராவதி என்ற பெயரை அடைகிறது. இதன் நீளம் **1,500** மைல்.

—ஆசிரியர்

ஐயா!

இந்தியாவில் சமஸ்தானங்கள் 562 இருக்கின்றன. அதில் 104 சமஸ்தானங்களுக்கே சமஷ்டி சட்ட சபையில் ஸ்தானங்கள் கொடுக்கப் பெற்றிருக்கின்றன. மற்ற 458 சமஸ்தானங்களுக்கு ஸ்தானம் இருக்கிறது. ஸ்தானமல்லாத சமஸ்தானங்கள் சமஷ்டி சட்ட சபையில் கலந்து கொள்ளவில்லையோ? சமஷ்டிக்கு பூரா சமஸ்தானங்களின் ஆதரவும் இருக்கிறதா? (இவ்விவரம் சமஷ்டி யென்னும் புஸ்தகத்தில் காணவில்லையாகையால்) விபரம் விளக்கமாக 'ஜோதி'யில், எதிர்பார்க்கிறேன்.

வரதன்.

சிறிய சமஸ்தானங்கள்பலவற்றிற்கு, அவற்றின் விஸ்தீரணம், ஜனத்தொகை முதலியவற்றை உத்தேசித்து தனித்தனி ஸ்தானங்கள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இது சம்பந்தமான விவரங்களை ஸ்ரீ கே. வி. ராமசுப்பிரமண்யம், பி. ஏ. பி. எல். எழுதிய 'இந்திய அரசியல் சட்டம்' என்ற நூலில் பார்க்க.

—ஆசிரியர்

போப்பாண்டவர்

அன்புள்ள ஐயா!

ஐரோப்பாவில் போப் ஆண்டவர் மத, அரசியல் மற்றும் முக்கிய பிரச்னைகளில் தலையிட்டு கொள்கிறார். அவருடைய வார்த்தைக்கு அதிக செல்வாக்கும் மதிப்பும் கொடுக்கப்படுகிறதே. மதத்தைக்காப்பாற்றுவதற்கும் பிரபல்ய மாக்குவதற்கும் இவரின் அபிப்பிராயம் அநுசரிக்கப் படுகிறதா அல்லது பொதுவாக அனைத்திற்குமே இவர்கள் நோக்கம் வேண்டப் படுகிறதா? ரோம கத்தோலிக்க, புரோடஸ்டாண்ட் முதலிய எல்லாப் பிரிவிற்கும், கிறிஸ்தவநாடுஎல்லாவற்றிற்குமே ஒருவர்தான் தலைமையா, தனித் தனி

யாக இருக்கிறார்களா? இவர்களின் காலியாகும் ஸ்தானத்திற்கு சந்ததி தொடர்பாக கொண்டுவரப் படுகிறதா? அல்லது பொதுஜன அபிப்பிராயத்தின் வாயிலாகவா?

மேல்கண்ட இரண்டு சங்கைகளையும் தவிர்க்க வேண்டுகிறேன்.

முறைசை சேகர்.

போதுவாக எந்த நாட்டிலுமே மதாசாரியார்களுக்கு ஒருவித மதிப்பு இருக்கத்தானே செய்கிறது. அந்த முறையில்தான் போப்பாண்டவருடைய சொல்லுக்கும் செயலுக்கும் மதிப்பு இருக்கிறது. ரோமாபுரியிலுள்ள போப்பரசர், கிறிஸ்தவர்களில் கத்தோலிக்கர்களுடைய குரு. ஆனால், மற்றப் பிரிவினரும் இவரிடம் மரியாதை காட்டுகிறார்கள். சந்ததி தொடர்பாகக் கொண்டு போப்பரசர்கள் தெரிந்தெடுக்கப் படுவதில்லை. முக்கியமான கத்தோலிக்கப் பாதிரிமார்கள் சேர்ந்து ஒவ்வொரு போப்பரசரையும் தெரிந்தெடுப்பார்கள்.

—ஆசிரியர்

பிரெஞ்சு இந்தியா

அன்புமிக்க ஐயா!

பிரஞ்சு இந்தியா சுதந்திர இந்தியாவில் சேருமா? அல்லது, தனித்தே நிற்குமா?

எஸ். ராமன்.

இப்பொழுதுள்ளபடிதான் இருக்கும்.

—ஆசிரியர்.

உலக வல்லரசுகளின் படை பலம்

பெயர்	கப்பற்படை டன்	ஆகாய விமானங்கள்	ராணுவம்
பிரிட்டன்	1,904,000	2800—3500	217,000
அமெரிக்கா	1,600,000	2100—2800	178,000
ஜப்பான்	1,120,000	2000—2800	1,250,000
பிரான்ஸ	785,000	2200—2800	708,000
ஜெர்மனி	465,000	3000—4000	1,000,000
இத்தலி	670,000	2800—3500	300,000
ருஷ்யா	315,000	3000—4200	1,300,000

ஓங்கிக் கொட்டு பேரிகை!

—மு. தங்கமணிப் பிள்ளை

உறக்கங் கொண்ட தமிழர் தழராம்
உறக்கம்விட் டெழுந்ததே
சிறக்கவினி உழைப்ப ரென்று
ஓங்கிக் கொட்டு பேரிகை! 1.

தண்டு தீயைக் கக்கி யெம்மைக்
தறுகி வந்த போதினும்
உண்டு வீரம் எதிர்க்க வென்று
ஓங்கிக் கொட்டு பேரிகை! 2.

பிறந்த நாட்டின் உரிமை தன்னைப்
பிய்ப்பர் யாவ ராயினும்
இறந் தொழியும் வரை யெதிர்ப்போம்
என்று கொட்டு பேரிகை! 3.

பண்டை வீறுங் கலையு மெழிலும்
பாழினியு மாகிட
கண்கள் கொண்டு பார்த்திரோ வென்
றேங்கிக் கொட்டு பேரிகை! 4.

எங்கள் நாடு எங்கள் வாழ்வு
என்ப தோர்ந்து கொண்டோம்
பங்க மினியும் நாங்கள் படோ மென்
றேங்கிக் கொட்டு பேரிகை! 5.

கடல் கடந்தும் மலை கடந்தும்
காணும் கலைகள் திரட்டியே
ஈடிலாத தமிழ் சமைப்போம்
என்று கொட்டு பேரிகை! 6.

வட்ட மிட்டுத் திரியுங் கப்பல்
வகையும் நாங்க ளுணருவோம்
கட் டெடுத்து இனியு மேனே
என்று கொட்டு பேரிகை! 7.

காந்தி வந்தான் கட்டவிழ்த் தான்
என்று கழறிக் கொட்டு
சாந்தனையு மவன் வழியில்
நிற்க வென்று கொட்டு! 8.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
என்னும் நீதி ஓங்க
நன்று மேலே நின்று பூமி
நலுங்கக் கொட்டு பேரிகை! 9.

கொட்டு ஓங்கி கொட்டு ஓங்கி
கொட்டு ஓங்கிப் பேரிகை!
கொட்டு கொட்டு கொட்டு கொட்டு
ஓங்கிக் கொட்டு பேரிகை! 10.

உலகெலாம் வாழ்க!

சுதந்திர மொழிகள்

எந்த அரசாங்கம் குடி ஜனங்களைத் திருப்தி செய்து, அவர்களுடைய நலத்திற்காக அரசாட்சி செய்கிறதோ அந்த அரசாங்கம் செழுமை யடையும். இவ்வாறு செழுமை பெற்ற அரசாங்கத்திற்குக் கடவுள்தான் காவலாளியாக விருக்கின்றார்.

ஃ ஃ ஃ

எவன் அல்லது எவள் தன் தேசத்தின் விடுதலைக்குத் திரிகரண சுத்தியாக உழைக்கின்றார்களோ அவன் அல்லது அவளே மோக்ஷ மார்க்கத்துக்குரியர்.

ஃ ஃ ஃ

மனிதன் ஜென்மம் எடுத்தது எதற்காக? தேச சேவைக்காகவே. தேச சேவையைப் புறக்கணித்து ஒருவன் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதித்தாலும் அந்த சம்பாத்தியம் வியர்த்தமே யாகும். ஒரு தேச ஊழியன் போற்றப்பட்டு ஞாபகத்தில் வைக்கப்படுவது போல், பணக்காரன் போற்றப்படவு மாட்டான்; ஞாபகத்தில் வைக்கவும் பட மாட்டான்.

ஃ ஃ ஃ

மனிதனே! எந்த நிமிஷத்தில் உன்னை உன் தேசம் அழைத்தாலும், அப்போது அதற்கு சேவை செய்யத்தயாராயிரு. நீ தேச சேவை செய்யும் காலத்தில், ஏதேனும் ஆபத்துக்கள் நேரிட்டால், அதைப் புறக்கணித்து விடு. லட்சியம் செய்யாதே. கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்கத் தயாராயிரு. ஆனால், வேண்டுமென்றே யாதொரு கஷ்ட நஷ்டத்தையும் விரும்பாதே.

ஃ ஃ ஃ

உலகத்தில் யார் சுக புருஷன்? பணக்காரனா? தேச ஊழியனா? என்னைக் கேட்டால் தேச ஊழியம் செய்பவனே. காரணம் தேச சேவகம் செய்பவன் மணத்தையும் பொருளையும் பொருட்படுத்த மாட்டான்.

ஃ ஃ ஃ

ஊழியனே! உன் எதிராளிகளைக் கண்டு நடுங்கிவிடாதே. அவனுடைய எதிர்ப்பாலும் போட்டியாலும் உன் காரிய வெற்றிக்கு இடமுண்டாகும். அவன் போகும் நீக்குப் போக்குகளை அறிந்து கொண்டு மீண்டும் நீ பலமாகப் போராடுவதற்கு இட முண்டாகும்.

ஃ ஃ ஃ

ஜன நாயக அரசாட்சியை யார் நடத்துவது? வறுமை வாய்ப்பட்டவர்களும் இழிகுண முடையவர்களும்

அன்றாட உலகம்



1939

பிப்ரவரி

26 ராஜகோட்டை சமஸ்தானத் தகராறு சம்பந்தமாக, மகாத்மா காந்தி ராஜகோட்டைக்குச் செல்வதென்று இன்று முடிவு செய்தார்.

27 லெனின் மனைவி மாடேஜ்டா க்ருப்ஸ்காயா தமது 70வது வயதில் மாஸ்கோ நகரத்தில் இறந்து விட்டார்.

ஸ்பெயினில் பிராங்கோ அரசாங்கத்தை பிரான்ஸும் பிரிட்டனும் இன்று உத்தியோக முறையில் அங்கீகரித்து விட்டன.

போலந்தின் தலை நகரமான வார்ஸா நகரத்தில் போலிஷ் மாணுக்கர்களுக்கும்

பெரிய பதவிகள் பெற்று அரசாட்சியை நடத்துவதா? அல்ல. அரசனுக்கும் குடிகளுக்கும் இடையேயிருந்து, குடிகளுடைய விருப்பு வெறுப்புகளைச் சுய நலம் கருதாது தெரிவிக்கும் பிறவியிலேயே பரோபகார முள்ளவர்களாலும், ஸத்குணசீலர்களாலும், ஜன நாயக ஆட்சி முறை நீதி தவருது நடத்தப்படவேண்டும்.

ஃ ஃ ஃ

அரசாங்கத்தின் கடமை யென்ன? குடிகளை சன்மார்க்க முள்ள, பயிற்சியுள்ள, ஆண்மைத் தனமுள்ளவர்களாகச் செய்வதுதான். குடிகளுக்கு நல்ல படிப்புக் கொடுக்காமல், பிறகு அவர்கள் குற்றம் செய்தார்களென்று தண்டித்தால் அது யாருடைய குற்றம்? அரசாங்கத்தினுடையதல்லவா?

ஃ ஃ ஃ

மனிதர்களே! எவ்வளவு காலம் அடிமை வாழ்க்கையில் வாழ விரும்புகிறீர்கள்? எத்தனை தலைமுறை? மூன்று தலை முறைகளாகி விட்டால் உங்கள் சமூகம் முன்னேற்றம் பெற்று சுதந்தர வாழ்வை அடைவது தெய்விக புருஷர்களாலேயே முடியும்.

ஃ ஃ ஃ

எந்த அரசாங்கத்தில் குடிகள் சமத்துவமான நிலையும் சமத்துவமான உரிமைகளையும் பாத்தியங்களையும் அனுபவிக்கிருர்களோ, எந்த அரசாங்கத்தில் குடிகள் சட்டத்தின் முன்பு சமத்துவமாக விசாரிக்கப்படுகிருர்களோ, அந்த அரசாங்கமொன்றே ஜனங்களுடைய ஆதரவைப்பெற்று நிலைத்திருக்கும்.

—(ச. மு.)

ஜெர்மானிய மாணுக்கர்களுக்கும் இன்று கை கலந்த சண்டை நடைபெற்றது.

சீன ஜப்பானிய யுத்தத்தில் இதுவரை 1034 ஜப்பானிய ஆகாய விமானங்கள் சேதமடைந்திருக்கின்றன.

28 இந்தியா சட்ட சபையில் இன்று இந்தியா அரசாங்கத்து வரவு செலவுத் திட்டம் ஆஜர்படுத்தப்பட்டது. சென்ற வருஷத்தில் சுங்க வரி, எதிர் பார்த்ததைவிட மிகக் குறைவாகக் கிடைத்திருக்கிறது.

ஸ்பெயின் குடியரசுத் தலைவர் அஜானு இன்று ராஜீநாமா செய்து விட்டார்.

பிரிட்டிஷ் மந்திரிச் சபை, இன்று காமன்ஸ் சபையில் கப்பற் படை வரவு செலவுத் திட்டத்தை ஆஜர்படுத்தியது.

1939

மார்ச்

1 பாலஸ்தீனத்தில் ஜனப்பிரதிநிதி சபை கூட்டி அதன் மூலமாக ஒரு அரசியல் திட்டம் தயாரிக்கப்பட வேண்டுமென்று அராபியப் பிரதிநிதிகள் கூறுகிறார்கள்.

இன்று இரங்கூனில் ஹிந்து முஸ்லீம் கலவரம். போலீஸார் மூன்று முறை துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர்.

ஐக்கிய மாகாணத்தில் ஜ...ஜ...னு என்ற கிராமத்தில் 'கிஸான்தினம்' கொண்டாடப்பட்டது. 250 பேர் கைது செய்யப்பட்டனர்.

2 ரோமாபுரியில் கார்டினல் பாஸெலி, புதிய போப்பரசராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

தன்பொருட்டு ஜயப்பூர் சமஸ்தான அதிகாரிகள் மாதம் ஒன்றுக்கு 700 ரூபாய் செலவழிப்பது அடாதென்றும், தன்னை ஒரு சாதாரணக்கைதியாகக் கருதவேண்டுமென்றும் சேத் யமுனுலால் பஜாஜ் ஜெயப்பூர் தர்பாருக்கு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

3 ராஜ கோட்டை தகராறு சம்பந்தமாக எவ்வித சமரஸமும் ஏற்படாமையினால், மகாத்மா காந்தி இன்று உண்ணாவிரதமிருக்கத் தொடங்கி யிருக்கிறார். இதனால் நாடெங்கணும் பர பரப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஹாங்காங் தீவில் ஜப்பானியர் ஆகாய விமானக் குண்டுகள் போட்டதால், ஜப்பானிய அரசாங்கம் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, 1,250 பவுன் நஷ்ட ஈடாகவும் கொடுத்திருக்கின்றது.

4 மகாத்மா காந்தி, நியாயமற்ற கோரிக்கைகளைக் கேட்கிறாரென்றும், அந்நியர்களுடைய தலையீட்டின் பேரில் தாம் ஒன்றுஞ் செய்யமுடியாதென்றும், ராஜகோட்டை சமஸ்தானாதிபதி ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். மகாத்மா காந்தி இதற்கு இரண்டாவது பதிலொன்று அளித்திருக்கிறார்.

காந்தியடிகளின் இரண்டாவது நாள் உபவாசம், எவ்விதக் கவலையுமின்றிக் கழிந்தது.

5 காங்கிரஸ் தலைவரின் விருப்பத்திற்கிணங்க, இன்று இந்தியா வெங்கணும் அகில இந்திய ராஜகோட்டை தினம் கொண்டாடப்பட்டது.

காந்தியடிகளின் மூன்றாவது நாள் உபவாசத்தின் போது வாய்க் குமட்டல், ஒருவித சக்தியின்மை முதலியன ஏற்பட்டன.

6 மகாத்மா காந்தியின் உபவாசத்தை முன்னிட்டு இன்று ஸ்ரீமதிகள் கஸ்தூரிபாய் காந்தியும், மிருதுளா பென்னும் சிறையினின்று விடுதலை செய்யப்பட்டார்கள்.

ராஜகோட்டை ரெஸிடெண்ட், இன்று காந்தியடிகளைக் கண்டு பேசினார்.

7 வங்காளத்தின் ஆக்டிங் கவர்னராக நியமிக்கப்பட்ட ஸர் ராபர்ட்ரீட், வயிற்றுக் கோளாறு சம்பந்தமாக ஆபரேஷன் செய்யப்பட்டார்.

1913—14ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட மௌல்வி உபயதுல்லா சிந்தி என்பார், இன்று கராச்சிக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். தாம் எப்பொழுதும்போல் ஒரு காங்கிரஸ் வாதியாக இருக்கப் போவதாகக் கூறினார்.

வெளி நாடுகளில் சுற்றித் திரியும் ராஜா மஹேந்திர பிரதாப் என்பார், மீண்டும் இந்தியாவுக்கு அநுமதிக்கப் படுவதைப் பற்றி இந்தியா அரசாங்கத்தார் யோசித்துக்கொண்டிருப்பதாக, இந்தியா சட்ட சபையில் கூறப்பட்டது.

8 ராஜப்பிரதிநிதியின் தலையீட்டின் பேரில், காந்தியடிகள் இன்று உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொண்டார்.

இன்று அ. இ. கா. கமிட்டி கூட்டம் திரிபுரியில் கூடியது. ராஜீநாமா செய்த காரியக் கமிட்டி அங்கத்தினர்களிடத்தில் காங்கிரஸுக்கு நம்பிக்கை இருப்பதாக பண்டித கோவிந்த வல்லபபந்த் கொண்டு வந்த தீர்மானத்தைப் பற்றி வாதம் நடைபெற்றது.

திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் கமிட்டி, மார்ச் மாதம் 25ந் தேதி, சமஸ்தானத்தில் சத்தியாக்கிரகம் தொடங்க வேண்டுமென்று இன்று தீர்மானித்தது.

ஜெர்மன் பொருளாதார நிபுணரான டாக்டர் ஷாஷெட் இந்தியாவுக்கு விஜயஞ் செய்வாரென்று சொல்லப்படுகிறது.

9 அஸ்ஸாம் சட்டசபையில் இன்று வரவு செலவுத் திட்டம் ஆஜர்படுத்தப் பெற்றது.

இன்று எகிப்தியப் பிரதிநிதிகள் பம்பாய் வந்து சேர்ந்தார்கள்.

திரிபுரி காங்கிரஸ் நகரத்தில் பண்டித பந்தினுடைய தீர்மானத்தின்பேரில் வாதப் பிரதிவாதங்கள் பலமாக நடைபெறுகின்றன.

மகாத்மா காந்தி, உபவாசம் முடிந்த பிறகு, இன்றுமுதல் பழையமாதிரி வேலை செய்யத் தொடங்கி விட்டார்.

சுவாமி சகஜானந்தருடைய தலைமையில் இன்று சுமார் பதினாயிரம் கிஸான்கள், திரிபுரியை நோக்கி ஊர்வலமாக வந்து கொண்டிருக்கிறார்கள்.

வியாபாரிகளின் சரக்கு விற்பனையை யொட்டி புதிய வரியொன்றை சென்னை அரசாங்கத்தார் விதித்திருக்கிறார்கள். மாதம் பதினாயிரம் ரூபாய்க்கு இருபதினாயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி வருஷத்திற்கு 75 ரூபாய் கட்ட வேண்டுமென்றும், இருபதினாயிரம் ரூபாய்க்கு மேல் நாற்பதினாயிரம் ரூபாய் வரை வியாபாரம் நடைபெற்றால் வருஷம் 150 ரூபாய் கட்ட வேண்டுமென்றும், நாற்பதினாயிரம் ரூபாய்க்கு மேல் நூற்றுக்கு ஒன்றரை ரூபாய் விகிதம் வரி விதிக்கப்படுமென்றும் இந்தச் சட்டம் கூறுகிறது.

10 திரிபுரி காங்கிரஸில் பண்டிதபந்தின் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதற்காக காங்கிரஸ் மாகாணச் சட்ட சபைகளின் 'கொரடாக்கள்' ஓட்டுச் சேகரிப்பதாக, 'ட்ரிப்யூன்' பத்திரிகை கூறுகிறது.

11 இன்றைய காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டி கூட்டத்தில், தேசியக் கோரிக்கையைப் பற்றிய தீர்மானத்தைக் குறித்து பலத்த வாதம் நடைபெற்றது.

இன்று திரிபுரியில் 52வது காங்கிரஸ் கூடியது. தலைவரான சுபாஷ் சந்திர போஸ், தேக அசௌகரியங் காரணமாக ஆஜராக முடியாமையால், மௌலானா அபுல்கலாம் அஜாத் தலைமை வகித்தார்.

ஸ்லோவேகியா மாகாணம் தனி மாகாணமாகப் பிரித்து, அதற்கு புதிய மந்திரிச் சபை இன்று அமைக்கப்பட்டது.

12 இன்றைய காங்கிரஸில், ராஜீநாமா செய்த காரியக் கமிட்டி அங்கத்தினர்களிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பதாக பண்டிதபந்த் கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இரவு 11-30 மணிக்கு திரிபுரி காங்கிரஸ் முடிவு பெற்றது. ஸ்ரீமதி சரோஜினி தேவி, அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறினார்.

இன்று ரோமாபுரியில் புதிய போப்பரசர் எல்லா ஆடம்பரங்களுடன் முடிசூட்டப் பெற்றார்.

13 ராஜப் பிரதிநிதியைச் சந்தித்துப் பேச, மகாத்மா காந்தி இன்று ராஜகோட்டையினின்று புறப்பட்டுச் சென்றார்.

இன்று டெல்லியில் சுதேச மன்னர் சபையின் கூட்டம் கூடியது. ராஜப்பிரதிநிதி இந்தக் கூட்டத்தில் பேசுகையில், மன்னர்கள் தங்கள் பிரஜைகளின் நன்மையை அதிகமாக நாட வேண்டுமென்று குறிப்பிட்டார்.

காங்கிரஸுக்குள்ளேயே பிணக்குகள் பல இருக்கும் பொழுது, அது சமஸ்தான விஷயங்களில் எப்படித் தலையிடலாமென்று ஸர் சி. பி. ராமசாமி ஐயர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

ஜெர்மனிக்கும் ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டு வருவதால், ஜெர்மனி, ஜெக்கோ ஸ்லோவேகியாவை விரைவில் கைப்பற்றிக்கொள்ளும் என்று வதந்திகள் பலமாக உலவத் தொடங்கின.

திரு சுபாஷ் சந்திர போஸுக்கு இன்று ஜுரம் சிறிது மட்டுப் பட்டிருக்கிறது.

14 ஜெக்கோ ஸ்லோவேகியாவைச் சேர்ந்திருந்த ஸ்லோவேகியாவும், கார்ப்பேதிய உக்ரேயினும் சுதந்திரக் கொடி தூக்கி விட்டன.

காலஞ்சென்ற வி. ஜே. படேல் எழுதி வைத்துப் போன உயில் சம்பந்தமாக ஸ்ரீ போஸுக்கும், படேலின் சகோதரர்களுக்கும் வழக்கு நடைபெற்றதல்லவா? அதில், மேற்படி உயில் சம்பந்தமான சொத்துக்கள் தரும சொத்துக்களேயென்றும், ஸ்ரீ போஸுக்குக் கொடுக்கப்பெற்ற நன்கொடையாகாதென்றும் பம்பாய் ஹைகோர்ட்டில் இன்று தீர்ப்புக் கூறப்பட்டது.

இன்று மகாத்மா காந்தியை, மோர்வி சமஸ்தான மன்னர் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

மௌலானா அஜாத், வாழைப்பழத் தோல் சறுக்கிக் காய மடைந்தார்.

மைசூர் சட்டசபையைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தினர்கள் ராஜீநாமா செய்து விட்டார்கள்.

15 நாகபுரி எம்ப்ரெஸ் மில்லில் வேலை செய்து கொண்டிருந்த ஐயாயிரம் தொழிலாளர்கள் இன்று மத்திய மாகாண சட்டசபையின் கட்டிடத்தை நோக்கி வந்தனர். பிரதம மந்திரி முதலியோர் இவர்களைச் சந்தித்து சமாதானம் கூறி அனுப்பினார்கள்.

இன்று, ஜெக்கோ ஸ்லோவேகியா, ஜெர்மனி வசமாகியது. ஹிட்லர், ஆடம்பரமாக ப்ரேக் நகரத்தில் விஜயஞ் செய்தார். ஸ்லோவேகியா மாகாணம் ஹிட்லருடைய மேற் பார்வையில் இருக்கும்.

இன்று மகாத்மா காந்தியும் லார்ட் லின்லித் கோவும் சந்தித்துப் பேசினார்கள்.

16 எகிப்து வாப்து கட்சியின் காங்கிரஸுக்கு, பண்டித நேருவை, மேற்படி கட்சித் தலைவரான நஹாஸ் பாஷா அழைத்திருக்கிறார்.

இன்று ராஜப்பிரதிநிதியும், லார்ட் லின்லித்கோவும் இரண்டாவது முறை சந்தித்துப் பேசினார்கள்.

ஜெக்கோ ஸ்லோவேகியாவின் உட்பிரிவுகளான பொஹிமியா, மொரேவியா ஆகிய இரண்டு மாகாணங்களும் ஜெர்மனியுடன் சேர்ந்து விட்டதாக இன்று ஹிட்லர் ஓர் அறிக்கை பிறப்பித் திருக்கிறார்.

பல்கேரியா நாட்டுப் பிரதம மந்திரி இன்று, துருக்கியக் குடியரசுத் தலைவரான இனோனுவை சந்தித்துப் பேசினார்.

17 ஹிட்லர் இன்று வியன்னாவுக்கு விஜயஞ் செய்தார்.

ஜெக்கோ ஸ்லோவேகியாவுக்கு ஒரு தொகை கடன் கொடுப்பதாகப் பிரிட்டன் வாக்குக் கொடுத்திருந்தது. மேற்படி நாடு ஜெர்மனியின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பிறகு, இந்தத் தொகை கொடுபடக் கூடாதென்று, பிரிட்டன் தனது அரசாங்க பாங்கிக்கு உத்தரவிட்டிருக்கிறது.

ஜப்பானியர், ருஷ்ய எல்லைப் புறத்தில் படை திரட்டுவதாகச்சொல்லப்படுகிறது.

ஜெக்கோ ஸ்லோவேகியா ஜெர்மனி வசமான பிறகு, ப்ரேக் நகரத்தில் மட்டும் இதுவரை 7000 பேருக்கு மேல் கைது செய்யப் பட்டிருக்கின்றனர்.

இன்று டெலிபோன் மூலம் ஹிட்லரும் முஸோலினியும் கால் மணி நேரம் பேசியதாகத் தெரிகிறது

18 பர்மிங்ஹாம் நகரத்தில் ஸ்ரீ சேம்பர்லேன் பேசுகிறபோது, ம்யூனிக் ஒப்பந்தத்திற்கு விரோதமாக ஹிட்லர் நடந்து கொள்வாரென்று தாம் கருதவில்லையென்றும், ஆயினும் தமக்குச் சமாதானத்தில் பூரண நம்பிக்கை உண்டென்றும் கூறினார்.

ம்யூனிக் ஒப்பந்தத்திற்கு விரோதமாக, ஹிட்லர் ஜெக்கோ ஸ்லோவேகியாவைச் சேர்த்துக் கொண்டதைப் பற்றி பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரெஞ்சு அரசாங்கமும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தன.

சர்வதேச நிலைமையைப் பற்றி ஆலோசிக்க இன்று பிரிட்டிஷ் மந்திரிச் சபை கூடியது.

ருமேனியா மீது ஜெர்மனி படையெடுக்குமானால், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் தனக்கு உதவி செய்ய வேண்டுமென்று, ருமேனிய அரசர் மேற்படி நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

ஆங்கிலோ—பிரெஞ்சு கண்டனத்தை ஜெர்மனி சிறிதுகூடப் பொருட்படுத்தவில்லையென்று ஹிட்லர் கூறினதாகத் தெரிகிறது.

19 அமெரிக்காவில் தற்காலிகமாக ஜெக்கோஸ்லோவேகிய அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க டாக்டர் பெனேஷ் முயற்சி செய்து கொண்டிருக்கிறார்.

ஜெர்மனியின் நாடு பிடிக்கும் முயற்சியை எதிர்க்கும் பொருட்டு தென்னாப்பிரிக்கா யூனியன் அரசாங்கத்தார் படை திரட்டி வருகின்றனர்.

ஜெர்மனியின் சமீப கால நடவடிக்கைகளைப் பற்றி ஆலோசிக்கும் பொருட்டு, ருஷ்யா, ருமேனியா, போலந்து, யூகோஸ்லாவியா, துருக்கி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் பிரிட்டன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று இன்றைய பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியதாகச் சொல்லப்படுகிறது.

இந்தியா அரசாங்கத்தின் பொக்கிஷ அங்கத்தினரான ஸர் ஜேம்ஸ் க்ரிக் இன்று காந்தியடிகளைச் சந்தித்துப் பேசினார்.

ஜெக்கோ ஸ்லோவேகியாவை, ஜெர்மனி, தன்னோடு சேர்த்துக் கொண்டதை ருஷ்யா சிறிதும் அங்கீகரிக்க முடியாதென்று விட்விநோப், ஜெர்மனிக்குத் தெரிவித்துள்ளார்.

20 பாலஸ்தீன் சம்பந்தமாகப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வகுத்துள்ள திட்டங்களைக் கண்டிப்பதற் கறிகுறியாக, பாலஸ்தீனத்திலுள்ள யூதர்கள், இன்றைய தினத்திலிருந்து மூன்று நாட்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனர்.

ஜெர்மனியின் ஆக்ரமிப்பைப் பற்றி இங்கிலாந்தில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. இது காரணமாக எல்லாக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து, ஜெர்மனியை எதிர்க்க வேண்டுமென்ற எண்ணம் வலுத்து வருகிறது.

ஐரோப்பிய யுத்தம் ஒன்று ஏற்படுமானால், ஹங்கேரி, ஜெர்மனியுடன் சேருமென்று ஓர் அறிக்கை கூறுகிறது.

21 ஸ்பெயினை தளபதி பிராங்கோ பூரணமாக வெற்றி கொள்ள, இத்தாலியத் துருப்புகள் உதவி செய்யுமென்று, இத்தாலியப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

இன்று பிரெஞ்சுக் குடியரசுத் தலைவரும் அவருடைய மனைவியும் லண்டனுக்கு உத்தியோக நோரணையில் விஜயஞ் செய்தார்கள்.

இந்தியாவுக்கு இனி எவ்விதமான புதிய சுய ஆட்சித் திட்டமும் கொடுப்பதாக உத்தேசமில்லையென்று காமன்ஸ் சபையில் ஸர் ஜான் சைமன் கூறினார்.

பம்பாய் அரசாங்கத்தார் சில பத்திரிகைகளின் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றனர் என்பதைக் கண்டிப்பதற்காக திரு சாத்தே என்பவர் பதினைந்து நாள் உண்ணாவிரதம் இருக்கத் தீர்மானித்திருக்கிறார்.

மெமல் பிரதேசத்தை, ஜெர்மனியுடன் சேர்த்துக் கொள்ளப்போவதாகப் பலத்த வதந்தி உலவுகிறது.

அபேதவாதக் கட்சித் தலைவரான திரு ஜெயப் பிரகாச நாராயணர், மஹாத்மா காந்தியை இன்று கண்டு பேசினார்.

அண்ணாமலை சர்வ கலாசாலையில், 50 மாணுக்கர்கள் சர்வ கலாசாலையி னின்று விலக்கப்பட்டிருந்தார்கள். இவர்களில் 45 பேர் திருப்பி எடுத்துக் கொள்ளப் படுவார்கள் என்று இப்பொழுது அறிவிக்கப் படுகிறது.

நாஜி ஆக்ரமிப்பைக் கண்டித்து காண்டர்பரி ஆர்ச்பிஷப் ஒரு பிரசங்கம் செய்தார்.

22 இன்று மெமெல் பிரதேசத்தை ஹிட்லர் ஜெர்மனியுடன் சேர்த்துக் கொண்டார்.

பிரெஞ்சுக் குடியரசுத் தலைவருக்கு இன்று பிரிட்டிஷ் மன்னர் ஒரு விருந்தளித்தார்.

சென்னை மாகாணக் கவர்னராக லார்ட் எர்ஸ்கைனுக்குப் பதில் காப்டன் ஆர்தர் ஹோப் என்பவர் நியமிக்கப்பட் டிருக்கிறார்.

சிரியா தேசத்திலே அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருந்த ஜெருசலேம் கிராண்ட் மப்டி இப்பொழுது ஹெட்ஜா ஸுக்குச் சென்றிருப்பதாகத் தெரிகிறது.

23 ஜெர்மனியும் லிதுானியாவும் ஒன்றுக் கொன்று போரிட்டுக் கொள்வதில்லை யென்று ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டன.

ஜெர்மனியும் ருமேனியாவும் ஒரு வியாபார ஒப்பந்தம் செய்து கொண்டன.

ஜெர்மனி, இனியும் நாடு பிடிக்கும் நோக்கத்துடனிருந்தால் அதனைப் பிரிட்டன் சகித்துக் கொண்டிருக்க முடியாதென்று ஸ்ரீ சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் கூறினார்.

இன்று மகாத்மா காந்தி டெல்லியிலிருந்து புறப்பட்டுச் சென்றார்.

லண்டனில் இன்று வெடி குண்டுகள் பல இடங்களில் வெடித்தன. புலன் தெரியவில்லை.

மாட்ரிட் நகரம், விரைவில் பிராங்கே கட்சியினர் வசம் சிக்கிக்கொண்டு விடுமென்று ஒரு வதந்தி.

24 சிந்து மந்திரிச் சபையிலுள்ள இரண்டு ஹிந்து மந்திரிகளும் ராஜீநாமா செய்து விட்டார்கள்.

இன்று மகாத்மா காந்தி, அலாகாபாத்தில் மௌலானா அஸாத், சர்தார் படேல், திரு பாலினி முதலியோருடன் கலந்து பேசினார்.

ஜெர்மனியின் ஜெக்கோ ஸ்லோவேகிய ஆக்ரமிப்பை அமெரிக்கா கண்டிக்கிறது.

25 இந்தியா அரசாங்கத்து வரவு செலவு மசோதாவை, இந்தியா சட்ட சபை நிராகரித்து விட்டது.

26 முஸோலினி, டூனிஸ், ஜிபூடி, சூயஸ் கால்வாய் ஆகிய மூன்றும் இத்தலிக்குத் தேவையென்று கூறினார்.

27 போலந்திலுள்ள புரோம் பெர்க் என்ற நகரத்தில் போலிஷ்காரர்களும், ஜெர்மானியர்களும் கை கலந்த சண்டை செய்தனர்.

28 மாட்ரிட் நகரம், இன்று பிராங்கோ படைகளுக்குப் பணிந்து விட்டது. ஹிட்லரும் முஸோலினியும், பிராங்கோவைப் பாராட்டித் தந்தி கொடுக்கிறார்கள்.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ஞூ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறுமல் மலர்வது.

வருஷ சந்தா:

உள் நாடு :	ரூ. 4-0-0
பர்மா :	ரூ. 4-8-0
வெளி நாடு :	ரூ. 6-0-0

தனிப் பிரதி அணு ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது

பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது

கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

‘மணிக்கொடி’

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

			வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	....	....	3—0—0	0—2—0
வெளிநாடு	....	....	4—8—0	0—4—0

மானேஜர்:— ‘மணிக்கொடி’ ஆபீஸ்,

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதறாஸ்.

பெல்போன் கிராமபோன்கள்
பெல்டோன் ஹார்மோனியங்களே
வேண்டுமென்று கேளுங்கள்.

பெல்போன் கிராமபோன்களில், டோன் சேம்பர், சவுண்ட் பாக்ஸ் முதலியவை, தாமே இயங்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

எங்களிடம் எல்லாப் பாஷைகளிலும் கிராமபோன் ரிகார்டுகள் இருக்கின்றன. பிலிம், செட் பிளேட்டுகளும் கல்கத்தா விலையில் கிடைக்கும்.

எல்லாச் சங்கீதக்கருவிகளையும் நாங்கள் நேரே வரவழைக்கிறோம்.

உயர்ந்த ரக பிடில்கள் எங்களிடம் இருக்கின்றன. பிடிலே சங்கீத அரசன்.

SEN BROTHERS & Co.

சென் பிரதர்ஸ், அண்ட் கோ, 338, டல்ஹவுஸி தெரு, இரங்கூன்.

வேண்டுகோள்

நமது 'ஜோதி' பத்திரிகைக்கு சந்தா சேர்ப்பதற்குச் சுற்றுப் பிரயாணப் பிரதிநிதியாக, திருவாளர். சுப. சோலையப்பன் அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தற்பொழுது அப்பர் பர்மாவில் (Upper Burma) சுற்றுப் பிரயாணஞ் செய்வதால், பர்மா வாழ் தமிழன்பர்கள் அனைவரும் அவருக்கு எல்லா ஆதரவுகளும் கொடுத்து உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31-வது வீதி, இரங்கூன்.

உங்கள் அதிருஷ்டம்

காந்தி ஜோசியரால்
விவரிக்கப்படுகிறது.

எல்லாம் தலைவிதி என்று ஏமாற வேண்டாம். உங்களது எதிர் கால பலனை அறிந்து அதின்படி நடப்பதால் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைய முடியும். மானிட வாழ்க்கைக்கு சோதிடம் இன்றியமையாததாகும். நம்மால் எழுதப்படும் இப்பலன்கள் வாழ்க்கைக்கு வழி காட்டியாக இருக்கும். ஆரோக்கியம், குடும்பம், வருமானம் அல்லது நஷ்டம், தொழில் வழி, பிரயாணம், பந்து, மித்திரர், விரோதி, வேஷக்காரர், அதிகாரி இவர்களினால் ஏற்படும் சம்பவங்கள், காதல் லாடிரீ ரேஸ் எதிர் பாராத லாபம் அதிருஷ்ட துரதிருஷ்ட நாட்கள் மற்றும் பல முக்கிய விஷயங்களையும் மாதவாரி எழுதி அனுப்புகிறோம். சிரம பலன் ஏதாவது ஏற்படுமானால் அதற்கான படி பரிகாரமும் இதில் எழுதப்படும்.

சார்ஜ் விவரம்:—ஒரு வருஷப் பலன் மாதவாரி எழுத ரூ 3-0-0
ஒரு வருஷப் பலன் வாராந்திரமாக ரூ 10-0-0
ஆருடம் 5 கேள்விகளுக்குபதில் ரூ 1-0-0
வி. பி, தபால் சிலவு ரூ 0-6-0

குறிப்பு:—ஜாதக நகல் அல்லது ஜனன கால விவரம் இது தெரியாதவர்கள், முழுப் பெயர், கடிதம் எழுதும் போதுள்ள நேரம், சுமார் வயது தொழில் இவைகளை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பிரபல தேசிய தமிழ் தினசரி. சுதேசமித்திரன் 30–1–37ல் எழுதுவதாவது:—

"காந்தி ஜோஸ்யர் என அழைக்கப்பட்டுவரும் திருத்தணிகை ஹநுமத் உபாசி ஸ்ரீமான் வி. கே. சடகோபாச்சாரியாரை, மித்திரன் நேயர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. சென்ற 15 வருஷங்களாக அவரது ஜோதிஷப் புலமைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு மகாத்மா காந்தியின் விடுதலை தினத்தைப்பற்றிச் சரியாக ஜோஸ்யம் கூறியதிலிருந்து மேற்படியாரின் புகழ் எங்கும் பரவ வாரம்பித்தது. இப்பொழுது மேற்படி புகழ் உலகெங்கும் வியாபிக்கக்கூடிய நிகழ்ச்சி நேரிட்டுள்ளது. சமீபத்தில் அமெரிக்காவில் பிரஸிடெண்ட் தேர்தல் நடந்ததல்லவா? அதில் ரூஸ்வெல்ட் ஜெயமடைவார் என்று ஸ்ரீமான் ஆச்சாரியார் ஜோஸ்யம் கூறியது பலித்து விட்டது. இந்த நிகழ்ச்சி ஸ்ரீமான் சடகோபாச்சாரியாரின் அபார ஜோதிஷத் திறமையை நன்கு நிதர்சனமாக்குகிறது. தனி நபர்களுக்கு பலன்கள் கூறுவதில் ஏற்கனவே புகழுடன் விளங்கும் ஸ்ரீமான் ஆச்சாரியார் இப்போது உலகப் பிரச்னைகளிலும் தமது ஜோதிஷ ஞானத்தை ஈடுபடுத்தி வெற்றியைக் கண்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்."

ஹநுமத் உபாஸி, வி. கே. சடகோபாச்சாரியார்,

ஹநுமான் ஜோதிஷ ஆச்ரமம்,

திருத்தணி S. இந்தியா.

கலைமகள்

ஓர் உயர்ந்த மாதப் பத்திரிகை

(1932-ம் ௵ ஆரம்பிக்கப்பட்டது)

தமிழ் நாட்டிலுள்ள சிறந்த அறிவாளிகளுடைய கட்டுரைகளோடு வெளி வருவது. அழகிய சித்திரங்கள், இனிய கட்டுரைகள், சுவையுள்ள கதைகள், சிறந்த தொடர் கதை, விஞ்ஞான சரித்திரம் சம்பந்தமான விஷயங்கள் முதலிய பல அருமையான பகுதிகளோடு உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறுமல் மலர்வது.

வருஷ சந்தா :

உள் நாடு : ரூ. 4-0-0
பர்மா : ரூ. 4-8-0
வெளி நாடு : ரூ. 6-0-0

தனிப் பிரதி அணா ஆறு.

கிடைக்கும் விலாசம் :—

மானேஜர், கலைமகள் காரியாலயம்,

மயிலாப்பூர் : : : : மதராஸ்.



சுத்தமானது!
கலப்பில்லாதது!!

போஜனத்தை
சுவைக்கக்கூடியது
பசுவும், கன்றும்
மார்க்குள்ள

அசல்

“போஜன நேசனே”

ஷை நெய்யானது கோயமுத்தூரில் புதிய வெண்ணையைக்கொண்டு நீடித்த அநுபோகஸ்தர்களால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு வாரமும் ஏராளமாக தருவித்து விற்று வருகிறோம்.

அனேக பெரிய கல்யாணங்களுக்கும், டின்னர்களுக்கும், சப்ளை செய்து கியாதிபெற்றிருக்கிறோம். எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

ஜில்லாக்களில் விற்பனைக்கு ஏஜண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு :— **ராஜா ஸ்டோர்ஸ்,**

நே. **101-51**வது தெரு, கிழக்கு ரங்கூன்.

ஜோதி ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா.

எழுதிய புதிய நூல்:

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—6,

கமால் அத்தா துர்க்.

விலை ரூபா 1 8 0

பிரபஞ்ச ஜோதி பிரசுரம்—7.

பாலஸ்தீனம்.

விலை 8 அணா.

பிரபஞ்ச ஜோதி வரிசையில்.

சுடர்		ரூ. அ. ப.
1—	முஸோலினி	1—4—0
2—	அபிசீனிய சக்ரவர்த்தி	0—8—0
3—	ஹிட்லர்	2—4—0
4—	ஸ்பெயின் குழப்பம்	0—10—0
5—	ஜெக்கோ ஸ்லோவேகியா	1—0—0

கிடைக்கும் இடங்கள் :—

1. சென்னை ஹிக்கின் பாதம் ரேயில்வே புக்ஸ்டால்கள்
2. பாரதி பிக்சர் பாலேஸ், காரைக்குடி.
3. சுதேசி நிலையம். 38, மார்க்கெட் ஸ்ட்ரீட் சிங்கப்பூர்.
4. P. சிவகுரு பிரதர்ஸ், தபால் பெட்டி 225, கோலாலம்பூர்.
5. வேதம் கம்பெனி, மோகல் தெருவு, இரங்கூன்.

பாரத பந்தர், புத்தக வியாபாரிகள்,
47, 31வது வீதி. இரங்கூன்.

அமிர்தாஞ்ஜனம்.

எல்லாவிதமான
நோய்களுக்கும்
கைகண்ட சஞ்சீவி

தலை வலி
நெஞ்சு வலி
முதுகு வலி
பல் நோய்

கைகா லுளைச்சல்
கை கால் குளிர்ச்சி
வாய்வு நோய்கள்
பக்ஷவாதம்
செவி நோய்
வெட்டுக்காயம்
வயிறு உப்புசம்
இருமல் ஜ்வரம்

எல்லா வியாதிகளையும் கண்டிக்கும்

எங்கும் கிடைக்கும்.

படை மருந்து

எந்தவிதமான படையா யிருந்தாலும் ஆச்சரியப் படத் தக்க விதமாய் குணப்படுத்த வல்லது. மூன்று கலரில் லேபில் உள்ள "சூரியன்" மார்க் மருந்தைப் பார்த்து வாங்கவும்.

பற் பொடி

பல் சம்பந்தமான எல்லாவித வியாதிகளையும் குணப் படுத்திப் பல்லை பளிங்கென மிளிரச் செய்து, வாய் நாற்றத்தையும் பல் வலியையும் போக்கி மகிழச் செய்வது.

சிரங்கு மருந்து

சரீரத்தைக் கெடுக்கும் சோரி சிரங்கு, மேகநீர் சம்பந்த மான ஆறாத புண் முதலிய கொடிய வியாதிகளை குணப்படுத்துவதில் நிகரற்றது.

போலி ஏமாறாதீர்கள்!

குறிப்பு:--வியாபாரிகள் சிலர் வேறு மருந்துகளைக் கொண்டு அமிர்தாஞ்சனம் என்று விற்று வருகிறார்கள். ஆகையால் மோசம் போகாமல் அசல் அமிர்தாஞ்சனம் ஐந்து பாஷை அடங்கிய சீட்டையும் டப்பியையும் பார்த்து வாங்கி லாபம், குணமடையவேண்டுமென எச்சரிக்கை செய்கிறோம்.

அமிர்தாஞ்ஜனம் லிமிடெட்,

மதராஸ், பாம்பே, கல்கத்தா,

பர்மா பிரதிநிதிகள்:—

கே. எஸ். என். மூர்த்தி,

94, மோகல் வீதி, இரங்கூன்.

அழகிய கம்ஸ் பித்தான்கள்.

எங்கிரேவிங் நிக்கல் எனுமலில் தேசீயக்கொடி, மகாத்மா போட்டோ, ராட்டினம், வந்தேமாதரம், போட்டும் தமிழ் இங்கிலீஷில் பெயர்போட்டும் அன்பர்கள் விருப்பத்தின்படி பலகலரில் செய்து கொடுக்கப்பெறும்.

அதேமாதிரியில் இங்கிலீஷ் எழுத்துப் பித்தான்களும், தலைவர்கள் பாட்ஜூ (மெடல்) களும், காங்கிரஸ் கொடி பாட்ஜூம், ரெடிமேடாக கிடைக்கும்.

பொது ஸ்தாபனங்களுக்கு நூற்றுக்கணக்கில் சகாயமான விலை.

எங்களிடம் தேசீய நூல்கள் பலவும் கிடைக்கும்.

ராம. வீரப்பன்,

சுதேசி நிலையம்,

38, மார்க்கட் ஸ்திரீட், சிங்கப்பூர்.

கருத்து நிரம்பிய—ருசிகரமான கதைகள் நிறைந்தது
பல பாஷைகளிலும் உள்ள சிறந்த கதைகளைத் தமிழில் திரட்டித் தருவது
கதை படிப்பது வீண் பொழுது போக்கு என்று கருதும் அறிஞர்களும் விரும்பிப்படிக்கும் கதை நிறைந்திருப்பது

எது?

அதுதான்

‘மணிக் கொடி’

மாதம் இருமுறை (இங்கிலீஷ் மாதம், 1, 15தேதிகளில்) வெளிவருவது

			வருஷச் சந்தா	தனிப்பிரதி
உள்நாடு	....	....	3—0—0	0—2—0
வெளிநாடு	....	....	4—8—0	0—4—0

மானேஜர்:— **‘மணிக் கொடி’ ஆபீஸ்,**

55, அரமனைக்காரத் தெரு, ஜி. டி. மதருஸ்.

விலையோ சரசம்!
வாடையோ அதி உன்னதம்!!
பெயர் பெற்றதோ அதிகம்!!!

அது யாது?

மேல் நாட்டு பிரன்ச் சென்டுகளில், வாடையிலும், பெயராலும், விலையிலும், சிறு பிள்ளைகள் முதல் வயோதிகர் வரை நன்குணர்ந்த செட்டியார் மயில் மார்க்கு சென்டுகளை உபயோகித்து ஆனந்தமடையுங்கள்.

ஒரு முறை பரீக்ஷியுங்கள்.

குறிப்பு:—மயில் மார்க்கும் செட்டியார் என்ற பெயரையும் கவனித்து வாங்கக் கேட்டுக் கொள்கிறோம்.

சிங்கப்பூர், பினாங், முதலிய மலாய் பிரதேசங்களுக்கும் பர்மாவைச் சேர்ந்த ஜில்லாக்களிலும் தக்க திறமையுள்ள ஏஜண்டுகள் தேவை தக்க கமிஷன் கொடுக்கப்படும். விபரத்துக்கு எழுதவும்.

பர்மா சோல் ஏஜண்டு:—

பெங்களூர் அகர்பத்தி வாசனை சாலை,

119 மொகல் வீதி, இரங்கூன்.

நேர்த்தியான பைண்ட்! **அழகான அட்டை!**

"ஜோதி"

"ஜோதி"யின் முதல் வருஷத்துப்
பன்னிரண்டு இதழ்களும்
இரண்டு வால்யூம்களாக பைண்ட் செய்யப்பட்டு
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

விலை ரூபா 4-8-0

தபாற் செலவு

பர்மாவுக்கு 1—6—0 இந்தியாவுக்கு 1—8—0
மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு ... 2—0—0

தபாற் செலவையும் சேர்த்து மணியார்டரில்
முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி, லிமிடெட்,
47, 31-வது வீதி, இரங்கோன்.

ஜுபிட்டர்

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்

சொத்தின் மொத்த மதிப்பு ரூபாய் **65,00,000**

தொழில்கள்;—

உயிர், நெருப்பு, கப்பல், மோட்டார் வண்டிகளும் இதர வித மான விபத்துக்களைப்பற்றிய தொழில் களும் செய்யப் படுகின்றன.

கிளை ஆபீஸ்:—

644, மெர்ச்செண்ட் வீதி,

ரங்கூன்.

ஜில்லாக்கள் தோறும் செல்வாக்குள்ள
செட்டியார் ஏஜண்டுகள் தேவை

கலப்பற்றது

அறுசுவை உண்டிக்கு அவசியமானது

PURE ROSE BRAND ANNASUDHI
LINGAM & Co. COIMBATORE

ரோஜா மார்க்கு

அசல் அன்ன சுத்தி

சுத்தம் புதிய வெண்ணெயில் உத்திர வாதத்துடன் கைபடாமல் தயாரிக்கப்பட்டது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

நிகரற்றது

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

பர்மா சோல் ஏஜெண்டுகள் :—

வேதம் அண் கோ.,

89, முகல் வீதி, ரங்கூன்.